janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஏப்ரல் 17 - 23 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 02




## இங்கே எப்போது?



நமது அண்டை நாடான இலங்கை வெகு தொலைவில் இல்லை. ராமேஸ்வரம் அல்லது கோடியக்கரையில் இருந்து இருபது கல் தொலைவில்தான் உள்ளது. கோடியக்கரையில் இருந்து >>>

ப 02

## சீரழிவின் விளம்பில் இந்தியா!



இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி அங்கு ஒரு போராட்ட ஆழிப்பேரலையை ஏற்படுத்தியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு மக்களிடம் மாபெரும் >>>

ப 03

## தமிழகத்தில் மார்க்சியப்...



“1844 கையேடுகளுக்கு” அதிக முக்கியத்துவம் கொடுத்து அந்நியமயமாதலை உலகளாவிய ஒன்றாகக் கருதுதல், பிரதிபலித்தல் கோட்பாட்டை நிராகரித்தல். இவை புதிய இடதுசாரிகளின் இயக்கத்தில் பொதுவாகக் காணப்பட்ட கூறுகள் ஆகும். >>>

ப 05



## மத்திய பல்கலைக்கழக

# பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வேண்டும்

**மத்திய பல்கலைக் கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்ய மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம் தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.**

இந்தத் தீர்மானத்துக்கு பாஜகவை தவிர மற்ற கட்சிகள் அனைத்தும் ஆதரவு தெரிவித்தன. தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த பாஜக உறுப்பினர்கள், பேரவை யிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

## ● பேரவையில் தீர்மானம்

சட்டப் பேரவையில் திங்கள் கிழமை கேள்வி நேரம் முடிந்ததும், இந்த தீர்மானத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்து பேசியதாவது:

மாநிலத்தின் கல்வி உரிமை மீது மத்திய அரசின் தாக்குதல் தொடர்கிறது. பல்கலை. மானியக் குழு நிதியுதவியுடன் இயங்கும் மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலை உள்ளிட்ட பல்வேறு படிப்பு களுக்கான சேர்க்கைகளுக்கு பொது நுழைவுத் தேர்வு என அறி வித்து, நிகழ் கல்வியாண்டு முதல் செயல்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது.

இந்த நுழைவுத் தேர்வு மதிப் பெண்களை மாநில பல்கலைக் கழகங்கள், நிகர்நிலைப் பல் கலைக்கழகங்கள், தனியார் பல் கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள்கூட இளநிலை படிப் புகளின் மாணவர் சேர்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என பீடிகை போட்டு ஒரு அறிவிப்பை பல்கலை. மானியக் குழு வெளி யிட்டுள்ளது. இதை எதிர்த்து தீர்மானம் முன்மொழியப்படுகிறது என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தீர்மான விவரம்: மத்திய பல் கலைக்கழகங்களில் இள நிலை உள்ளிட்ட பல்வேறு படிப்புக ளுக்கான சேர்க்கைகள் தேசிய தேர்வு முகமை நடத்தும் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு மூலம் மட்டுமே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு (என்சிஇஆர்டி) பாடத் திட் டத்தை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு நுழைவுத் தேர்வும் நாடு முழுவதுமுள்ள பல்வேறு மாநிலப் பாடத் திட்டங்களில் படித்த மாண வர்கள் அனைவருக்கும் சம மான வாய்ப்பை வழங்கிடாது என சட்டப்பேரவை கருதுகிறது. பெரும் பாலான மாநிலங்களில் மொத்த மாணவர்களில் 80 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் மாநில பாடத் திட் டங்களில் பயின்று வருபவர்கள். அவர்களில் பெரும்பாலானோர் விளிம்பு நிலையைச் சேர்ந்தவர்கள்.

நீட் தேர்வு போன்றது: எனவே, என்சிஇஆர்டி பாடத்திட்ட அடிப்படை யிலான நுழைவுத் தேர்வு, மத்திய பல்கலைக்கழகங்களில் சேருவதற்கு தகுதியான பெரும்பான்மையின ருக்கு பாதகமான நிலையை ஏற்படுத்தும். இந்த சூழ்நிலை நம் நாட்டிலுள்ள பல்வேறு மத் தியப் பல்கலைக்கழகங்கள், அவற் றின் இணைப்புக் கல்லூரி களில் தமிழகத்தைச் சேர்ந்த மாண வர்களின் சேர்க்கை எண்ணிக் கையை வெகுவாக குறைக்கும்.

இப்போது அறிவிக்கப்பட்டுள்ள பொது நுழைவுத் தேர்வும், நீட் தேர்வைப் போன்றே நாடு முழுவதும் உள்ள பல்வேறு பள்ளிக் கல்வி முறைகளை ஓரங்கட்டி, பள்ளிகளில் நீண்ட காலக் கற்றல் முறைகளை வெகுவாகக் குறைத்து மதிப்பிட வழிவகுக்கும். மாணவர்கள் தங் களது நுழைவுத் தேர்வு மதிப் பெண்களை அதிகரிக்க பயிற்சி மையங்களை சார்ந்திருக்கும் ஒரு சூழலை ஏற்படுத்தி விடும் என்பதில் சந்தேகமில்லை.

மாணவர்களுக்கான பயிற்சி மையங்கள் புற்றீசல் போன்று வளர மட்டுமே இது வழிவகுக்கும் என்ற அச்சம் மக்களிடையே எழுந்துள்ளது. மாநில அரசின் உரிமையை நிலைநாட்டும் வகையில், பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வை ரத்து செய்திட மத்திய அரசை சட்டப்பேரவை வலியுறுத்துகிறது என முதல்வர் மு.க.ஸ்டாலின் முன் மொழிந்த தீர்மானத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் மீது டி.ராமச்சந்திரன் (இ.கம்யூனிஸ்ட்), வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமை கட்சி), ஈ.ஆர்.ஈஸ்வரன் (கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி), ஜவா ஹிருல்லா (மனிதநேய மக்கள் கட்சி), சதன்திருமலைக் குமார் (மதி முக), சின்னதுரை (மார்க்சிஸ்ட்), சிந்தனைச்செல்வன் (விசிக), ஜி.கே. மணி (பாமக), செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்), கே.பி.அன்பழகன் (அதிமுக) ஆகியோர் ஆதரவு தெரிவித்துப் பேசினர். பின்னர், குரல் வாக்கெடுப்பு மூலமாக தீர்மானம் நிறைவேறியது.

## ● பாஜக வெளிநடப்பு

பாஜக வெளிநடப்பு: முன்னதாக, முதல் வர் மு.க.ஸ்டாலின் முன் மொழிந்த தீர்மானத்துக்கு பாஜக எதிர்ப்பு தெரிவித்தது. மத்திய பல்கலைக் கழகத்துக்கு மட்டுமே நுழைவுத் தேர்வு கொண்டு வரப் பட்டுள்ளது எனவும், வேறு மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவிக்க வில்லை என்றும் பேரவை பாஜக குழுத் தலைவர் நயினார் நாகேந் திரன் தெரிவித்தார். இதற்கு அமைச்சர் க.பொன்முடி பதில ளித்தார். இதைத் தொடர்ந்து தீர்மா னத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பாஜக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

## எதிரும் புதிரும்

**இந்தி திணிப்பை எக்காரணம் கொண்டும் தமிழக பா.ஜ.க. அனுமதிக்காது – அண்ணாமலை**



அமித்ஷாவை பற்றி தெரிந்துதான் பேசுறியா அண்ணாமலை !

ஜனசக்தி

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ.500/- |
| 2 ஆண்டுச் சந்தா | ரூ.1000/- |
| ஆயுள் சந்தா | ரூ.5000/- |

Janasakthi Trust
A/c No 108302000009999
IFSC No: IOBA 0001083
Indian overseas bank
Mylapore branch
Chennai - 600 004

ஜனசக்தி
பாவை பிரிண்டர்ஸ் முதல் மாடி, 142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 600014
✆: 9444331138

## கட்சிக் கடிதம்



# இங்கே எப்போது?

**பேரன்புமிக்க தோழர்களே,**

**நமது அண்டை நாடான இலங்கை வெகு தொலைவில் இல்லை. ராமேஸ்வரம் அல்லது கோடியக்கரையில் இருந்து இருபது கல் தொலைவில்தான் உள்ளது.**

கோடியக்கரையில் இருந்து விசைப்படகு மூலம் இலங்கையின் காங்கேசன்துறை முகத்தை இருபது அல்லது முப்பது நிமிடங்களில் சென்றடைய முடியும்.

இவ்வளவு மிக அருகில் உள்ள இலங்கை நாட்டில் கடந்த பல நாட்களாக என்ன நடந்து வருகின்றது என்பதனை, தொலைக்காட்சி மற்றும் நாளேடுகள் வாயிலாக தினந்தோறும் அறிந்து வருகின்றோம்.

ராஜபக்சே குடும்பத்தின் தலைமையில் அங்கம் பெற்றுள்ள அமைச்சர்கள் பலரும் ராஜினாமா செய்து விட்டு ஓடி ஒளிகிறார்கள். இவர்களுக்கு பதிலாக நியமனம் செய்யப்படும் அமைச்சர்கள் பதவி ஏற்கிறார்கள். பின்னர் ராஜினாமா செய்கின்றார்கள். நிதி அமைச்சர் உள்பட பல அமைச்சர்கள் ராஜினாமா செய்துள்ளார்கள்.

அமைச்சர்கள் மட்டுமல்ல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ராஜினாமா செய்து பதவியைத் துறந்த வண்ணம் உள்ளார்கள்.

என்ன காரணம்? இலங்கை முழுவதும் மக்களின் பேரெழுச்சி மிக்க போராட்டங்கள் அரசு அலுவலகங்களுக்கு எதிரில் மட்டுமல்ல, ராஜபக்ச அரசாங்கத்தின் அலுவலகங்களுக்கு உள்ளே புகுந்து போராட்டம் நடத்தி வருகின்றார்கள்.

கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு மக்களின் போராட்டம் மிகப் பெரும் எழுச்சியாக, தன்னிச்சையாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது.

ஊரடங்கு சட்டம் போட்டு அடக்கு முறைகளின் மூலம் மக்களின் ஆவேசமிக்க எழுச்சியை, பேரெழுச்சியை அடக்க, ஒடுக்க நினைத்த அரசு தோற்றுப்போய் மக்களிடம் மண்டியிட்டு நிற்கின்றது.

கல்வி நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு விட்டன. மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் சீரழிந்து விட்டது.

சிங்களர் – தமிழர் என்ற வேறுபாடுகள் எதுவும் இப்போது இல்லை–

பேதங்கள் அனைத்தையும் தூக்கி குப்பையில் வீசி எறிந்து விட்டனர்.

தமிழர்களுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டி தங்களின் ஆட்சியை தக்க வைத்துக் கொண்டவர்கள். இன்று ஏதும் செய்ய இயலாத நிலையில் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

சிங்களர் – தமிழர் வேறுபாடு இன்றி ஒன்றுபட்டு போர் புரிகின்றனர்.

சிங்களர் வாழ்க, தமிழர்கள் ஒழிக முழக்கமும் – தமிழர்கள் வாழ்க, சிங்களர்கள் ஒழிக முழக்கமும் தற்போது இல்லை.

சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஒரு சேர கரம் கோர்த்து ராஜபக்சே அரசுக்கு எதிராக போர் முழக்கம் செய்வதே இன்று நடைபெற்று வருகின்றது.

இவர்களை ஒருங்கிணைத்தது எது? ஒன்று படுத்தியது எது? தொடர் போராட்டங்கள் தொடர்வது எதனால்?

ராணுவம் – போலீஸ் இவைகளால் ஒன்றுபட்ட போராட்டத்தை நசுக்க முடியவில்லை!

துப்பாக்கியும், தோட்டாக்களும் மக்களிடம் மண்டியிடக் காரணம் என்ன?

இலங்கை அரசு பின்பற்றிய தவறான பொருளாதாரக் கொள்கையால் கடுமையான, மிக மிக கடுமையான பொருளாதார நெருக்கடி இலங்கையில் முன்னெப்போதும் கண்டிராத பெரும் நெருக்கடி.

இதன் விளைவாக அத்தியாவசிய பண்டங்கள் உள்பட அனைத்து பொருட்களின் விலைகளும் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்து விட்டன.

ஒரு கிலோ அரிசி ரூ.250, ஒரு கிலோ சீனி ரூ.250, கோதுமை பாக்கெட் ரூ.250, தேங்காய் எண்ணெய் லிட்டர் ரூ.1000, காய்கறிகளின் விலை கிலோ ரூ.500 முதல் 800 வரை.

பிரட் பாக்கெட் ரூ.200 முதல் 300 வரை. இவ்வாறு தாறுமாறாக விலை உயர்ந்தது மட்டுமல்ல – மிகக் கடுமையான தட்டுப்பாடும் தலைவிரித்து ஆடுகின்றது.

விலை கொடுத்து மக்களால் எப்படி வாங்க முடியும்? மின்சாரம் இல்லை.

இவைகளை எல்லாம் எதிர்த்துதான் இலங்கையில் மக்கள் போராடுகிறார்கள்!

விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டம் நாட்டையே நிலைகுலையச் செய்துள்ளது.

ராஜபக்சே அரசு இனியும் ஆட்சிக் கட்டிலை அலங்கரிக்க முடியாத நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் போராட்டம் இந்தியாவை எட்ட வெகு காலம் ஆகாது.

பெட்ரோல் – டீசல் விலை உயர்ந்து கொண்டே உள்ளது. சமையல் எரிவாயு விலை உயர்கின்றது.

மருந்து மாத்திரைகள் பத்து சதம் விலை அதிகரிப்பு, சுங்க கட்டணம் ரூ.10 முதல் 40 வரை உயர்வு.

**அத்தியாவசிய பண்டங்கள் மட்டுமல்ல, சிமெண்ட், இரும்பு, ஆடைகள் என அனைத்தும் விண்ணை முட்டும் விலை உயர்வு. விலை உயர்வால் நாட்டில் வாழும் மக்கள் கொடும் துன்பத்திற்கும், துயரத்திற்கும் உள்ளாகி உள்ளனர்.**

**மக்களின் துயரம் குறித்து கிஞ்சித்தும் கவலை கொள்ளாத கொடிய மோடியின் ஆட்சி மேலும் மக்களை துன்பத்தில், துயரத்தில் ஆழ்த்தி வருகின்றது.**

**இலங்கை மக்கள் இன வேறுபாடுகளை எதிர்த்து ஒன்றுபட்டு, போர் புரிவது போல் இந்தியாவில் போராட்டம் எப்போது?**

பெட்ரோல் விலை உயர்வால் தமிழ்நாட்டில் மட்டும் இரண்டரை கோடி இருசக்கர வாகனங்களைப் பயன்படுத்துவோர் பாதிக்கப்படுகின்றனர்.

லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்.

டீசல் விலை உயர்வின் காரணமாக அரசு போக்குவரத்துக் கழகம் கடும் நட்டத்திற்கு உள்ளாகி உள்ளது.

தனியார் பேருந்து மற்றும் ஆம்னி பேருந்து முதலாளிகள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

இத்தகைய நெருக்கடிகள் ஒன்றுபட்ட போராட்டமாக வெடித்துக் கிளம்ப வெகுநாட்கள் ஆகாது!

இதனை புரிந்து கொண்ட பா.ஜ.க.வின் மோடி அரசு மத மோதலை தீவிரப்படுத்துகிறது.

மொழிப்போரை தூண்டுகின்றது.

மக்களை திசை மாற்றி தங்களின் ஆட்சிக்கு ஏற்படப்போகும் நெருக்கடியை சமாளிக்க முயல்கின்றது.

மக்கள் ஏமாளிகள் அல்ல– மோடி அரசின் வஞ்சகத்தை, சூழ்ச்சியை புரிந்து கொள்ளாமல் இல்லை.

தங்களின் துன்ப துயரங்களுக்கு மதம் காரணம் அல்ல, சாதி காரணம் அல்ல – கேடுகெட்ட மோடி அரசு என்பதனை புரிந்து கொண்டுள்ளார்கள்.

சாதி, மத வேறுபாடுகளை நிராகரித்து மோடியின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக ஒன்றுபட்டு போர்புரிய ஆயத்தமாகி வருகிறார்கள்.

விவசாயிகளின் ஒன்றுபட்ட போராட்டம் மாபெரும் வெற்றி பெற்றது. மோடியின் அரசு விவசாயிகளிடத்தில் மண்டியிட்டு மன்னிப்பு கோரியது!

மார்ச் 28, 29 ஆகிய இரு நாட்களில் மோடி அரசுக்கு எதிராக 25 கோடி உழைப்பாளி மக்கள் ஒன்று திரண்டு போராடியதைக் கண்டு நாடே வியந்தது.

இத்தகைய போராட்டங்கள் தொடரும், தொடரும்.

மக்களை அணிதிரட்ட ஆயத்தமாகுங்கள் தோழர்களே!

நமது அமைப்பு நிலை மாநாடுகளில் திட்டமிடுங்கள், ஒவ்வொரு கட்சிக் கிளையிலும், மக்களை அணிதிரட்ட ஆயத்தமாகுங்கள்.

வர்க்க, வெகுஜன அமைப்புகளை கிளைகள் தோறும் உருவாக்குவோம்.

வர்க்க, வெகுமக்கள் அமைப்புகளை பலப்படுத்துங்கள்.

அமைப்பாக அணிதிரள செய்திடுவீர்.

இலங்கையில் நடக்கும் போர், அரசுக்கு எதிரான மாபெரும் போர், நம் நாட்டில் எப்போது நடைபெறும் என்று எல்லோரும் எதிர்பார்க்கின்றார்கள்!


மோடியின் கொடுங்கோல் ஆட்சியை அகற்ற இலங்கை மக்கள் நமக்கு பாடம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அங்கே நடப்பது இங்கே எப்போது?

**மீண்டும் சந்திப்போம், வணக்கம்**

**தோழமைமிக்க,**

**இரா.முத்தரசன்**




# இலங்கை போல சீரழிவின் விளிம்பில் இந்தியா!



த.லெனின்

**இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி அங்கு ஒரு போராட்ட ஆழிப்பேரலையை ஏற்படுத்தியுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு மக்களிடம் மாபெரும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.**

சிங்கள பெரும்பான்மை பேரினவாத, வகுப்புவாத அரசியலை முன்னெடுத்து அங்கே பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமிழர்களை இன அழிப்புக்கு உள்ளாக்கியவர் ராஜபக்சே.

இந்த இன, மத வெறி அலையில் அமோக ஆதரவு பெற்று வெற்றியும் பெற்றார். அதிகாரத்தில் அனைத்துப் பொறுப்புகளிலும் அவரது குடும்பத்தினரே அமைச்சர்களாக, உயர் அதிகாரிகளாக பதவியில் இருந்தனர்.

மக்கள் எழுச்சிக்குப் பயந்து அவசர கால சட்டத்தை அங்கு அமல்படுத்தினார். போராட்ட எழுச்சியைக் கண்ட எதிர்க்கட்சியினர் அம்மக்கள் திரளில் இணைந்த போது, அவர்களை மக்கள் ஏற்க மறுத்ததுடன், தேசிய கொடியோடுதான் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆக, உலகமய, தனியார்மய, தாராளமய அமலாக்கத்திற்கு ஆதரவான அரசியல் கட்சிகளை எதிர்த்தும், நாட்டின் சீரழிவுக்கு காரணமாக இந்த நாசகர கொள்கைகளையும் தலைவிரித்தாடும் ஊழலையும் ஒழித்திடவும் மக்கள் தனித்த பாதையை முன்னெடுத்து செல்கின்றனர்.

ராஜபக்சே குடும்பத்தை சார்ந்த அமைச்சர்கள் நாமல் ராஜபக்சே, பசில் ராஜபக்சே, சனல் ராஜபக்சே, சசீந்திர ராஜபக்சே ஆகியோர் கூட்டாக பதவி விலகி உள்ளனர்.

உலகத் தலைவர்களின் ரகசியமான சொத்து விபரங்களை அம்பலப்படுத்திய புலனாய்வு பண்டோரா பேப்பர்ஸ் ஆவணத்தில், குற்றவாளியாக இடம் பெற்றுள்ள ராஜபக்சே குடும்ப உறவினரான நிருபமா ராஜபக்சே, அவரது கணவர் திருக்குமார் நடேசனும் ரகசியமாக நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர்.

ராஜபக்சேவின் நெருங்கி நண்பரும், அவன்கார்ச் நிறுவத்தின் தலைமைப் பொறுப்பில் இருப்பவருமான நிஸ்சங்க சேனாதிபதியும் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார். ஊழல்வாதியான அவர் தப்பிச் செல்ல ஏதுவாக விமான நிலையத்தின் கேமராக்கள் நிறுத்திவைக்கப்பட்டு வழி அனுப்பப்பட்டுள்ளார்.

பல அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் தத்தமது குடும்பத்தினரோடு ஐந்து நட்சத்திர விடுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

தமிழர் பகுதியில் முன்பு இனப்படுகொலை நடந்த போது, வெள்ளை வேன் கடத்தல்கள் பிரசித்தம். அதுபோலவே இப்போது, பதிவு எண் இல்லாத மோட்டார் பைக்குளில் ஆயுதம் தாங்கிய அடியாட்கள் போராட்டம் நடக்கும் மக்கள் திரளில் புகுந்து வன்முறையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

நாடு முழுவதும் சமூக வலை தளங்களும், தகவல் தொடர்புகளும் முடக்கப்பட்டுள்ளன. பஞ்சமும், பட்டினியும், மக்களின் பரிதவிப்பும் மேலும் மேலும் அதிகரித்துள்ள நிலையில், ஜனாதிபதி மாளிகை முற்றுகையில் பொதுமக்களின் குறிப்பாக இளைஞர்களின் எண்ணிக்கை மேலும், மேலும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

தமிழர்கள் இலங்கையில் அனுபவித்து வரும் இன்னல்கள் எந்த பேரினவாதத்தால் உருவாக்கப்பட்டதோ, அந்த பேரினவாத்தை ஆதரித்த பாவத்திற்காக மக்கள் இன்றைக்கு அந்த வலியை தாங்களே உணர ஆரம்பித்துள்ளனர்.

ஈஸ்டர் குண்டு வெடிப்புகள், இலங்கை தமிழ் இஸ்லாமியர்கள் மீதான தாக்குதல்கள் மூலம் பெரும்பான்மைவாத அரசியலை கையிலெடுத்துதான் ராஜபச்சே குடும்பம் அதிகாரத்திற்கு வந்தது.

இன்று அந்த பெரும்பான்மை வாதம் மக்களின் பசியை ஆற்றவில்லை. பரிதவிப்பை அடக்கவில்லை. எனவே, இந்த நிலைமையிலிருந்து மக்கள் ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் போராட்டத்தை இணைந்தே நடத்தி வருகின்றனர்.

அடக்குமுறை எதிர்ப்பு, ஊழல் எதிர்ப்பு, ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் முன்முயற்சியில் ஊடகச் சுதந்திரம் குறித்தும் இன்று மக்கள் கருத்து கூறி வருகின்றனர்.

எனவே, இலங்கையில் பெரும் மாற்றத்திற்கான சமிக்கை தென்படுகிறது. என்ன தான் இன வெறி, வகுப்புவாத பெரும்பான்மைவாதத்தை, வெறுப்பை அரசியலாக எடுத்தாலும் மக்கள் எழுச்சியின் முன்னால் இச்சூழ்ச்சியெல்லாம் தவிடுபொடியாகிவிடும் என்பது நிரூபணமாகிறது.

இந்தியாவிலும் ஏறத்தாழ இலங்கையின் நிலையே பொருளாதாரத்தில் நிலவுகிறது. இங்கும் இந்துத்துவ பெரும்பான்மைவாத மத வெறி அரசியலையும், கவனமாக கட்டமைக்கப்படும் கலவரங்களையும் திட்டமிட்டு நிகழ்த்தி மக்களை மடைமாற்றம் செய்வதற்கான எல்லா முயற்சிகளையும் ஒன்றிய பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். அரசு தொடர்ந்து செய்து வருகிறது. நள்ளிரவில் சூரியன் உதிக்கும்நாடு நார்வே என்கிறார்கள். ஆனால், நள்ளிரவில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தும் நாடு இந்தியாவாகும்.

ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.120 ஐ தொடும் இந்த நேரத்தில் இது சராசரி இந்தியரின் தின வருமானத்தில் நான்கில் ஒருபகுதி அது என்பது அதிர்ச்சியளிக்கக்கூடிய செய்தியாகும்.

ஒரு லிட்டர் ரூ.120 பெட்ரோல் என்பது 1.58 அமெரிக்க டாலர் ஆகும். ரூ.75க்கு ஒரு அமெரிக்க டாலர் என்கிற அளவிற்கு ரூபாயின் மதிப்பு குறைந்து போன நிலையில் சிந்தித்தால் நமக்கு அதிர்ச்சி அளிக்கும். ஆனால் அதையே மக்களின் வாங்கும் சக்தியின் அடிப்படையில் சர்வதேச நிதிய (ஐ.எம்.எப்.) மதிப்பு நிர்ணயப்படி பார்த்தால் அது உள்நாட்டு உற்பத்தியோடு இணைந்து நிர்ணயிக்கப்படுகிறது.

உதாரணத்திற்கு பீசாவின் விலை ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் டாலர் கணக்கில் வரும்போது, இந்திய ரூபாயில் அதிகம். இந்தியாவில் அதே பீசா வின் விலை குறைவாக இருக்கும்.

ஒரு கிலோ உருளைக்கிழங்கின் விலை கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவில் 1.94 டாலர். அதை அப்படியே இந்திய ரூபாயில் பார்த்தால் 147 ரூபாய். இங்கு அதே மார்ச் மாதத்தில் 7 கிலோ வாங்க முடியும்.

நாடுகளுக்குஇடையேயான இந்த வேறுபாடுகளுக்கிடையேதான் மக்களின் வாங்கும் சக்திக்கு ஏற்ப சர்வதேச டாலர் பரிவர்த்தனை என்பதாகப் கணக்கிடப்படுகிறது. அதன்படி பார்த்தால் இந்த 2022ஆம் ஆண்டில் 22.60 பைசாவிற்கு ஒரு டாலர் என்று சர்வதேச நிதியத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

பெட்ரோல் விலை ஏறுகிறபோதெல்லாம் சங்கிகள் சொல்வதுபோல ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியால் வருவது அல்ல. இப்படிப் பார்க்கும்போது, உலகத்தில் அதிக விலைவைத்து விற்கும் மூன்றாவது நாடாக இந்தியா இருக்கிறது.

சூடான், லாவோஸ் போன்ற சிறிய நாடுகளுக்கு அடுத்தபடியாக 140 கோடி மக்களைக் கொண்ட நாடு வருகிறது.

**சமையல் எரிவாயு விலை நிர்ணயத்தில், உலகத்திலேயே இந்தியா தான் அதிக விலை வைத்து விற்கிறது. ஒரு லிட்டர் சமையல் எரிவாயு 3.5 சர்வதேச டாலர் என்று இந்தியாவில் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 54 நாடுகளின் விலைப்பட்டியல் கிடைக்கப் பெற்றதில் துருக்கி, பிஜி, மோல்டோவா மற்றும் உக்ரைன் போன்ற நாடுகளும் சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இதே சமையல் எரிவாயு ஒரு லிட்டர் 1 சர்வதேச டாலராக விற்பனையாகிறது.**

பெட்ரோல், டீசல் விலை ஏறுகிறபோதெல்லாம் இவற்றை ஜி.எஸ்.டி. வரம்பிற்குள் கொண்டு வந்தால் மக்களுக்கு நன்மை கிட்டும் என்று எப்போதும் சங்கிகள் வாதம் புரிந்து வருகின்றனர். ஆனால், சமையல் எரிவாயு ஜி.எஸ்.டி. வரம்பிற்குள் வந்தும் ஏன் உலக அளவில் அதிக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது?

பிரதமரின் இலவச சமையல் எரிவாயு இணைப்பு உஜ்வாலா திட்டம் பெருமையாகப் பேசப்படுகிறது. 360 ரூபாய் விற்ற சமையல் எரிவாயு விலை இன்று ரூ.1000த்தை தாண்டி விட்ட காரணத்தால் இலவச இணைப்பை பெற்றவர்களில் 92% பேர் கடந்த இரண்டு ஆண்டுகளாக பதிவு செய்து எந்த சிலிண்டர்களையும் வாங்கவில்லை. மீண்டும் விறகு அடுப்பிற்கே சென்று விட்ட கொடுமையும் நடந்து வருகிறது.

சமையல் எரிவாயு உற்பத்தி இந்தியாவிலேயே 50%க்கும் மேல் அகழ்ந்து எடுக்கப்படும் நேரத்தில் பெரும் நிறுவனங்களின் உரிமையாளர்களான அம்பானியின் லாபத்திற்காக இந்த கூடுதல் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

உங்கள் கையில் உங்கள் பணம் என்ற முழக்கத்தோடு வந்த வங்கிகளில் செலுத்தப்படும் சமையல் எரிவாயுவிற்கான மானியமும் முற்றாக நிறுத்தப்பட்டு விட்டன அல்லது சொற்ப தொகையே வழங்கப்படுகிறது. உங்கள் பணம் அம்பானி, அதானிகளின் பையில் சேருகிறது என்பது தெளிவாகிறது.

உலகிலேயே 156 நாடுகளில் டீசல் விலைப்பட்டியல் காணக் கிடைக்கையில், இந்தியாவில் ஒரு லிட்டர் 4.6 சர்வதே டாலர் என்ற அளவில் உலகில் 8வது அதிக விலை நிர்ணயம் செய்த நாடாக இந்தியா உள்ளது. பொதுவாக டீசல் விலை உயர்வு நடக்கும் போதெல்லாம் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் சங்கிலித் தொடர்ச்சி போல் ஏறும். எனவே பல நாடுகள் டீசல் விலையை கட்டுக்குள் வைத்திருக்கின்றன. உலகிலேயே அதிக விலைக்கு டீசல் விற்கும் நாடு சூடான். அது வறுமையில் விஞ்சி நிற்கும் ஏழை நாடு. இதனைத் தொடந்து அப்பேனியா, துருக்கி, மியான்மர், பூட்டான் மற்றும் லாவோஸ் ஆகிய நாடுகள்தான் இந்தியாவைக் காட்டிலும் அதிகம் விலை நிர்ணயம் செய்த நாடுகள் ஆகும். வேறு எந்த நாடும் இந்தப் பட்டியலில் வரவில்லை.

ஆனால், மேற்கு நாடுகள் தெற்காசிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் இந்தியாவைக் காட்டிலும் மிக குறைந்த விலையிலேயே விற்கப்படுகிறது. சர்வதேச நிதியத்தின் (ஐ.எம்.எப்.) அளவுகோளின்படி நாடுகளின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி தினசரி தல வருமானம் அடிப்படையில் பெட்ரோலின் விலை 0.6 சதத்திலிருந்து அளவிடப்படுகிறது. அமெரிக்காவில் தின வருமானத்தில் 2.2 சதமாக உள்ளது. இது ஸ்பெயினில் சராசரி வருமானத்தில் 2.2 ஆகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ தினசரி வருமானத்தில் 23.5 சதமாக உள்ளது.

இப்படி சுற்றிச் சுற்றி எப்படிப் பார்த்தாலும் இந்தியாவின் விலை நிர்ணயம் சாதாரண, சாமானிய மக்களையும், நடுத்தர மக்களையும் ஒருசேர வாட்டி வதைக்கிறது என்பது நிதர்சமான உண்மை.

போதாக்குறைக்கு சுங்கசாலை கட்டணத்தையும் அவ்வப்போது உயர்த்தி மக்களின் நிம்மதியை இழக்கச் செய்வதில் இளைத்தவர்கள் யாரும் இல்லை.

பெரும் நிறுவங்களுக்கான வருமான வரியை 22 சதமாக குறைத்ததன் மூலம் சுமார் மூன்று லட்சம் கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டது. ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளில் பெட்ரோல், டீசல் வரிவிதிப்பின் மூலம் 26.51 லட்சம்கோடி ரூபாயை வரியாக பெற்றுள்ளது. இதிலிருந்துதான் பெரும் நிறுவன வரிகளில் துண்டு விழுந்த ரூ.3 லட்சம் கோடியும், அவர்களது வங்கிகளின் வாராக் கடனை நீக்கியதன் மூலம் ரூ.10.86 லட்சம் கோடியும், மக்களின் தலையில்தான் சுமத்தப்பட்டுள்ளது. கடந்த 1974லிருந்து 2014 வரை 67 ஆண்டுகளாக இந்தியாவின் ஒட்டுமொத்த கடன் ரூ.53 லட்சம் கோடி. ஆனால் கடந்த 8 வருட பா.ஜ.க. ஆட்சியில் இந்தியாவின் கடன் மூன்று மடங்கு அதிகரித்து ரூ.152.2 லட்சம் கோடியாக உள்ளது. இதுதான் மோடியின் சாதனை.

இதை எதிர்த்து கேள்வி கேட்டால், ஹிஜாப், ஹலால் பிரச்சினைகள் அரசியலாக்கப்படுகின்றன. மாணவர்கள் அசைவம் உண்டதற்காக அடித்து நொறுக்கப்படுகின்றனர். ராம நவமி ஊர்வலங்கள் என்கிற பெயரில் இஸ்லாமியர்களுக்கு எதிரான தாக்குதல் தீவிரப்படுத்தப்படுகின்றன. இலங்கையைப் போலவே இங்கும் மக்கள் மத்தியில் எழுச்சி வந்து விடக் கூடாது என்று தொடர் திசை திருப்பல்களுக்கான திருவிளையாடல்களை இந்துத்துவ வெறுப்பு அரசியலாக முன்வைக்கப்படுகிறது.

வசதி படைத்தவன் தரமாட்டான் வயிறு பசித்தவன் விட மாட்டான் என்ற பட்டுக்கோட்டையாரின் வரிக்கு ஏற்ப மக்கள் இலங்கையில் எழுந்ததைப் போலவே இந்தியாவிலும் கொதித்து எழுவார்கள். புதிய ஜனநாயகப் புரட்சியை நிகழ்த்திக் காட்டுவார்கள்.

தொடர்புக்கு: **94444 81703**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 02

## பண்பாட்டுப் பயங்கரவாதம்

ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித் ஷா நாடாளுமன்ற அலுவல் மொழி குழுவின் கூட்டத்தில் "அரசை நடத்திச் செல்வதற்கான அலுவல் மொழியாக இந்தி மட்டுமே இருக்கும் என பிரதமர் மோடி முடிவு செய்துவிட்டார். இம்முடிவு வருங்காலத்தில் இந்தியின் முக்கியத்துவத்தை நிச்சயமாக அதிகரிக்கச் செய்யும்.

வேறு மொழி பேசக்கூடிய மாநில குடிமக்கள் தமக்குள் இனி, இந்தியில்தான் பேசிக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அதுதான் இந்தியாவின் மொழி. வடகிழக்கு மாநிலங்களில் 22,000 ஹிந்தி ஆசிரியர்களை நியமித்து இருக்கிறோம். அந்தப் பகுதியில் உள்ள 8 மாநிலங்கள் தமது பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு வரை இந்தியைக் கட்டாயப் பாடமாக்க இசைந்து இருக்கின்றன" என்றெல்லாம் அண்மையில் பேசியிருக்கிறார்.

"இந்தி பேசாத மக்கள் தம்மீது இந்தியை திணிப்பதாக கூறலாம். ஆனால் நாங்கள் அவர்கள் மொழிக்கு பதிலாக அல்ல, ஆங்கிலத்துக்கு பதிலாகவே இதைக் கொண்டு வருகிறோம்" என்று விளக்க உரை வேறு சொல்லியிருக்கிறார்

இந்தியாவில் ஒருமைப்பாட்டுக்கும் பன்மைத்துவத்துக்கும் எதிரான அழுத்தமான நடவடிக்கைகளை ஒன்றன்பின் ஒன்றாக இந்த அரசு எடுத்துக் கொண்டே இருக்கிறது.

அதன் செயல்பாடு மற்ற மொழிகளுக்கு எதிரானது மட்டுமல்ல, இந்திக்கே எதிரானதாகும். நாற்பதாண்டுகளுக்கு முன்பு அஞ்சலகங்கள், ரயில் நிலையங்கள், ஒன்றிய அரசின் அலுவலகங்கள் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகளில் உள்ள இந்தி எழுத்துக்கள் அனைத்தும், தார் பூசி அழிக்கப்பட்டுத்தான் இருக்கும். இப்போது அவ்வாறு செய்வதில்லை. ஏனெனில், இந்தியை ஒரு மொழி என்பதற்காக யாரும் வெறுக்கவில்லை. ஏதொன்றையும் அதிகாரத்தைப் பயன்படுத்தி திணிக்க முயலும் போது, எதிர்ப்பு எழுவது இயல்பு. மேலும் பயன்பாட்டிலுள்ள தமது சொந்த மொழியை இது ஓரங்கட்டி விடும் என்ற நியாயமான அச்சமும் இதற்குக் காரணம்.

மறுபடி தார்ச் சட்டியையை எடுக்கவேண்டிய அவசியத்தை அமித் ஷா ஏற்படுத்துகிறார். தமிழ்நாட்டுக்கும் முன்பாகவே கர்நாடகாவில் இந்தி எழுத்துகளைத் தார்பூசி அழிக்கும் வேலையை தொடங்கி விட்டார்கள். ஒரு மாநிலப் பரப்புக்குள் மட்டுமே தேங்கி நின்ற இந்தித் திணிப்பு எதிர்ப்பு, பல மாநிலங்களுக்கும் விரிந்து பரவ ஒன்றிய அரசின் ஆணவம் துணை செய்துள்ளது.

இவர்களால் பழிதூற்றப்படும் ஜவகர்லால் நேரு, "இந்தி பேசாத மக்கள் இந்தியை விருப்ப பூர்வமாக ஒத்துக் கொள்ளும் வரை, ஆங்கிலம் இணைப்பு மொழியாகத் தொடரும்" என்று வாக்குறுதி அளித்தார்.

எப்போது விருப்பத்தோடு ஏற்றுக் கொள்வார்கள்? தமது மொழி வளரும், ஒன்றிய அரசு எல்லா மொழிகளையும் சமமாக வளர்க்கும், அதற்கு இசைவாக இந்தி துணை நிற்கும் என்ற நிலை வருமானால் எதிர்ப்புணர்வு குறையும். தமிழ்நாட்டில் யாரும் இந்தியை கற்கவே இல்லை என்று அர்த்தமல்ல. யாருடைய பணிகளுக்கு இந்தி தேவைப்படுகிறதோ அவர்கள் கற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். தமிழ்நாடு முழுமையிலும் இந்தி பிரச்சார சபைகள் இயங்குகின்றன.

உலகின் மிகப் பழைய மொழிகளில் ஒன்றாக இருந்து இதுவரை பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருகிற தமிழை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செறிவான இலக்கியங்கள் கொண்ட தமிழை, இந்தியாவில் கிடைத்த மொத்த கல்வெட்டுகளில் 90 சதவீதத்திற்கும் அதிகமாக இடம் பெற்றுள்ள தமிழை, இந்தியாவிலேயே முதல் முதலாக அச்சில் ஏறியதோடு இன்றைய நவீன கணினிகளுக்கும் ஈடு கொடுக்கிற தமிழை, உலகின் ஐந்து நாடுகளில் அலுவல் மொழியாகவுள்ள தமிழை "லோக்கல் லாங்குவேஜ்" என்றும், அதுவும் ஒரு பக்கம் இருப்பதற்கு அனுமதிப் பதாகவும் சொன்னால், 'அனுமதிக்கவும் மறுக்கவும்

நீ யார்' என்று கேட்க மாட்டார்களா? 'இந்தி தெரியாது போடா' என்று சொல்ல மாட்டார்களா?

விடுதலைக்கு முன்பு இந்தியா என்றொரு நாடேயில்லை; 500க்கும் மேற்பட்ட நாடுகளாகவே விடுதலை பெற்றது. ஆனால் அந்நியத் தளையிலிருந்து விடுபட வேண்டும் என்ற ஒற்றைக் கருத்தை தமது எல்லா மொழிகளிலும் பேசி, சம மரியாதையோடு கைகோர்த்து இரத்தம் சிந்தி, பெரும் தியாகங்களைச் செய்து நடத்திய விடுதலைப் போராட்டம் தான் இந்தியா என்ற நாட்டையே உருவாக்கி கொடுத்தது.

பல மொழிகளைப் பேசும் தேசிய இனங்கள் இணைந்து வாழும் இந்தியாவை, ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மதம் என்றெல்லாம் ஒற்றை பரிமாணம் கொண்டதாக மாற்ற நினைப்பது "பண்பாட்டுப் பயங்கரவாதம்" ஆகும். இது இந்திக்கும், இந்தியாவுக்கும் நல்லதல்ல.

நாட்டுநிலை ஆராயாமல் கொடுங்கோல் புரியும் அரசு, நிதி ஆதாரத்தையும் மக்களின் மதிப்பையும் ஒருசேர இழந்துவிடும்

### இந்திய மாணவர்கள் வெளிநாட்டில்

# மருத்துவக் கல்வி கற்பதற்கு தனியார்மயமே காரணம்

### கே.சுப்பராயன் நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு

நாடாளுமன்ற மக்களவையில் 05.04.2022 அன்று விதி எண்:193 கீழ் உக்ரைன் சூழல் குறித்து நடைபெற்ற விவாதத்தில் தோழர் கே சுப்பராயன் பேசியது பின்வருமாறு:

கற்பனை செய்ய முடியாத அளவிற்கு மிகப் பெரிய தீங்கைச் செய்யக் கூடியது என்பதை 2 உலகப் போர்கள் மனிதகுலத்திற்கு தெளிவாக எடுத்துக் காட்டி இருக்கிறது.

இந்தப் போர் எவ்வளவு தீங்கானது என்பது குறித்து புகழ்பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டின் குறிப்பிட்டதை நான் இங்கே மேற்கோள் காட்ட விரும்புகிறேன். 3 வது உலகப் போர் வருமானால், இன்றைய அணு ஆயுதப் பெருக்கம் அதிகரித்துள்ள நிலையில், 3 வது உலகப் போர் எவ்வாறு நடைபெறும் என்று கேட்ட போது, “3 வது உலகப் போர் நடைபெற்றால் எவ்வாறு இருக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால், 4 வது உலகப் போரில் வில்லும் அம்பும் தான் ஆயுதங்களாக இருக்கும்.” என்று ஐன்ஸ்டீன் கூறினாராம். 3 வது உலகப் போர் நடைபெறுமானால் உலகம் அழிந்து போகும் என்பது தான் இதனுடைய பொருள் ஆகும்.

எனவே, அந்தப் படுபயங்கர விளைவை ஏற்படுத்தக் கூடிய ஒரு உலகப் போர் ஏற்படாமல் தடுப்பதற்கு நாம் மிகப் பெரும் போராட்டத்தை நடத்த வேண்டிய நெருக்கடி இருக்கிறது. உக்ரைன் நிலவரத்தைப் பொறுத்தவரையில், அது 2 பாடங்களை இந்தியாவுக்குத் தந்திருக்கிறது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முதலாவதாக, உள்நாட்டில் என்ன செய்ய வேண்டும் என்பதையும், உலக அரங்கில் என்ன செய்ய வேண்டும் என்பதையும் இந்தப் போர் அனுபவங்கள் நமக்கு உணர்த்தியுள்ளன. மாணவர்களை உக்ரைனில் இருந்து மீட்டுக் கொண்டு வருவதற்கு நம்மிடம் போதுமான வசதிகள் இல்லை. இந்தியாவில் எண்ணற்ற கல்லூரிகள் இருந்தும், இந்திய மாணவர்கள் வெளிநாடுகளுக்குப் படிக்கச் செல்ல நிர்பந்தம் செய்தது யார்? இதற்கு காரணம் என்ன? என்பதை இந்தியா உணர வேண்டும்; உணர்த்தி இருக்கிறது உக்ரைன் அனுபவம். தனியார் கல்லூரிகளில் அதிக பணம் கொடுத்துப் படிக்க முடியாத காரணத்தால், இந்திய மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்த நிர்பந்தத்திற்கு யார் காரணம்? தனியார்மயமே காரணம் ஆகும். தனியார்மய கொள்கையை இந்த அரசாங்கம் கடைபிடிப்பதால், கல்லூரிகள் தனியாருக்கு வழங்கப்பட்டுவிட்டதால், தனியார் கல்வி நிறுவனங்களில் அதிக பணம் செலவழித்துப் படிக்க முடியாமல் இந்திய மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள். இந்த அரசாங்கம் இதைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, அரசாங்கத்திற்குச் சொந்தமாக எந்த விமானப் போக்குவரத்து சேவை நிறுவனமும் இல்லை. கால தாமதம் ஏற்பட்டதற்கு யார் காரணம்? நாம் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நமது அயல்துறை அமைச்சர் இந்த விஷயத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டார். அதில் நான் குறை காண விரும்பவில்லை. ஆனால், விமானங்கள் இல்லாத காரணத்தால் மாணவர்களை அங்கிருந்து கொண்டு வர முடியவில்லை. காரணம் என்ன? இந்த அரசாங்கம், ஏர் இந்தியாவை டாடாவுக்கு விற்றுவிட்டது. இதன் காரணமாக இந்தியாவிடம் சொந்தமாக விமானங்கள் இல்லாமல் போய்விட்டது. இந்த அரசாங்கத்தின் தனியார்மய கொள்கை தான் இதற்கு காரணம் ஆகும்.

அடுத்து, மற்றொரு மிக முக்கியமான விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். உலக அரங்கில் ஜவஹர்லால் நேரு காட்டிய வழியை இவர்கள் கடைபிடிக்க வேண்டும். உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பை உயர்திக் காட்டியவர் ஜவஹர்லால் நேரு ஆவார். சார்புத்தன்மையற்ற தனித்த கொள்கையான ‘அணிசேரா கொள்கையே’ அவரின் கொள்கை ஆகும். அணிசேரா கொள்கை தான் இன்றைய தேவை ஆகும். அதனை இந்த அரசாங்கம் கட்டாயம் ஏற்க வேண்டும் என்பதை நான் இங்கு வலியுறுத்துகிறேன்.

உக்ரைன் போர் காரணமாக ஏற்பட்ட அனுபவங்கள் குறித்து இங்கே பலரும் குறிப்பிட்டார்கள். நேரக் குறைபாடு காரணமாக, அதைப் பற்றி விரிவாகச் சொல்ல முடியவில்லை. எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டதையே நானும் இந்த அரசாங்கத்திடம் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்தியா உலகிற்கு விட்டுச் சென்றுள்ள செல்வம் எது? ‘வஸுதைவ குடும்பகம்‘ என்பதாகும்.

அதுதான் இந்திய உலகிற்கு காட்டிய வழி என்றால், இசுலாமியர்கள், கிறித்தவர்கள், வெள்ளை நிறத்தவர், கருப்பு நிறத்தவர் என்று அனைவரையும் சகோதரர்களாகப் பாவிக்கக் கற்றுக் கொடுத்த இந்த மண்ணில் கலகத்தை விதைப்பதை ஏற்க இயலாது;

அது முறியடிக்கப்பட வேண்டும்! இவ்வாறு அவர் பேசினார்.

# தலித் உரிமைகள் இயக்கம்

## தேசியக் குழு



தலித் உரிமைகள் இயக்கம் தேசியக் குழு சென்னையில் கூடுகிறது. தலித் உரிமைகள் இயக்கம் தேசியக் கூட்டம் வரும் 29, 30 ஏப்ரல் 2022 அன்று சென்னை வியாசர்பாடியில் நடைபெற உள்ளது.

அகில இந்திய அளவில் தலித் உரிமைகள் இயக்கம் அமைப்பு உருவாக்கப்பட்டு அதன் முதல் தேசியக் குழு கூட்டம் சென்னையில் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மகாராஷ்டிராவின் அவுரங்காபாத்தில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் இவ்வமைப்பு துவங்கப்பட்டது/

நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான பிரதிநிதிகள் பங்கேற் றனர். நிறைவாக 56 பேர் கொண்ட தேசிய குழு அமைக்கப்பட்டது.

அமைப்பின் பொதுச் செயலாளராக வி.எஸ். நிர்மல் அவர்களும், தேசியத் தலைவராக புதுவை ஆர்.ராமமூர்த்தி அவர்களும், துணைத் தலைவராக பொ.லிங்கம் எக்ஸ். எம்.பி.யும் தேர்வு செய்யப்பட்டனர்.

சென்னையில் கூடும் தேசிய குழு கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செய லாளர் டி.ராஜா, தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் நாகேந்திரநாத் ஓஜா, தமிழ் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஆகியோர் இரண்டு நாள் கூட் டங்களில் பங்கேற்கிறார்கள்.

முதல்நாளன்று, அமைப்பின் கொடி ஏற்றத்தோடு மார்க்ஸ், பெரியார், அம்பேத்கர், சிங்காரவேலர், ஜோதிபாய் பூலே, நாராய ணகுரு, சீனிவாசராவ், ரெட்டமலை சீனிவாசன், அயோத்திதாசர், பா.மாணிக்கம் உள்ளிட்ட மகத்தான தலைவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது. மாலை பொது நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தலித் பிரச்சனையும் – சவால்களும் எனும் தலைப்பில் நடைபெறும் நிகழ்வில், கோகுல்ராஜ் கொலை வழக்கில் நீதி நிலைபெற அரும்பாடுபட்ட வழக்கறிஞர் ப.பா.மோகனுக்கு பாராட்டுக் கூட்டம் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்க சென்னை பெருநகர மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் ஆர்.பிரியா ராஜன் அவர்களை அழைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. உட்பட பெருமக்கள், தலைவர்கள் என பலர் பங்கேற்கிறார்கள்.

தேசியக்குழு உறுப்பினர்கள் தங்குமிடம், தேசியக் குழு நடைபெறும் அரங்கம், பொது நிகழ்வு அரங்கம் என பல பங்கேற் பாளர்களுக்காக திட்டமிடப்பட்டுள்ளது. உணவுக்குழு, போக்குவரத்து குழு, மருத்துவக் குழு, விளம்பரக் குழு, நிதிக் குழு, வரவேற்புக் குழு என பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**பா.-ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். கருத்தியலா லும், ஆட்சி முறைகளாலும் நாடு இது வரை கண்டிராத நெருக்கடியை சந்தித்து வருகிறது. நாட்டின் அரசியல் சாசனம், நாடாளுமன்ற ஜனநாயகம், மாநில உரிமைகள், பன்முகம், மதச் சார்பின்மை, நல்லிணக்கம் என யாவும் வரலாறு காணாத நெருக் கடியில் சிக்கிவிட்டது. மக்கள் விரோத பொருளா தாரக் கொள்கைகளால் நாடு தனியார் வசம் சென்று கொண்டிருக்கிறது. உழைக்கும் மக்கள் மீதும், விளிம்பு நிலை மக்கள் மீதும் பெரும் தாக்குதல்கள் தொடர் கின்றன. இத்தகைய சூழலில்தான் வர்க்கப் போரை முன் னெடுக்கும் இடது சிந்தனையோடு, தலித் உரிமைகள் இயக்கம் முன்னெடுக்கப்படுகிறது. வர்க்கப் போரோடு தலித் மக்களின் உரிமைப் போரை யும் இணைக்கும் ஓர் இயங்கியல் அணுகுமுறை யோடு தலித் உரிமைகள் இயக்கம் துவங்கப்பட்டுள்ளது.**

சமூக மாற்றங்களுக்கும் – சோசலிச முறைமை களுக் கும், பகுத்தறிவுக்கும் பெரும் தடையாக உள்ள இந்திய சாதிய முறையை முற்றிலும் தகர்த்து எறிய ஒரு பெரும் முன்னெடுப்பும், புதியதொரு அணுகுமுறைகளும் தேவைப் படுகிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை பற்றியபடி, மகத் தான, வெல்லற்கரிய, மானுட விடுதலையை போற்றும், செங்கொடியை பிடித்தபடி, மனிதன் மீதான சகலவித ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக போர்க் குரலெழுப்ப தலித் உரிமைகள் இயக்கம் களம் காண, வெற்றி பெற, ஓர் புதிய திருப்புமுனையை இந்த தேசியக் குழு உருவாக்கும் என நம்புகிறோம்.

– மு.வீரபாண்டியன்

தத்துவார்த்தம் 25



எஸ். தோதாத்ரி

சென்ற வார தொடர்ச்சி....

**“1844 கையேடுகளுக்கு” அதிக முக்கியத்துவம் கொடுத்து அந்நியமயமாதலை உலகளாவிய ஒன்றாகக் கருதுதல், பிரதிபலித்தல் கோட்பாட்டை நிராகரித்தல்.**

இவை புதிய இடதுசாரிகளின் இயக்கத்தில் பொதுவாகக் காணப்பட்ட கூறுகள் ஆகும். இவற்றினை மேலை நாடுகளில் விரிவாக விளக்குவதற்குப் அறிஞர்கள் முயன்றனர். இவற்றில் மேலை நாட்டில் தோன்றிய இந்தப் போக்கின் எல்லா அம்சங்களையும் தமிழகத்தில் காணமுடியாவிட்டாலும், சில பகுதிகள் இங்கு முனைப்பாக இடம் பெற்றுள்ளன.

புதிய இடதுசாரிகள் தமிழகத்தில் பல குழுக் களாகச் செயல்பட்டுவருகிறார்கள். இவர் களுடைய தோற்றத்தை 1970களிலிருந்தே காணலாம். இவர்களது செயல் பாட்டிற்குப் பல காரணங்கள் உள்ளன. ஒன்றாவதாக மார்க்சிய எதிர்ப்பு; இரண்டாவதாக கட்சியின் செயல்பாட்டில் ஏற்பட்ட அதிருப்தி. மூன்றாவதாக கட்சியில் ஏற்பட்ட பிளவும், அதன் காரணமாக இடம் பெற்ற தத்துவார்த்த குழப்பமும்; நான்காவதாக இடதுசாரி முகாம் பகுதிகளாகப் பிளவுண்டு போனமை; ஐந்தாவது வலுவான தலைமை இல்லாது



# தமிழகத்தில் மார்க்சியப் போக்குகள்

போனது; ஆறாவது தன்னார்வக் குழுவினர் பலர் மார்க்சியம் பற்றிப் பேசத்தொடங்கியது; இக்குழுவினர் சிலர் திட்டமிட்ட முறையில் ஐரோப்பிய கம்யூனிசத்தைப் பரப்புவதற்கு இங்கு எடுத்துக்கொண்ட முயற்சி; ஏழாவது கட்சி சார்ந்து மார்க்சியத்தைப் போதித்தவர்கள் வட்டத்திற்கு வெளியே, மார்க்சியத்தை ஒரு பண்டித விவகாரமாக அணுகி அதனைப் பல தத்துவங்களுடன் இணைத்துப் பார்க்கும் மனோபாவம் வளர்ந்தமை இவையாவற்றிற்கும் மேலாக இங்கு உள்ள முதலாளித்துவப் பத்திரிகைகள் பல இந்தவகை விவா தங்களை ஊக்குவித்து, இத்தகைய குழுக்களுக்கு ஆதரவு அளித்தமை இந்தக் காரணங்கள் புதிய இடது சாரிக் கருத்துகள் பரவுவதற்குப் பின்புலமாக அமைந்தது எனலாம்.

இந்தக் கருத்துக்களைக் பரப்புவர்களிடையே பல ஒற்று மைகளைக் காண முடியும். முதலாவது இவர்கள் எந்த வொரு இயக்கத்திற்குள்ளாகவும் தங்களை வலுவாக இணைத்துக் கொள்ளவில்லை. இவர்களிடம் குழு உணர்வைவிட தனிநபர்வாத உணர்வே அதிகம் இருந்தது எனலாம். இதற்குத் தமிழவன், ஞானி ஆகியோர் உதாரணம் ஆவர். தமிழவன் நெல்லை ஆய்வுக் குழுவில் சிறிது காலம் இருந்தவர். பின்னர் அதனை விட்டு அமைப் பியல்வாதியாக மாறியவர். ஞானி தன்னைப்பற்றி எழுதியது இவர் களின் இந்தப் போக்கிற்கு நல்லதொரு உதாரணம் (‘விழிகள்’ 2. பிப்ரவரி 1978. பக். 96–98)

“வேலிகள் எனக்குப் பிடித்தமில்லை. நானும் வேலி மீறிய கிளைதான், உலகத்தையே என் வேலிக்குள் அடைத்துவிடலாம் என்று இளமையில் நான் கனவு கண்டது உண்மைதான். சரித்திரம், சமுதாயம், கட்சி மாற்றம் இப்படியாக எனக்குத் தடைகள் இட்டுக் கொண்டேன். இவற்றை நான் இட்டுக்கொண்ட காலம் முழுவதும் நான் கும்பலில் இருந்தேன், கூக்கூரல் இட்டேன்.

‘நான் வேலி கட்டக்கூடாது

எனது கித்தாறுக்குள் உலகத்தை அடைக்கக் கூடாது. அறிவுப் பூதத்தை உள்ளே விடக்கூடாது” இது கிட்டத்தட்ட ஞானியின் வாழ்க்கை வளர்ச்சியைக் காட்டுகிறது.

அமைப்புகளை மறுத்து ஒரு தனி நபர்வாத நிலைப்பாட்டினை அவர் மேற்கொண்டதை இங்குக் காணமுடிகிறது. இதேபோன்று ஸ்தாபனங்களை மறுக்கும் போக்கினையோ அல்லது எந்த அமைப்பிற்குள்ளும் தங்களை இணைத்துக்கொள்ளாமல் இருக்கும் போக்கினையோ அல்லது தங்கள் நிலைபாட்டினை அடிக்கடி மாற்றிக்கொள்ளும் போக்கினையோ இவர்கள் அனை வரிடமும் காணலாம். இதன் விளைவு இவர்கள் அமைப்பு ரீதியான சிந்தனைகளை எதிர்ப்பதில் ஒன்று படுகின்றனர்.

**பொதுவுடைமைக் கட்சிகளைக் கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கும் இவர்கள் அதே நேரத்தில் பெரியாரியத்தை உயர்த்திப் பிடிப்பதில் ஒன்றுபடுகின்றனர். அதற்குக் காரணம் பெரியாரிடம் காணப்படும் கலகக் குரல்தான்.**

அதே சமயத்தில் பெரியார் ஒரு அமைப்பையே உருவாக்கி அதன் மூலம் ஒரு இயக்கத்தை நடத்தியவர் என்பதை இவர்கள் மறந்துவிட்டனர் அல்லது பெரியாரின் அமைப்பு சார்ந்த சிந்தனைகளை இவர்கள் கண்டு கொள்வதில்லை.

இந்த நிலைப்பாடு காரணமாக இவர்களிடம் மார்க்சியம் பற்றிய ஒருதலைப்பட்சமான பார்வையே மேலோங்கியுள்ளது. இவர்களது பங்களிப்பு என்பது மார்க்சியக் கோட்பாட்டு வளர்ச்சி பற்றியதாகும். இதுபற்றி இவர்கள் அதிகம் சிந்திக்கின்றனர் என்பது உண்மை. அந்த அளவிற்கு இவர்கள் பாராட்டுதலுக்கு உரியவர்கள். ஆனால் இந்தச் சிந்தனையானது மார்க்சியத்தையே மறுக்கும் எல்லைவரைக்கும் சென்றுவிடுகிறது.

எஸ்.என்.நாகராஜன், தமிழவன், எஸ். வி. ராஜதுரை, அ. மார்க்ஸ் போன்றவர்கள் மையப்படுத்திப் பேசுவது மார்க்சின் ஆரம்பகாலப் படைப்பான “1844 கையேடுகள்” என்ற நூல். அளவில் சிறிய இந்த நூல் மார்க்ஸ் அவரது கொள்கையை உருவாக்கிக்கொண்டிருந்த காலத்தில் எழுதப்பட்டது. இதில் முதலாளித்துவப் பொருளாதாரம் பற்றிய விமர்சனமும், ஹெகலியத் தத்துவம் பற்றிய விமர்சனமும் இடம் பெறுகின்றன. பூயர்பாவின் பொருள் முதல் வாதமும் இதில் இடம் பெறுகிறது. இதில் மனிதனை மார்க்ஸ் ஒரு இனஜீவியாகக் காண்கிறார். அதாவது மற்ற இனங்களைப் போன்று இயற்கையில் ஒரு ஜீவியாகக் காண்கிறார். ஆனால் அவன் இயற்கையிலிருந்து வேறுபடுவதைச் சுட்டிக் காட்டுகிறார். அவ்வாறு செய்யும் பொழுது வர்க்க சமூகம் பற்றிய சிந்தனைக்கு நகர்கிறார். அந்நியமயமாதல் பற்றிக் கூறுகிறார்.

அவர் கூறுவதெல்லாம் உழைப்பாளி அவனது உற்பத்திப் பொருளில் இருந்து விலகி உரிமையற்று அந்நியப்பட்டு இருப்பதைத்தான். மார்க்ஸ் உழைப்பாளி சிதைக்கப்பட்டு சிறுமைப்பட்டிருப்பதைக் காட்டுகிறார். அவ்வாறு இது மார்க்சிய மனிதநேயம். ஆனால் இதனை மனித குலம் முழுவதற்கும் மார்க்ஸ் பொருத்திக் கூறுகிறார் என்று அதற்குப் புதிய விளக்கம் கொடுக்கின்றனர் மேலைய மார்க்சியவாதிகள்.

அதனை இங்கு ஞானி, எஸ்.வி.ராஜதுரை போன்றவர்கள் பிரதிபலிக்கின்றனர். அந்நியமயமாதல் வர்க்க பேதமற்ற சமூகத்தில் மறையும் என்ற மார்க்சியக் கருத்தாக்கத்தை எல்லாம் கடந்த நிலை, வர்க்க அமைப்பின் மூலம் வர்க்கமற்ற அமைப்பிற்குக் கடந்து செல்லுதல்” போன்ற விளக்கங்கள் மூலம் ஒரு ஆன்மிகவாத நிலைக்கு எடுத்துச்செல்கின்றனர்.

உதாரணமாக மார்க்சியப் பொருளாதாரத்தில் உயிர்நாடியாக ஏற்றுக்கொள்ளக்கூடியது மதிப்பு **(Value)** என்பது. இதனை மார்க்ஸ் பயன்மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு, உபரி மதிப்பு என்ற முறையில் விளக்குகிறார். ஒரு பொருள் பண்டமாக மாறும் பொழுது அதில் அடங்கியிருப்பது உழைப்பாளியின் உழைப்பு. இது மதிப்பை உருவாக்குகிறது. இது பண்டத்திற்குப் பண்டம் வேறுபடுகிறது. ஆனால் எல்லாவற்றிலும் ஒரு பொதுமையான **(Abstract)** உழைப்பு அடங்கியிருக்கிறது. ஆனால் இந்த உழைப்பின் உற்பத்திப் பொருளான பண்டம் தொழிலாளிக்குச் சொந்தமாகாமல் முதலாளிக்குச் சொந்தமாகிவிடுகிறது. பண்டம் உழைப்பாளியை அடிமைப்படுத்திவிடுகிறது. இது அந்நியமயமாதலின் விளைவு. இது பொருள் முதல்வாத அடிப்படையில் அமைந்த விளக்கம் ஆகும். ஆனால் எஸ். வி. ராஜதுரை இதற்கு ஓர் ஆன்மீக விளக்கம் தருகிறார். மனித நேயம் என்ற கருத்தை இணைத்து மனித குலம் முழுவதையுமே விடுவிக்க வழிகாட்டுவதுதான் மார்க்சியப் பொருளாதாரம் என்று கூறுகிறார்.

“பொதுவான உழைப்பாக மாறி அந்நிய மயமாக்கப்பட்ட அருவமான செல்வத்தை மட் டுமே உற்பத்தி செய்யும் பொழுது, அது தன்னை மனிதனின் உயிர்ச் செயல் என்று நியாயப்படுத்திக் கொள்ள முடியாது. மனிதனை விலங்கு நிலையிலிருந்து விடுவித்த சுதந்திரச் செயலுக்கு ஒரு “அருவமான” மதிப்பு தேவையில்லை. அது மதிப்பை உற்பத்தி செய்யத் தொடங்கியதும் கண்ணுக்குப் புலனாகாத சங்கிலிகள் பூட்டப்படுகின்றன. செல் வத்திற்கு அடிமையாகி அதில் கரைந்து அருவாமாகிவிட்ட மனிதனை விளக்குவதும், அதில் அவன் மீண்டு சுதந்திர ரூபியாகும் வழியைக் காட்டுவதும் மார்க்சியப் பொருளாதாரத்தின் நோக்கமாகும்“ (அந்நியமயமாதல் எஸ். பி. இராஜதுரை பக் 125)

இது மார்க்சியப் பொருளாதாரத்தின் நோக்கத்தையே மாற் றிக் கூறுவதாகும். இந்த விளக்கம் ஒரு கருத்து முதல்வாத எல்லைக்கு மார்க்சியத்தை இட்டுச் செல்வதைக் காணமுடியும். இது அகவயப்படுத்தும் போக்கு. இதனை வலியுறுத்தும் போக்கில் எக்சிஸ் டென்சியலிசக் கருத்துக்களையும் மார்க்சியத்துடன் இவர்கள் காண்கின்றனர்.

**எக்சிஸ்டென்சியலிசம் மனித இருப்பை மட்டும் வலியுறுத்தி மற்றவற்றைப் புறக்கணிக்கும் தத்துவம். அது பேசுவது கட்டுப்பாடற்ற மனித சுதந்திரம். எஸ்.வி. இராஜதுரையின் கூற்றுப்படி. எக்சிஸ்டென்சியலிச மனிதன் ஒரு கலகக்காரன். அது மட்டுமல்ல, எக்சிஸ்டென்சியலிசம், பிராய்டிசம், மதவாதக் கருத்துக்கள். ஐரோப்பியக் கருத்து முதல்வாதத் தத்துவக் கூறுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.**

எக்சிஸ் டென்சியலிசம் மனிதகுல விடுதலையைப் பேசுகிறது. மார்க்சியமும் அதையே பேசுகிறது என்ற தளத்தில் வைத்து இரண்டையும் இணைத்துக் காண்கின்றனர். தத்துவ ரீதியாக இந்த இரண்டையும் இணைப்பது சாத்தியமில்லை என்பதை இவர்கள் காண மறுக்கின்றனர். மார்க்சியம் பேசும் விடுதலை உழைப்பாளியின் விடுதலை. மார்க்சியம் சுட்டும் தளைகள் என்பவை சுரண்டலினால் ஏற்பட்ட தளைகள். எக்சிஸ் டென்சியலிசம் கூறுவது போன்று அல்ல. இந்த வேறுபாடு கவனத்தில் கொள்ள வேண்டியது ஆகும். இதனைப் புறக்கணித்து மார்க்ஸை எக்சிஸ்டென்சியலிச வழியில் விளக்குவது என்பது பொருள் முதல்வாதத்தை கருத்து முதல்வாதத்துடன் கலப்பது ஆகும்.

தொடர்ச்சி அடுத்த வாரம்....

தொடர்புக்கு: 98947 83657

# இந்தி மொழித் திணிப்பு செயலை அமித்ஷா நிறுத்திக் கொள்ள வேண்டும்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

நாடாளுமன்ற அலுவல் மொழிக் குழுவின் 37வது கூட்டத்தில் பேசிய ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் அமித்ஷா “ஆங்கிலத்துக்கு மாற்றாக இந்தி மொழியை ஏற்க வேண்டும். மாநிலங்களுக்கு இடையே குடிமக்கள் உரையாடும் மொழி இந்தி மொழியாகவே இருக்க வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளளார்.

உள்துறை அமைச்சரின் கருத்து “ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம்” என்ற முறையில் “இந்து ராஷ்டிரா” கட்டமைக்கும் நோக்கம் கொண்டதாகும். இது நாட்டின் ஒன்றிய கட்டமைப்பை சீர்குலைக்கும் சிந்தனையாகும். இது “வேற்றுமையில் ஒற்றுமை காணும்” நாட்டின் தனித்துவப் பண்புக்கு எதிரானது. மாநிலங்களின் தாய்மொழி வளர்ச்சிக்கு தடை ஏற்படுத்தும் செயலாகும்.

வடகிழக்கு மாநிலங்களில் இந்தி ஆசிரியர்கள் நியமித்திருப்பதும், பழங்குடி மக்களின் பேச்சு வழக்கு மொழிகளை தேவநாகரி எழுத்து வடிவத்துக்கு மாற்றுவதும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும். நாட்டின் ஒரு பகுதியில் வழக்கத்தில் இருந்து வரும் ஒரு நாட்டின் பொது மொழியாக திணிப்பது, பிற பகுதிகளின் தாய் மொழி வளர்ச்சியை தடுக்கும் பேராபத்தானது. தொன்மை வரலாறு கொண்ட தமிழ் மொழி வளர்ச்சிக்கு எதிரானது. ஒன்றிய கட்டமைப்பில் உள்ள மாநிலங்களின் தாய் மொழிகள் மற்றும் மாநில அரசின் நிர்வாக மொழிகளை ஒன்றிய அரசின் நிர்வாக மொழிகளாக ஏற்பதன் மூலம் தான் நாட்டின் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் வலிமை பெற்று வளரும் என்பதை ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும், இந்தி மொழித் திணிப்பில் ஈடுபட்டு வருவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



## கட்டுமான பொருட்களின்

# விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும்

## சட்டசபையில் டி.ராமச்சந்திரன் பேச்சு

**தமிழகத்தின் 2022 –2023 ஆம்ஆண்டிற்க்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கையின் மீது தளி சட்டமன்றத் உறுப்பினர் டி.இராமச்சந்திரன் பேசியது வருமாறு:**

இந்த அரசு பொறுப்பேற்ற காலம் கொரானா பேரிடர் காலம், கடுமையான பொருளாதார நெருக்கடி மேலும் கடந்த காலங்களில் சரியான முறையில் நிதி மேலாண்மையை கையாளாத காரணத்தினாலும், ஒன்றிய அரசு, மாநில அரசுக்கு நிதி பகிர்வில் பாரபட்சம் காட்டுவதாலும் கடுமையான நிதி நெருக்கடியிலும் மக்கள் மீது புதிய வரிகள் சுமத்தாமல் வரியில்லா நிதி நிலையை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்கிறேன்.

இந்த பட்ஜெட்டில் வளர்ச்சித் திட்டங்கள் சாலை கட்டமைப்பு பணிகள், வெள்ள தடுப்பு நடவடிக்கைகள், கல்வி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சமூக நலத்துறை, வேலைவாய்ப்பு தொழில் வளர்ச்சிக்கும், தமிழ் வளர்ச்சிக்கும், கருத்தியல் பண்பாட்டிற்கும், தந்தை பெரியாரின் பகுத்தறிவு சிந்தனைகளை 21 மொழிகளில் உலகமெங்கும் பரப்பும் வகையில் அச்சு மற்றும் மின்னூல் பதிப்பகத்திற்கு நிதி ஒதுக்கீடு, அரசு பள்ளி மாணவிகள் இடைநிற்றல் போக்கவும், பெண்களின் உயர்கல்வியை ஊக்குவிக்கவும், மாதம்தோறும் ரூ.1000 உயர் கல்வி உதவித்தொகை திட்டம், கல்வியில் பின் தங்கிய 10 மாவட்டங்களில் 125 கோடியில் மாதிரிப் பள்ளிகள் புதியதாக 18000 கூடுதல் வகுப்பறைகள் என ஒரு நாட்டின் வளர்ச்சியில் கல்வியும், வேளாண்மையும் முக்கிய பங்கு வகிப்பதை அறிந்து பள்ளிக்கல்வித்துறைக்கு 16 ஆயிரத்து 898 கோடியும், வேளாண் துறைக்கு 33 ஆயிரம் கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது தமிழக வளர்ச்சி பாதைக்கான பட்ஜெட்டாக அமைந்துள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறதிகளை நிறைவேற்றும் வகையில், தகுதி படைத்த விவசாயிகளுக்கு பயிர் மற்றும் நகை கடன்களை தள்ளுபடி செய்திருப்பது, இந்த அரசின் மீது விவசாயிகளுக்கு பெரிய நம்பிக்கை ஏற்படுத்தியிருக்கிறது. அதே போல மாணவர்கள் பெற்ற கல்வி கடனையும் தள்ளுபடி செய்யப்படும் என்ற நம்பிக்கையோடு மாணவர்கள் காத்திருக்கின்றனர் அரசு நிறைவேற்ற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

சில மாதங்களாக கட்டுமான பொருட்களான கம்பி, சிமெண்ட், ஜல்லி, எம்.சாண்ட், செங்கல் போன்ற பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது இதனால் கட்டுமான தொழில் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு இழக்கின்ற நிலைமையும், சாமனிய மக்கள் வீடு கட்டுவது என்பது வெறும் கனவாகி போகிறது. ஆகவே அரசு கட்டுமான பொருட்களின் விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

சமீபகாலமாக தமிழகத்தில் அதிகரித்துவரும் ஆணவ படுகொலைகளை தடுக்கும் வகையில் தனி சட்டம் இயற்ற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் ஆட்சி காலத்தில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு 36 நல வாரியங்கள் அமைக்கப்பட்டது. இவற்றிற்கு வேட்டு வைக்கும் வகையில் ஒன்றிய அரசு 44 தொழிலாளர் சட்டங்களை நீர்த்துப் போகச் செய்து 4 தொகுப்புகளாக கொண்டு வந்திருப்பது தொழிலாளர் மற்றும் மாநில உரிமைகளுக்கு எதிரானது. விவசாயிகளை பாதிக்கின்ற 3 வேளாண் சட்டங்களுக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தது போல ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள 4 தொழிலாளர் தொகுப்பு சட்டங்களுக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் புதிய பென்ஷன் திட்டம் பயன் தராது என கோரிக்கை வைத்து தொடர்ந்து போராடி வருகின்றனர். ஆகவே பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

1990 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் மக்கள் நலப்பணியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர். கடந்த ஆட்சியாளர்களால் மூன்று முறை மக்கள் நலப்பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். பணிநீக்கம் செய்யப்பட்ட மக்கள் நல பணியாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து நீதிமன்றம் மீண்டும் பணி வழங்க தீர்ப்பு வழங்கிய பிறகும், கடந்த ஆட்சியில் உச்சநீதிமன்றத்தில் அதன் மீது தொடரப்பட்ட மேல்முறையீட்டு தடை ஆணை வாபஸ் பெற்று பணி வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து ஊழியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் ஓய்வு பெற்ற பிறகும் மிகவும் மோசமான பொருளாதார நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய ஓய்வுக்கால பென்ஷன் பணக்கொடைகளை வாங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தொகுப்பூதியத்தில் ஒப்பந்த அடிப்படையில் கிராம உள்ளாட்சி அமைப்புகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சமூக நலத்துறை உள்ளிட்ட அரசின் பல்வேறு துறைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றக்கூடியவர்களுக்கு காலமுறை ஊதியம் மற்றும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

2012ஆம் ஆண்டு 5 ஆயிரம் தொகுப்பூதியத்தில் 16000 ஆசிரியர்கள் பகுதிநேர ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். தற்போது 12000 பகுதிநேர ஆசிரியர்கள் ரூ 10,000 தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

### தொழில் வளர்ச்சி என்ற பெயரால் தொழில் பேட்டைகள், சிப்காட் அமைக்க விவசாய விளை நிலங்களை கையகப்படுத்துவதை அரசு கைவிட வேண்டும்.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை அடுத்த நாகமங்கலம், அயர்னப்பள்ளி, உத்தன பள்ளி ஆகிய மூன்று ஊராட்சிகளில் நான்காவது சிப்காட் அமைக்க சுமார் 5 ஆயிரம் ஏக்கர் விவசாய விளை நிலங்களை கையகப்படுத்த அரசு அதிகாரிகள் முயற்சிப்பதால் அப்பகுதி விவசாயிகளின் மத்தியில் பெரும் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே ஒசூரில் 1,2,3சிப்காட் தொழிற்பேட்டைகள் அமைக்க விவசாய நிலங்களை கையகப்படுத்திருக்கும் நிலையில், நான்காவது சிப்காட் அமைத்தால் ஒட்டுமொத்த விளைநிலங்களையும் பறிகொடுத்து விவசாயிகள் விவசாயக் கூலிகளாக மாறும் அவல நிலை ஏற்படும். ஆகவே அரசுக்கு சொந்தமான தரிசு நிலங்களில் தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1990ஆம் ஆண்டு முதல்அமைச்சராக இருந்தபோது பம்பு செட்டுகள் வைத்திருந்த அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சார திட்டத்தை கொண்டு வந்தார்.

அதேபோல தமிழகத்திலேயே முதல்முறையாக வேளாண்மைக்கு என தனி பட்ஜெட்டை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தார். இந்த அரசின் இரண்டாவது பட்ஜெட் இரண்டு நாட்களுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டது. இதற்காக 33 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக இயற்கை சீற்றத்தால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதனை மனதில் கொண்டு 2 ஆயிரத்து 339 கோடி காப்பீட்டுக்காக ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

கலைஞர் கொண்டுவந்த உழவர் சந்தைகளை மேம்படுத்த ரூ 15 கோடியும், புதிய உழவர் சந்தைகளை உருவாக்க ரூ 10 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதும், விவசாயத்தை முதன்மையாக கொண்ட டெல்டா மாவட்டங்களில் 1550 கிலோ மீட்டர் தூரம் கால்வாயை தூர்வார நிதி ஒதுக்கீடு மற்றும் கரும்பு விவசாயிகளுக்கு இனிப்பான செய்தியாக டன் ஒன்றுக்கு ரூ 195 ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதேவேளையில் கரும்பு வெட்டுக்கூலியை அரசே ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையும் அரசு நிறைவேற்ற வேண்டும்.

● தென்னை நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ரூ.9 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்ற அதேவேளையில், தேங்காய் கொள்முதல் மையங்களை மாவட்டந்தோறும் அமைக்க வேண்டும். தென்னை நல வாரியம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் அரசு நிறைவேற்ற வேண்டும். ● கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு லட்சம் ஹெக்டர் மா பயிரிடப்படுகிறது எனவே அரசின் சார்பில் மா கொள்முதல் மையம் மற்றும் மாங்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டும். ● மலர் சாகுபடி அதிகமாக உள்ள கிருஷ்ணகிரி சேலம் மதுரை புதுக்கோட்டை மாவட்டங்களில் நறுமண தொழிற்சாலை அமைக்க வேண்டும். ● தளி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும். ● தென்பெண்ணை ஆற்றின் உபரி நீரை சுற்றுப்புற ஏரிகளுக்கு நிரப்ப வேண்டும். ● அஞ்செட்டியை மையமாகக்கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்க வேண்டும். ● தளி தொகுதியில் வனப்பகுதியை ஒட்டி சோலார் மின்வேலி அமைக்க வேண்டும்.




**சொத்துவரி உயர்வை திரும்ப பெறக்கோரி**

## விருதுநகர் மாவட்டத்தில் 9 மையங்களில் ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தமிழக அரசு அறிவித்துள்ள சொத்து வரிவிதிப்பை திரும்ப பெறக்கோரி 9 மய்யங்களில் ஆர்ப்பாட்டம் நடந்தது. வத்திராயிருப்பில் மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வட்ட செயலாளர் கோவிந்தன், தவிச சவுந்திரபாண்டியன், துணை செயலாளர் மகாலிங்கம் உள்பட பலரும்,

சேத்தூரில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி, நகர செயலாளர் வி.இராஜா உள்ளிட்டோரும், சாத்தூரில் மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் சாமிநாதன், நகர செயலாளர் ஜான்ராஜா, தவிச ஏ.எஸ். சண்முகையா, எஸ்.எஸ்.முத்து உள்பட பலர் கலந்து கொண்டார்கள். திருவில்லிபுத்தூரில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் வி.அழகிரிசாமி, ஒன்றிய செயலாளர் பலவேசம், நகர செயலாளர் மூர்த்தி உள்ளிட்டோரும், சிவகாசியில் மாவட்ட பொருலாளர் சமுத்திரம், வட்ட செயலாளர் ஜீவா, துணை செயலாளர் கலைவாசன், நகர செயலாளர் இக்பால் உள்ளிட்டோரும், இராஜபாளையத்தில் நகர செயலாளர் வி.இரவி, துணை செயலாளர் விஜயன் உள்ளிட்டோரும், அருப்புக்கோட்டையில் மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார், ஒன்றிய செயலாளர் முனியசாமி, துணை செயலாளர் கரியமால் ,திருச்சுழி ஒன்றிய செயலாளர் செல்வம் உள்பட பலரும் , விருதுநகரில் மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் சக்கணன், நகர செயலாளர் முத்துக்குமார், தஓவாஇ முருகேசன் உள்பட கலந்து கொண்டார்கள்.



# சங்கே முழங்கு!

## மாநில கல்விக் கொள்கை உருவாக்கும் குழுவை விரிவுபடுத்திடுக!

### மாணவர் பெருமன்றம் வலியுறுத்தல்

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் மௌ.குணசேகரன், மாநிலச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

சமூக நீதிக் கொள்கையினால் பள்ளிக்கல்வி, உயர்கல்வி ஆகிய இரண்டிலும் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. ஒன்றிய அரசின் கல்விக் கொள்கையை தொடர்ந்து எதிர்த்து வரும் தமிழக அரசு, தற்போது தமிழ்நாட்டிற்கென்று மாநிலக் கல்வி கொள்கையை உருவாக்குவதற்கு குழு அமைத்திருப்பதை பாராட்டி வரவேற்கின்றோம். கல்வியில் மாநில அரசுக்கு உள்ள அதிகாரத்தை முற்றிலுமாக பறித்து, ஒன்றிய அரசிடம் குவித்துக் கொள்கிறது தேசிய கல்விக் கொள்கை.

ஒன்றிய அரசின் தேசிய கல்விக் கொள்கை பொதுக்கல்வி கட்டமைப்பை முழுமையாக சிதைத்து, விளிம்புநிலை மாணவர்களை உயர்கல்விக்கு வரவிடாமல் தடுக்கும் வண்ணம் பல நுழைவுத் தேர்வுகளை கட்டாயப்படுத்துகிறது.

பாடத்திட்டங்களிலும் அறிவியலுக்குப் புறம்பான சனாதன கொள்கைகளை திணிக்கிறது. பல்கலைக்கழகங்கள் தனக்கான நிதியை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்பதன் மூலமாக கல்வி வழங்க வேண்டிய கடமையிலிருந்து அரசு முழுமையாக விலகுகிறது. இன்னும் பல்வேறு ஆபத்தான சரத்துகளை இக்கல்விக் கொள்கை கொண்டிருக்கிறது.

மனித சமூகம் இயங்கக் கூடிய மூன்று அடிப்படை தளங்களான அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றில் பெரும் தீங்கினை விளைவிக்கக் கூடியது, தேசிய கல்விக் கொள்கை. இதற்கு மாற்றாக ஒரு மாநில கல்விக் கொள்கை சிறந்த முறையில் உருவாக்கப்பட வேண்டுமென்றால், அதில் தமிழ்நாடு அரசு அமைத்திருக்கும் குழுவில் இன்னும் சில கல்வியாளர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று கருதுகிறோம். எனவே, இக்குழுவை விரிவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்..

இதன்மூலம், ஒன்றிய அரசின் சனாதன திட்டத்தை கல்வியில் பொருத்துவதற்கான சூழ்ச்சியை உணர்ந்து, மாநிலத்தின் கல்வி உரிமையை பாதுகாக்கும் வகையிலும், அறிவியல் சார்ந்து முற்போக்கான பாடத் திட்டங்களை கொண்டதாகவும், மாநில கல்விக் கட்டமைப்பை பலப்படுத்தும் வகையிலும் ஒரு சிறந்த மாநில கல்விக் கொள்கையை உருவாக்க முடியும் என்று கருதுகிறோம்.

எனவே, தமிழ்நாடு அரசு அறிவித்து இருக்கக்கூடிய குழுவில் இன்னும் அதிகமான கல்வியாளர்களை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டுமென அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழுவின் சார்பில் வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளனர்.

ஆசிரியர் தகுதித் தேர்வு குறித்து

## அரசு கொள்கை முடிவு எடுக்க வேண்டும்

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

கடந்த 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆசிரியர் பணி நியமனம் பெற்றவர்கள் அனைவரும் தகுதித் தேர்வு எழுதி தேர்ச்சி பெற வேண்டும் என்று முந்தைய ஆட்சியில் நிபந்தனை விதிக்கப்பட்டது. இலவச கட்டாயக் கல்வி சட்டப்படி ஒன்றிய அரசு தகுதித் தேர்வை கட்டாயம் ஆக்கியுள்ளது. இத் தகுதித் தேர்வு எழுத, கால அவகாசம் கோரிய ஆசிரியர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருப்பது நியாயமற்றது.

நான்கு லட்சம் ஆசிரியர்களின் பத்தாண்டுக்கும் மேலான பணித் தொடர்ச்சி, அதில் அவர்கள் பெற்றுள்ள திறன் மேம்பாடு ஆகியவற்றை உயர் நீதிமன்றத் தீர்ப்பு கருத்தில் கொள்ளவில்லை. இந்த நிலையில் உயர் நீதிமன்றத் தீர்ப்பால் நான்கு லட்சம் ஆசிரியர்களின் வாழ்வாதாரம் பெரும் நெருக்கடியை சந்திக்கிறது. ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு உரிய சட்ட ஏற்பாடுகளை செய்து, 2011ஆம் ஆண்டுக்கு முன்னர் பணி நியமனம் பெற்ற ஆசிரியர்கள் பணியில் தொடர அரசாணை வெளியிட வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



- சி.பாஸ்கர்



# இதுதான் காதலா?

**அடிப்படையில்லாத எந்த கனவுக்கும், கற்பனைக்கும் ஆயுள் குறைவு. காதல் - காமம் என்ற இந்த இரண்டு மனித உணர்வுகள் எண்ணற்ற பிள்ளைகளை சமூகத்திலும், இலக்கியத்திலும், இதிகாசத்திலும் ஏற்படுத்தியிருக்கின்றன.**

“மனிதனின் சிந்தனை பரிமாணங்கள் அனைத்திற்கும் பொருள்தான் முதன்மையானது” என்பதை ஆணித்தரமாக, அறிவியல் பூர்வமாக நிரூபித்தவர் மார்க்ஸ். உலக காவியங்கள் அனைத்திலும் கரை கண்டவர். காதல் வாழ்விலும் வெற்றி கண்டவர். அவரின் அபிமான கவிஞர் ஷெல்லிதான் காதலைப் பற்றி சரியாக அடையாளப்படுத்தினார்.

காதலுக்கு பொருள்முதல்வாத அடிப்படையோடு, ஆன்மிக மற்றும் வர்க்க பரிணாமம் உண்டு. அதனால்தான் மிகப் பெரிய காதல் காவியங்கள் இந்த அடிப்படையிலிருந்து விலகும்போது மிகப் பெரிய சோகமாக முடிகிறது. “நமது மிக இனிய பாடல்கள் அனைத்தும் சோகத்தின் கதைகளை சொல்பவை” என்றான் ஷெல்லி.

இப்புவிக்கோளின் பரப்பில் தாவரங்கள், விலங்குகள், மனிதன் என அனைத்தும் ஜனித்து ஜீவிக்க வேண்டுமானால் அதற்கு மூன்று அடிப்படை காரணிகள் தேவை. அவை முறையே இனக் கவர்ச்சி – இனச் சேர்க்கை – இனப் பெருக்கம். இது புலனுக்குப் புலப்படாத நுண்ணுயிர்களுக்கும் அவசியத் தேவையாகும்.

இயற்கையின் இந்த இயங்கியல் முறையைத்தான் இலக்கிய வித்வான்கள் மகா காவியமாக்கினார்கள். ஆண் – பெண் என்ற இரண்டு பாலினம் தோற்றத்தில் இரண்டாக காட்சி தரும். ஒரே உயிரின் இரண்டு பரிமாணங்கள். எனவே, ஒன்றை ஒன்று ஈர்த்து ஒன்று கலந்து, இன்னொரு புது உயிரை உருவாக்கும், இயற்கையான இந்த ஈர்ப்புதான் பால் கவர்ச்சி மற்றும் பால் உறவு.

பட்டுக்கோட்டையாரின் சிந்தனையில் சொன்னால், இயற்கை செய்யும் கிளர்ச்சி முறை! தாயும் தந்தையும் ஆக வேண்டும் என்ற உயிர்த்துடிப்பு சகல ஜீவராசிகளின் மரபணுவோடு பின்னிப் பிணைந்துள்ளது.

ஆனால், வரலாறு நெடுகிலும், இது செய்துள்ள சச்சரவுகள் கொஞ்ச நஞ்சமா!! இராவணனின் முறையற்ற செயலால் சீதையை சிறையெடுத்தான். அவன் தலைநகர் தீக்கிரையாகி அவனும் மடிந்தான்.

ஹோமரின் காவியத்தில் நாயகி ஹெலன் பாரிஸ் சிறையெடுத்தான். அவன் தலைநகர் தீக்கிரையாகி அவனும் கொல்லப்பட்டான்.

வர்க்க ஆதிக்கத்தை மீறிய காதலர்கள் துன்பத்தில் துவம்ச மானார்கள். முகலாய இளவரசன் சலீமை காதலித்த நடன மாது அனார்கலி அழிந்து போனாள். ரோமியோவை நெஞ்சம் நெகிழ நேசித்த ஜூலியட் துயர முடிவில் துவண்டு மறைந்தாள். பக்கிம் சந்தரின் சிரஞ்சீவியான கதாநாயகன் தேவதாஸ் பார்வதியை கரம்பிடிக்க முடியாமலேயே துயரக் கடலில் மூழ்கி மறைந்தான்.

**நமது காலத்தில் ஆதிக்க எண்ணமுடையவர்கள் காதலர் களை கொடூரமான முடிவுகளுக்கு தள்ளிக் கொண்டுதான் இருக் கிறார்கள். அதையும் மீறி சாதிமறுப்பு, மத மறுப்பு, பெற்றோர் மறுப்பு திருமணங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. வர்க்க சமுதாய கட்டமைப்பு அடியோடு தகர்க்கப்பட்டு திருமணங்கள் இயற்கையாகவும், இயல்பாகவும் அமையும். அந்த இலட்சிய இலக்கை நோக்கித்தான் நாம் பயணிக்கிறோம். அது தவிர்க்க முடியாமல் நிகழ்ந்தே தீரும்.**

இது ஒருபுறம் இருக்க மகளிர் குடும்பநல நீதிமன்றத்தைப் பார்த்தால் மிகவும் கவலையாகவும், அதிர்ச்சியாகவும் இருக்கிறது. காதலித்து திருமணம் செய்து கொண்டு ஓராண்டிற்குள்ளாகவே மணமுறிவு கோரும் தம்பதிகள் பெரும் கூட்டமாக இருக்கிறார்கள்.

எப்போதும் திரைப்பட காதலர்கள் எழில் மலர்கள் பூத்துக் குலுங்கும் இன்ப சோலையில் டுயட் பாடுவது போல் காதல் வாழ்க்கை இருக்கும் என்று கனவில் சஞ்சரிப்பவர்கள் இந்தக் கூட்டத்தார். ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள் என்ற பழமொழிக்கு இலக்கணமாக திகழ்பவர்கள் இவர்கள்.

ஒரு காதலன் தன்தாயின் அன்பையும், அவரனைப்பையும் தன் காதலியிடம் அடைய வேண்டும். ஒரு காதலி தன் தந்தையின் அன்பையும், பாதுகாப்பையும் தன் காதலனிடம் அடைய வேண்டும். இப்படிப்பட்ட தம்பதிகள் முதுமையிலும் காதலர்களாகவே இருப் பார்கள்.

தன் கணவனின் மறைவை தாங்க முடியாமல் அப்போதே உயிர்நீத்த மனைவியும், தன் மனைவியின் மறைவைத் தாங்க முடியாமல் அக்கணமே உயிர்நீத்த கணவன்மார்கள் உண்டு. இருவரையும் ஒன்றாக எடுத்துச் சென்று இறுதிச் சடங்கு செய்த தம்பதிகள் வரலாறு தமிழ்நாட்டில் உண்டு. இவர்கள் ஊர்மெச்ச தங்களை காதலர் என்று சுய தம்பட்டம் அடித்துக் கொள்ளாதவர்கள். மரணத்திலும் இணைபிரியாத மானுட மகுடங்கள்.

நல்ல காதலனாக தொடங்கி கெட்ட கணவனாக மாறுவதும், நல்ல காதலியாக தொடங்கி கெட்ட மனைவியாக மாறுவதும் இருவர் வாழ்வையும் காதல் என்ற உன்னதமான உறவின் பெயரால் தொலைப்பதுதான் காதலா?

“காதல் என்பது எதுவரை? கல்யாண காலம் வரும்வரை – கல்யாணம் என்பது எதுவரை? கழுத்தினில் தாலி விழும் வரை – பெண்ணுக்கு இளமை எதுவரை? பிள்ளைகள் இரண்டு வரும்வரை” இது கண்ணதாசன் பாடல் வரிகள். அவன் பாடாத காதல் கவிதைகளா? அவனும் வாழ்க்கை இயல்பை சொல்லித்தான் தீர வேண்டும்.

ஒருவரை ஒருவர் புரிந்து இன்ப துன்பங்களை பகிர்ந்து இணை பிரியாமல் வாழ்வதுதான் காதல் வாழ்வின் பரிணாம வளர்ச்சி.

ஷாஜஹான் காதல் மனைவி மும்தாஜ் அவளது 14வது பிரசவத்தில் மரணமடைந்தாள். அந்த வயதில் வனப்பான – வசீகரமான – பொற்சிலையாக – பேரழகியாக அவள் இல்லை. ஆனால், அப்போதும் ஆன்மிக அழகு ததும்பும் எழில் ஓவியமாக திகழ்ந்தாள். தன் அன்புக் கணவரை காதல் பொற்சங்கிலியால் கட்டி வைத்திருந்தாள்.

எண்ணிலடங்கா போர் களங்களை வென்ற அந்த மாவீரன், மனைவியின் மரணத்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளின் நினைவாக உலகம் வியக்கும் நினைவிடத்தை, தாஜ் மஹாலை கட்டி முடித்து அதை தினமும் பார்த்து கண்ணீர்விட்டு கதறி அழுதான். நெஞ்சில் முள்ளாக குத்திக் காயப்படுத்தும் சோக இரணத்தோடு மாண்டு போனான். இதுதான் உடலையும் தாண்டிய உண்மைக்காதல்.

தொடர்புக்கு: 96007 23726




சென்னை ஐ.ஐ.டி.யில் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட

## தலித் மாணவிக்கு நீதி கேட்டு ஆர்ப்பாட்டம்

சென்னை ஐஐடியில் மேற்கு வங்கத்தை சேர்ந்த தலித் மாணவி சக மாணவர்களால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். பேராசிரியர் ஒருவர் சாதிய ரீதியாக அப்பெண்ணை இழிவு படுத்தியுள்ளார். ஆனால் இதுவரை குற்றவாளிகள் ஒருவர் கூட கைது செய்யப்படவில்லை. குற்றவாளிகளை காப்பாற்றும் விதமாகவே செயல்பட்டு வரும் காவல்துறையை கண்டித்தும், குற்றவாளிகள் அனைவரையும் உடனடியாக கைது செய்ய வலியுறுத்தியும்,

ஐஐடியில் தொடர்ந்து நடந்து வரும் மாணவ மாணவியரின் மர்ம மரணங்கள் அனைத்தையும் குறித்து விசாரணை நடத்தி தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வலியுறுத்தியும் சென்னை ஐஐடி வளாகம் முன்பு ஏப். 09 அன்று அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், இந்திய மாதர் தேசிய சம்மேளனம், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் தினேஷ் சீரங்கராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டத்தை நடத்தின. இதில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தேசிய பொதுச்செயலாளர் இரா.திருமலை, இந்திய மாதர் தேசிய சம்மேளன மாநில செயலாளர் மஞ்சுளா, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில செயலாளர்கள் கீ.சு.குமார், எஸ்.கே.சிவா, வட சென்னை மாவட்ட செயலாளர் ஜி.சுப்பிரமணி, அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் மாநில துணைத்தலைவர் ஆ.பிரகாஷ், உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பெண்கள் கலந்து கொண்டனர்.



**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) -ன் 23வது அகில இந்திய மாநாட்டுக்கான வாழ்த்துரையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா பேசியதாவது:**

அன்பார்ந்த தோழர்களே, நண்பர்களே,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) – ன் 23வது அகில இந்திய மாநாட்டிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக புரட்சிகர வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6 தசாப்தங்களுக்கு முன், 1957 ஆம் ஆண்டு மக்களாட்சி முறைப்படி ஒரு கம்யூனிஸ்டு அரசாங்கத்தை தேர்ந்தெடுத்து வரலாறு படைத்திட்ட கேரளத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் 23வது மாநாடு நடைபெறுகிறது. நீண்ட நெடுங்காலமாக, நமது நாட்டின் ஜனநாயக மற்றும் இடதுசாரி இயக்கத்தின் தனித்துவம் மிக்க கேந்திரமாக கேரளம் திகழ்ந்து வருகிறது.

மக்களால் முன்னெடுக்கப்பட்ட எண்ணற்ற போராட்டங்கள் மற்றும் இயக்கங்களின் அடிப்படையில்தான் இத்தகையதொரு ஒப்புயர்வற்ற நிலையை கேரளம் வென்றெடுத்துள்ளது. அத்தகைய போராட்டங்களும், இயக்கங்களும் நமது விடுதலைப் போராட்ட இயக்கத்திற்கும், பின்னர் சுதந்திர இந்தியாவில், மக்கள் நலனை மையமாகக் கொண்ட, கம்யூனிஸ்டுகள் தலைமையிலான ஒரு மாற்று வளர்ச்சி மாதிரியை உருவாக்குவதற்கும் மாபெரும் பங்களிப்பை செய்துள்ளன.

அன்பார்ந்த மாநாட்டு பிரதிநிதிகளே, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு, இந்திய குடியரசின் அடிப்படையான கூறுகள் மீதான வலதுசாரி சக்திகளின் தாக்குதலை நாடு எதிர்கொண்டு வருகிறது. இத்தகையதொரு நெருக்கடியான சூழலில் தான் உங்களின் அகில இந்திய மாநாடு நடைபெறுகிறது. எனினும், வருங்காலம் நம்பிக்கையற்றதாக இல்லை; தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள், மாணவர்கள் ஆகிய வெகுமக்கள் பிரிவினைவாத மற்றும் மக்கள் விரோத நடவடிக்கைகளை சாதாரணமாக கருதவில்லை; போராடிப் பெற்ற தங்களின் உரிமைகளை அவர்கள் தற்காத்துக் கொள்ள வீதிகளில் இறங்கிப் போராடி வருகிறார்கள்.

2008–2009 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பின், உலகின் பல பகுதிகளில் நவீன தாராளமய கார்ப்பரேட் ஆதரவு சக்திகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி உள்ளதால், வலதுசாரி எதேச்சதிகாரத்தின் எழுச்சியானது, ஓர் உலகளாவிய நிகழ்வாக உருவெடுத்துள்ளது. மனிதகுலத்தின் முற்போக்கான, அனைவரையும் உள்ளடக்கிய, அறிவியல் சாதனைகளை அழித்தொழிப்பதில் அத்தகைய வலதுசாரி சக்திகள் உள்ளார்ந்த ஆர்வம் கொண்டுள்ளன. சரிந்து வரும் வாழ்க்கைத் தரம், அதிகரித்து வரும் வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம் காரணமாக எழுந்த நெருக்கடிகளைச் சாதகமாகப் பயன்படுத்தி ஜெர்மனி மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளில் பாசிச சக்திகள் தங்களின் தளங்களை விரிவுபடுத்தி உள்ளன.

அமெரிக்க இராணுவ தளவாட தொழிற்துறையின் நெருக்குதலால் மீண்டும் ஆயுதப் போட்டி அதிகரித்துள்ளதை நாம் பார்க்கிறோம். ரஷ்யா மற்றும் உக்ரைன் மக்களின் உயிர்களைப் பலியிட்டு, அந்தப் பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பை அமெரிக்கா மற்றும் நேட்டோ தலைமையிலான ஏகாதிபத்திய சக்திகள் சீர்குலைத்திட முயன்றன. ஏகாதிபத்திய சக்திகளின் இந்த நடவடிக்கை அவர்களின் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கில் அண்மையில் ஏற்பட்ட நிகழ்வாகும்.

நமது அண்டை நாடுகளான ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, நேபாளம் மற்றும் மியான்மரிலும் பெரும் குழப்பமும், ஸ்திரமற்ற சூழலும் நிலவுகிறது. ஒவ்வொரு நாடும் வெவ்வேறு காரணங்களால் பெரும் நெருக்கடியில் சிக்கிக் கொண்டது போல் ஒரு தோற்றம் உள்ளது. ஆனால், இவை அனைத்திற்கும் பின்னால், சர்வதேச நிதி மூலதனத்தின் மோசமான சூழ்ச்சி இருப்பதை நாம் தெளிவாகக் கண்டுணர முடியும். எனினும், இந்தச் சூழ்ச்சிகள், பல நாடுகளில், குறிப்பாக, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் எதிர்கொண்டு முறியடிக்கப் பட்டுள்ளன.

அன்பார்ந்த தோழர்களே, விடுதலை பெற்று 70 ஆண்டுகள் கடந்த நிலையிலும் நமது நாடு வறுமை மற்றும் அதீத ஏற்றதாழ்வுகளால் பீடிக்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. பட்டினி குறியீடு உள்ளிட்ட சமூக மேம்பாட்டு குறியீடுகளில் நமது நாடு பெரும் சரிவைச் சந்தித்துள்ளது. அச்சம் கொள்ளத்தக்க அளவிற்கு, சமுதாயத்தின் மேல் மட்டத்தில் உள்ளவர்களிடம் செல்வ வளங்கள் குவிந்து வருகிறது. கோடிக்கணக்கான மக்கள் வறுமையிலும், இல்லாமையாலும் வாடுகிறார்கள். பெரிதும் விளம்பரப்படுத்தப்பட்ட வளர்ச்சியின் சமத்துவமற்ற இயல்புத்தன்மையை கோவிட் 19 நெருக்கடி அம்பலப்படுத்திவிட்டது.

நமது தேசத்தை வரையறை செய்யும் அடிப்படையான விழுமியங்களை நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசாங்கம் சீர்குலைத்து வருகிறது. மதச்சார்பின்மை, ஜனநாயகம், கூட்டாட்சி முறை, மக்கள் நல அரசு மற்றும் சுதந்திரமான அயலுறவு கொள்கை ஆகிய அனைத்தும் சீர்குலைக்கப்படுகின்றன. நீதித்துறை, தேர்தல் ஆணையம் மற்றும் நாடாளுமன்றம் ஆகியவை குறைமதிப்பிற்கு

## சி.பி.ஐ.(எம்) மாநா

உள்ளாக்கப்படுகின்றன. நமது அரசமைப்பின் கண்காணிப்பு மற்றும் விசாரணை அமைப்புகளான மத்திய புலனாய்வு நிறுவனம், அமலாக்கத்துறை ஆகியவற்றைச் சட்டப்படி இயங்கவிடாமல், அதற்கு நேர் எதிராக, எதிர்க்கட்சியினரை அச்சுறுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க. ஒருபோதும் உடன்பட்டதில்லை. அவர்கள் தற்போது நமது குடியரசின் அரசியலமைப்புச் சட்ட கூறுகளைச் சீர்குலைத்து வருகிறார்கள்.

சரத்து 370–ஐ தன்னிச்சையாக நீக்கியது, பாகுபாடுமிக்க குடியுரிமை திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது, கார்ப்பரேட் ஆதரவு வேளாண் சட்டங்கள், தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் ஆகியவை மோடி அரசாங்கத்தின் எதேச்சதிகார போக்கிற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். பாஜக, அதன் நாடாளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தை குறைமதிப்பிற்கு உள்ளாக்குகிறது. ஆளும்கட்சியின் விருப்பங்களுக்கு கீழ்ப்படிந்து பணியாற்றும் அமைப்பாக நாடாளுமன்றத்தை சீர்குலைத்து வருகிறது. மக்களின் இறையாண்மையை நாடாளுமன்றம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## முல்லை பெரியாறு அணையை பயம் காட்

### தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தீர்மானம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக் குழு கூட்டம் திருச்சி பெரியமிளகு பாறை மாணிக்கம் இல்லத்தில் மாநில தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி நடைபெற்ற வேலைகள் பற்றியும் எதிர்கால திட்டங்கள் குறித்தும் பேசினார். கூட்டத்தில் மாநில துணை தலைவர்கள் சி.எம்.துளசிமணி, பெரும்படையார், புதுச்சேரி மாநில தலைவர் து.கீதநாதன் மற்றும் மாநில நிர்வாகக்குழு, மாநிலக் குழு உறுப்பினர்கள், ராஜேந்திரன் எக்ஸ்.எம்.எல்.ஏ., திருச்சி அயிலை சிவசூரியன், ஆர்.பழனிசாமி, ஜி.ரமேஷ், தஞ்சாவூர் பன்னீர்செல்வம், மதுரை சந்தானம், வேலூர் முல்லை, தூத்துக்குடி கிருஷ்ணமூர்த்தி, இராமநாதபுரம் கருணாநிதி, கோவை சுபமணிசாமி, திருவண்ணாமலை நாராயணசாமி, தூத்துக்குடி லெனின்குமார், திருவாரூர் யோகநாதன், புதுக்கோட்டை சோமையா, தேனி காசி விஸ்வநாதன், சேலம் சின்னதம்பி, விழுப்புரம் கலியமூர்த்தி, கிருஷ்ணகிரி வெங்கடாஜலம், கரூர் தங்கவேல் உள்ளிட்டோர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழக குடிநீர் மற்றும் காவிரி பாசனத்தை முடக்கிடும் மேகதூத் அணையை தடுத்திட கோரி...




தமிழக காவிரி பிரச்சினைக்கு 1956 நதிநீர் தாவா சட்டப்படி நடுவர் மன்றம் அமைக்க கோரி போராட்டம் தொடங்கியது. இடைக்கால தீர்ப்பு.. இறுதித் தீர்ப்பு... காவிரி வாரியம் உச்சநீதிமன்ற தீர்ப்பு என கடந்த ஐம்பது ஆண்டுகள் பல போராட்டங்கள் நடத்தி பெற்றது காவிரிஆணையம். ஒவ்வொரு தீர்ப்பு வரும் போதும் 205 டிஎம்சி லிருந்து தொடங்கி 174 ஆக குறைந்து போனது. இருந்தும் தமிழகம் ஏற்றது. இந்த தீர்ப்பின் படி மாதாந்திர தேவையின் அடிப்படையில் கர்நாடகம் தண்ணீரை வழங்காமல்.. தமிழகம் வெள்ளக்காடாக இருக்கும் பொழுது தன்னுடைய பாதுகாப்பிற்காக தண்ணீரை திறந்துவிட்டு தீர்ப்பின்படி வழங்கி விட்டதாக கர்நாடகம் ஏமாற்றி வருகிறது. இந்த நிலையில் காவிரி நீர் உரிமை பெற்ற மாநிலங்களின் எதிர்ப்பின்றி ..காவிரி ஆணையம் மறுத்தும் ..மத்திய நீர்வள ஆணையம்.. சுற்றுச்சூழல் ..வனத்துறை அனுமதி இல்லாமலும்.. இறையாண்மை கூட்டாட்சி கோட்பாட்டிற்கு எதிராக கர்நாடக அரசு நிதிநிலை அறிக்கையில்... மேகதாது அணை கட்டிட ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது .இதனால் தமிழக காவிரி நீர்வரத்து முற்றாக தடைபடும் என தமிழ்நாடு அரசு ஏகமனதாக நிறைவேற்றிய சட்டமன்றத் தீர்மானத்தை எதிர்த்து..கர்நாடக சட்டமன்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசை கண்டித்து தீர்மானம் போட்டுள்ளது. இந்நடவடிக்கைகளைஇக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. மேகதாது அணை கட்டுமானத்திற்கான நிதி ஒதுக்கீட்டை ரத்து செய்திட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும். ஒன்றிய அரசு மேகதூத் அணைக்கு அனுமதி கொடுக்காது என்று உத்தரவிட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக்குழு வலியுறுத்துகிறது.

பாதுகாப்பான முல்லை பெரியாறு அணையை... பயம் காட்டி 5 மாவட்டமக்களின் குடிநீர்.. பாசன உரிமையை பறிக்காதே..

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாக பலமாக உள்ளது என தொடர்ந்து தொழில்நுட்ப வல்லுனர்களின் ஆய்வு மூலம் உறுதிப்படுத்தியும், உச்ச நீதிமன்றம் இதை ஏற்று ஒப்புதல் அளித்ததும் இந்த அணையை இடித்து விட வேண்டுமென கேரளாவில் இருந்து பல தனிநபர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குப் போட்டும்... நடிகர்களின் பிரச்சாரம் மூலமும்.. கேரள அரசியல் கட்சிகள் முல்லை பெரியாறு அணைக்கு எதிராக தவறான பிரச்சாரம் செய்து வருகின்றன. இந்தப் போக்கை எதிர்த்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மக்கள் சந்திப்பு பிரச்சாரம் மற்றும் கவனஈர்ப்பு போராட்டத்தை அங்கு நடத்தியது. இந்த நிலையில் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு தற்காலிக தீர்வை தந்துள்ளது. நிரந்தர தீர்வு என்பது 152 அடிதண்ணீரை முல்லை பெரியார் அணையில் தேக்கி தமிழகம் முழுமையாக பயன்படுத்திக்



**முதலாளி வர்க்கத்தின் தனியுடைமையை ஒழித்து, அந்த இடத்தில் ஜனநாயக புரட்சி வழியில் பாட்டாளி வர்க்கத்தின் பொதுவுடைமையை உருவாக்குதல் என்பதே கம்யூனிஸ்ட்களின் பிரதான குறிக்கோள்.**
**– எங்கெல்ஸ்**

## புறவயமான அரசியல் சூழலை அடிப்படையாகக் கொண்டு

# நமது எதிர்கால திட்டத்தை வகுக்க வேண்டும்

## ட்டில் டி.ராஜா பேச்சு

நமது நாட்டின் உயர்மட்ட விவாத அரங்கம் எனும் நாடாளுமன்றத்தின் சிறப்பு அம்சத்தை பாஜக பறித்துள்ளது. அரசாங்கத்தையும், அதன் கொள்கைகளையும் எதிர்த்து கேள்வி எழுப்புகிறவர்கள் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டும், கொடூரமான உபா சட்டமும் பாய்கின்றன. அரசாங்கத்தின் செயல்பாடுகளை விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுகுபவர்கள் மீது, ஊடகங்களின் உதவியுடன், தேசத் துரோகிகள் என்றும், பயங்கரவாதிகள் என்றும் முத்திரை குத்தப்படுகிறது. விளிம்புநிலை மக்களுக்காகவும், மனித உரிமைகளுக்காகவும் பணியாற்றும் செயல்பாட்டாளர்கள் (பீமா கோரேகான் சர்ச்சையில் நிகழ்ந்ததைப் போல்) அரசு எந்திரத்தின் துணை கொண்டு தாக்கப்படுகிறார்கள்.

நமது மதச்சார்பற்ற, ஜனநாயக குடியரசின் படிநிலைகளான பகுத்தறிவு, அறிவியல் மனப்பான்மை மற்றும் அரசியலமைப்பு அறநெறி ஆகியவை திட்டமிட்டு தகர்க்கப்பட்டு வருகின்றன. பா.ஜ.க. தலைமையிலான ஒன்றிய அரசங்கம் நமது குடியரசின் அடித்தளங்களை அழித்து வருவதுடன் நாடாளுமன்றத்திற்கு உள்ளும், புறமும் கடுமையான எதிர்ப்புக்கு உள்ளாகி வரும் நவீனதாராளமய பொருளாதார கொள்கைகளைக் கடைபிடித்து வருகிறது. ஜிஎஸ்டி மற்றும் பணமதிப்பிழப்பு ஆகியவற்றின் தாக்கம் மீட்புக்கு பெரும் தடையாக உள்ளது. 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார பேரழிவின் தீவிரத்தைக் குறைத்து, தேசத்தை சுயசார்பு மிக்கதாக உருவாக்கிய பொதுத்துறை இப்போது தனியார்மயமாக்கப்படுகிறது. இரயில்வே, எல்.ஐ.சி. மற்றும் பொதுத்துறை வங்கிகளை விற்பதற்கான திட்டங்கள் அண்மையில் வகுக்கப்பட்டுள்ளன. பொதுத்துறை வங்கிகள் கபளீகரம் செய்யப்படுகின்றன. ஆளும் கட்சியின் பேராதரவுடன் சில குறிப்பிட்ட நிறுவனங்கள் மட்டும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை பொதுத்துறை வங்கியில் இருந்து கடனாகப் பெற்று ஏமாற்றி உள்ளன. பொருளாதார குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பியோட அனுமதிக்கப்படுகிறார்கள்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வேலையின்மை அதிகரித்துள்ளது. பணவீக்கத்தால் வெகுமக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி இருக்கிறார்கள். மோடி அரசாங்கத்தின் கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகள் ஒரு சில கார்ப்பரேட் நிறுவனங்களிடம் செல்வ வளங்களைக் குவியச் செய்ததுடன், வரலாறு காணாத ஏற்றத்தாழ்வை உருவாகியுள்ளது.

பாஜக–ஆர்எஸ்எஸ் ஆட்சியில் சாதி மற்றும் மத அடிப்படையிலான பாகுபாடுகள் அதிகரித்துள்ளன. ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதன் கிளை அமைப்புகள் இந்திய சமூகத்தை வகுப்புவாத அடிப்படையில் தொடர்ந்து குவிமையப்படுத்துவதுடன், அச்ச உணர்வு, வெறுப்புணர்வு மற்றும் பிளவுகளை உருவாக்கி வருகின்றன. ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க கூட்டணி வரலாறைத் திருத்தி எழுத முயலுவது மட்டுமின்றி, இந்திய தேசத்தை மறுவரையறை செய்திட மூர்க்கத்தனமாக முயன்று வருகிறது. அவர்கள் தற்போது நிர்மாணித்து வருவதாகக் கூறும் 'இந்து தேசியத்தை', அரசியலமைப்புச் சட்ட உருவாக்கத்தின் போது டாக்டர் அம்பேதகர் உறுதியாக மறுதலித்தார். அவர் முன்வைத்த சாதி ஒழிப்பு கருத்தை மனுவாத ஆர்எஸ்எஸ் முற்றாகப் புறந்தள்ளியதுடன் சாதியப் படிநிலைகள் மற்றும் பாகுபாட்டை முன்னிறுத்தும் சித்தாந்தத்தை நிலைத்திருக்கச் செய்யும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

ஆர்எஸ்எஸ் தலைமையின் கீழ், தலித்துகள் மற்றும் பழங்குடியினர் மீதான தாக்குதல்கள் பன்மடங்கு அதிகரித்துள்ளது. சாதிய அடக்குமுறைகள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. சாதி எதிர்ப்பு சக்திகளை அணிதிரட்டி, இடதுசாரிகள் தங்களின் போராட்டங்களைத் தீவிரப்படுத்த வேண்டும்.

பெண்களைத் தாழ்ச்சியுற்றவர்களாகப் பார்க்கும், நீதிக்கும் சமூக சமத்துவத்திற்கான அவர்களின் முயற்சிகளைச் சிறுமைப்படுத்தும் மனுவாத செயல்திட்டத்தின் கீழ் ஆணாதிக்க சமூக அமைப்பு வலுவடைந்து வருகிறது. பா.ஜ.க–ஆர்.எஸ்.எஸ் க்கு எதிரான நமது சமரசமற்ற போராட்டத்தில் பாலின பிரச்சனைகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும். பெண்கள் இடஒதுக்கீடு, பிரதிநிதித்துவம் மற்றும் பாலின சமத்துவம் ஆகியவற்றுக்காக கீதா முகர்ஜி உள்ளிட்ட தோழர்கள் போராடினார்கள். அந்தப் போராட்டத்தை இப்போது நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நூற்றாண்டு கால இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம், தேசத்தின் அரசியல் போக்கை வடிவமைப்பதிலும், மாற்றியமைப்பதிலும் மிக முக்கிய பங்காற்றி வருவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தேசத்துக்கான செயல்திட்டத்தை வடிவமைப்பதில் நமது வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்பு பற்றி நாம் உணர்ந்திட வேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு தொடங்கி இந்திய சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான போராட்டங்கள் வரை, கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து முன்களத்தில் நின்று போராடி வருகிறார்கள். ஒவ்வொரு வெகுமக்கள் போராட்ட இயக்கத்துக்கும் ஒரு முற்போக்கான சித்தாந்த அடிப்படை கொண்ட செயல் திட்டத்தை கம்யூனிஸ்டுகள் வழங்கியுள்ளார்கள். இந்த நூற்றாண்டில் இந்திய சமுதாயம் மாபெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளது. சீராகப் பரிணமித்து வரும், புறவயமான அரசியல் சூழலை அடிப்படையாகக் கொண்டு நமது எதிர்கால திட்டத்தை வகுத்திட வேண்டும்.

இந்திய சூழலில் மார்க்சியத்தை நடைமுறைப்படுத்தும் போது, சாதி, வர்க்கம் மற்றும் ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டங்களைக் கம்யூனிஸ்டுகள் தீவிரப்படுத்த வேண்டும். இந்தியாவில் புரட்சி என்பது சமூக நீதி, சமத்துவம் மற்றும் சோஷலிசம் ஆகியவற்றை வென்றெடுப்பதற்கான, அனைத்துவித சுரண்டல்கள் மற்றும் அடிமைத்தனத்திற்கு எதிரான வர்க்கப் போராட்டத்தை கூர்மைப்படுத்துவது ஆகும்.

கம்யூனிஸ்டுகளாகிய நாம், உழைக்கும் மக்களுக்கான வீட்டுவசதி, கல்வி, மருத்துவம் மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்டவை குறித்த பிரச்சனைகளுக்கான மக்கள் இயக்கங்களை கட்டமைக்க வேண்டும்.

அண்மையில், செய்தி ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்த பிரதமர் மோடி, "கம்யூனிஸம் ஓர் ஆபத்தான சித்தாந்தம்" என்று கூறினார். அவரது இந்தக் கூற்றுக்கு நான் பதில் உரைத்தேன்: "ஆம் திரு மோடி! ஆர்எஸ்எஸ் அமைப்பின் வகுப்புவாத சித்தாந்தத்திற்கு நாங்கள் ஆபத்தானவர்கள் ஆவோம். உங்களின் பிரிவினைவாத செயல்திட்டத்திற்கு நாங்கள் ஆபத்தானவர்கள் ஆவோம். தேசத்தின் சொத்துக்கள் சூறையாடப்படுவதற்கு எதிராக, முதலாளித்துவத்திற்கு எதிராக சமரசமின்றி தொடர்ந்து போராடி வருவதால் நாங்கள் ஆபத்தானவர்கள் ஆவோம். ஆர்எஸ்எஸ் க்கு சித்தாந்த எதிர்ப்பை முன்வைப்பவர்கள் என்பதால் நாங்கள் ஆபத்தானவர்கள் ஆவோம். ஆம், ஆர்எஸ்எஸ் தேசத்திற்கு ஆபத்தானது என்பதால் நாங்கள் ஆர்எஸ்எஸ் க்கு ஆபத்தானவர்கள் என்பதை நான் ஏற்கிறேன்!"

தோழர்களே, இடதுசாரிகளால் மட்டுமே ஆர்.எஸ்.எஸ்–ஐ சித்தாந்த ரீதியாக எதிர்த்து நின்று முறியடிப்பதற்கான மாற்றை வழங்கிட முடியும். பாகுபாடு கொண்ட அரசாங்கத்தை அகற்றிட, ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வெறுப்புணர்வைத் தூண்டும் சித்தாந்த மேலாதிக்கத்தை நமது சமுதாயத்தில் இருந்து களைந்திட, அனைத்து முற்போக்கு மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளை நமது போராட்டம் ஒன்றுபடுத்த வேண்டும். இது நமது வரலாற்று கடமை என்பதால் இதர மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் மாநில கட்சிகளுடன் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கொள்கை அடிப்படையில் கம்யூனிஸ்ட் இயக்கம் ஒன்றுபட வேண்டும் என்பது தான் தற்போதைய சூழலின் தேவையாகும் என்பதை எங்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

நாம் ஆர்.எஸ்.எஸ்.க்கு ஆபத்தானவர்கள் என்பதை நிரூபிப்பதே இன்று நம் முன் உள்ள சவால் ஆகும்.

அரசியல் மற்றும் சித்தாந்த ரீதியாக ஆர்.எஸ்.எஸ். ஐ முறியடிப்பதற்கான ஒற்றுமையை எவ்வாறு வென்றெடுக்கப் போகிறோம் என்பது குறித்து நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அனைத்து பிரச்சனைகள் குறித்தும் ஆழமாகச் சிந்தித்து, கலந்தாலோசித்து, விவாதித்து இன்றைய எதார்த்த சூழலுக்கு உகந்த தெளிவான செயல்திட்டங்களை வகுத்திட, உங்களின் 23வது அகில இந்திய மாநாடும், 2022 அக்டோபர் மாதத்தில் நடைபெற உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது அகில இந்திய மாநாடும் ஆகச்சிறந்த களமாக அமைந்துள்ளது.

தோழர்களே, நண்பர்களே... இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) – ன் 23வது அகில இந்திய மாநாட்டு விவாதங்கள் இடதுசாரி ஒற்றுமைக்கும், ஆர்.எஸ்.எஸ்–பாஜகவுக்கு எதிரான போராட்டங்களுக்கும் வலுசேர்க்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ன் 23வது அகில இந்திய மாநாடு வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

இடதுசாரி ஒற்றுமை ஓங்குக!

மார்க்சிய லெனினியம் நீடூழி வாழ்க!

புரட்சி ஓங்குக!

தமிழில்: **அருண் அசோகன்**

# டி குடிநீர், பாசன உரிமையை பறிக்காதே

கொள்ளும் நிலையை தமிழக அரசு உரிய முறையில் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள மேற்பார்வை குழுவிடம் வலியுறுத்தி பெற்றிட வேண்டும் என மாநிலக்குழு கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

அழகுத் தமிழும் .. மிளிரும் மலையாளமும் இணைந்த அண்டை மாநில மக்களின் நல்லுறவு தொடர செய்திட கேரள அரசை இக்கூட்டம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது. வடிகால்கள் மராமத்து பணிகளை மே மாத இறுதிக்குள் முடிக்க வேண்டும்.

நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையிலேயே பாசன வடிகால் கட்டமைப்புகளை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு செய்தாலும் பொதுப்பணித்துறை திட்டமிட்டு ஏப்ரல் இறுதியில் பணிகளுக்கான முன்மொழிவுகளை அரசிடம் கொடுத்து தொழில்நுட்ப அனுமதி பெற்று பணிகளை துவக்கி முடித்திட ஜூன் மாதம் வரை இத்துறை எடுத்துக் கொள்ளும்.இப்படி இந்த பணிகள் செய்து முடிக்கும் முன்பே ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்படும். பணிகள் முடிந்தும் முடியாமல் கணக்கு முடிக்கப்படும்.

எனவே தமிழக அரசு ஒதுக்கீடு செய்த நிதி விரயமாகாமல் பணிகள் முறையாக செய்திட தற்போது இப்பணிகளுக்கான அனைத்து அனுமதியையும் ஏப்ரல் இறுதிக்குள் வழங்கி ..மே மாதம் இறுதிக்குள் பணிகளை முடித்திட அறிவுறுத்திட வேண்டும்.

கடந்த ஆட்சியில் ஆளும் தரப்பினர் போலியான பாசனதாரர் சங்கம் அமைத்து முறைகேடு நடந்தது.

எனவே பயன் பெறும் பாசனதாரர்களை கொண்ட பாசனதாரர் சங்க மே 10 சதம் அதன் பங்குடன் அனுமதிக்கப்பட்ட பணிகளைச் செய்திட ஆணையிட வேண்டும். நிதி ஒதுக்கீடு மற்றும் அளவு உள்ளிட்ட பெயர் பலகை ஆங்காங்கே வைத்திட வேண்டும்.

2022–23 தமிழக வேளாண் தனி நிதிநிலை அறிக்கை வரவேற்பு மற்றும் கூடுதல் திட்டங்கள் கோறுதல்..

வேளாண்மைக் கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்திட வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி வந்த நிலையில்.. இந்தியாவிலேயே தமிழக அரசு மட்டும் தான் இரண்டாவது தடவையாக வேளாண் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்துள்ளது. இதை வரவேற்கின்றோம்.. வேளாண்மை வளர்ச்சி மற்றும் விவசாயிகள் வருமான உயர்வு என்ற தளத்தை நோக்கி இந்த அறிக்கையில் பல புதிய அம்சங்கள் உள்ளன.

கடந்தாண்டை விட கூடுதலாக 232 கோடி ரூபாய் மட்டுமே நடப்பாண்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

✷ வேளாண் கடன் வழங்கிட ஒரு லட்சத்து 81 ஆயிரம் கோடி வழங்குவதும் இதில் தவறுகள் களையும் முயற்சியும் நல்லது.

✷ பயிர் காப்பீடு திட்டத்திற்கு 2339 கோடி..

✷ ஏழரை லட்சம் ஏக்கர் தரிசு நில மேம்பாடு திட்டம்

✷ மாவட்டம் தோறும் உழவர் சந்தைகளில் சிறு தானியங்கள் விற்பனை..

✷ கலப்பின மீன்களை தவிர்க்க பாரம்பரி மீன்கள் வளர்ப்புக்காக சிறப்பு மானியம் ..

✷ தூர்வாரிட 4984 கிலோ மீட்டருக்கு 80 கோடி ரூபாய்..

✷ விவசாயத்தை மேற்கொள்ளும் வேளாண் பட்டதாரி இளைஞர்களுக்கு தலா ஒரு லட்சம் உதவி..

✷ 7500 ஏக்கரில் இயற்கை விவசாயத்திற்கு 400 கோடி.. ...

✷ சிறு தானிய மண்டலங்கள்....

என்ற தற்போதைய தேவைக்கான பல்வேறு திட்டங்களின் எண்ணிக்கையும் தொகையும், குறைவாக இருந்தாலும் பாராட்டுக்குரியது.

வேளாண் துறை என்பதை வேளாண் மற்றும் உழவர் நலத்துறை என்ற பெயர் மாற்றத்திற்கேற்ப மேலும் பல திட்டங்களை அமலாக்க வேண்டிய அவசியம் உள்ளது .

1. நெல் குவிண்டால் ரூபாய் 2500 ..கரும்பு டன் ஒன்று ரூபாய் 4,000... சிறுதானியங்களுக்கான அரசு உத்தரவாத கொள்முதல் மற்றும் விலை நிர்ணயம்..

2. தனியார் காப்பீடு திட்டம் விவசாயிகளுக்கு உரிய உதவிகள் இல்லாத நிலையில் மாநில அரசே காப்பீட்டு திட்டத்தை ஏற்று நடத்துவது..

3. சாகுபடி முதலீட்டு மானியம் ஏக்கர் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் வருடந்தோறும் மற்ற சில மாநிலங்கள் போல் வழங்கிடுவது...

4. நெல் சாகுபடி பருவத்தை குறைத்து மாற்றுப்பயிர் சாகுபடிக்கான தொழில்நுட்பம் கள உதவிகளுடன் புதிய திட்டம் ..

5. வேளாண் விளைப்பொருட்கள் அனைத்துக்கும் விலை நிர்ணயம் மற்றும் அரசு கொள்முதல் உத்தரவாத திட்டம்..

6. நிலத்தடி நீர் செறிவூட்டலுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு..


7. பாரம்பரிய வேளாண் வளர்ச்சிக்கு கூடுதல் திட்ட ..மானிய உதவிகள்..

8. வேளாண் உற்பத்தி பொருட்களைக் கொண்டு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பிற்கான கூடுதல் நிதி ஒதுக்கீடு ...

9. வேளாண் துறையே வேளாண் இடுபொருட்கள் அனைத்தையும் விவசாயிகளுக்கு விற்பனை செய்திடும் திட்டம் ...

10. வேளாண்மை துறையில் களப்பணியாளர்களை கூடுதல் படுத்தி விவசாயிகளின் தொடர்பை அதிகப்படுத்துதல்...

இது போன்ற பெரும் எதிர்பார்ப்புகளை வேளாண் நிதி நிலை அறிக்கை இறுதி செய்யும் போது இணைக்க வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



**வர்க்கப் போராட்டத்தின் பல்வேறு கட்டங்களின் வழியாக, தாங்கள் செல்ல வேண்டியிருக்கும் என்பது தொழிலாளி வர்க்கம் உணர்ந்த ஒன்றாகும். நடைமுறை அனுபவத்தின் மூலம் இவற்றை கடந்து செல்லும். - மார்க்ஸ்**





## பல்கலைக்கழகங்களுக்கு மூடுவிழா காணும்

# தேசிய கல்வி கொள்கை

-கே. கதிரவன்

**பல்கலைக்கழக மானியக்குழு முனைவர் பட்ட படிப்பிற்கு முதுநிலை பட்டப்படிப்பு கட்டாயம் தேவையில்லை என்ற அறிவிப்பை தற்பொழுது வெளியிட்டுள்ளது. அதாவது முனைவர் பட்டப் படிப்பிற்கு இளங்கலை பட்டப்படிப்பு போதுமானது என்ற அறிவிப்பை அறிவித்துள்ளது.**

இதுவரை முனைவர் பட்ட படிப்பை மேற்கொள்வதற்கு இளங்கலை மூன்று வருடங்களும், அதன் பிறகு இரண்டு வருடங்கள் முதுநிலை பட்டப் படிப்பும் அவசியமானது.

அதுபோல் முதுநிலை பட்டப்படிப்பில் குறைந்தது 55 சதவிகித மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும், இதன்படி முனைவர் படிப்பை குறைந்தது மூன்று வருடங்களிலிருந்து ஐந்து வருடத்திற்குள் முடிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக்குழு கால நிர்ணயம் செய்திருந்தது.

அதேபோல் முதுநிலை படிப்பை படித்த பின் எம்.பில். என்கின்ற ஒரு வருட பட்டப் படிப்பை முடித்தவர்களும் குறைந்தது 2 வருடத்திற்குள்ளாக முனைவர் படிப்பை நிறைவு செய்யலாம். இது தற்போது நடைமுறையில் இருக்கின்ற கல்வி திட்டமாகும், தற்போது மத்திய அரசு அறிவித்து இருக்கின்ற கல்வி திட்டத்தின்படி இளங்கலை மூன்று வருட பட்டப்படிப்பை 4 வருட ஹானர் பட்டப் படிப்பாக மாற்றி இருப்பதால் இந்த நான்கு வருடங்கள் முனைவர் படிப்புக்கு போதுமானது என்று பல்கலைக்கழக மானியக் குழு முடிவெடுத்துள்ளது.

இந்த அறிவிப்பின் மூலம் மாணவர்களுக்கு நன்மை ஏற்படும் என்று நினைத்தாலும் இந்த கல்வித் திட்டத்தினால் அதிகம் பாதிக்கப்படுவது ஒடுக்கப்பட்ட, கிராமப்புற மற்றும் பட்டியல் இன மாணவர்கள்.

முதலாவதாக இத்திட்டத்தினால் எம்பில் என்ற பட்டப் படிப்பு இனி வருகின்ற காலங்களில் தேவைப்படாமல் போகின்ற சூழ்நிலை உள்ளது. கடந்த காலங்களில் எம்பில் பட்டப் படிப்பு என்பது முதுநிலை பட்டம் பெற்ற மாணவர்கள் முனைவர் பட்ட ஆராய்ச்சி மேற்கொள்வதற்கு முன் ஆராய்ச்சியைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவும் ஆராய்ச்சி பற்றிய நுணுக்கங்களை தெரிந்து கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்ட படிப்பாகும்.

இந்த எம்பில் பட்டப்படிப் ஆனது ஒரு பருவத்தேர்வு பாடத்திட்டமும், மறு பருவத் தேர்வில் முழுவதுமாக ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த எம்பில் படிப்பை முடித்து முனைவர் படிப்பிற்கு செல்லும் மாணவர்கள், இதுவரை தான் கற்றுக்கொண்ட ஆராய்ச்சியின் மூலமாக முனைவர் படிப்பு ஆராய்ச்சியை மேற்கொள்கிறார்கள்.

அதாவது முனைவர் படிப்பிற்கு அடி எடுத்து வைக்கும் மாணவர்கள் எம்பில் படிப்பை முடித்து இருந்தால் அவர்களுக்கு எளிதாக ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு எளிதாக அமையும் , ஆகையால் முனைவர் படிப்பை விரும்பும் மாணவர்கள் முதலில் எம்ஃபில் என்ற இந்தப் பாடத்திட்டத்தை படித்து நிறைவுசெய்து அதன் வழியாக ஆராய்ச்சிகளை மேற் கொள்வதற்கான வழிமுறைகளை கண்டறிந்து பின்பு பல்கலைக்கழக பேராசிரியர்களின் உதவியுடன் தங்களின் முனைவர் படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்கின்றனர். எம்பில் பட்டப்படிப்பு முனைவர் பட்டப் படிப்பிற்கு தேவையில்லை என்ற சூழ்நிலை வரும்போது கிராமப்புற ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மாணவர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்ற சூழ்நிலை உருவாகி உள்ளது.

மாணவர்கள் தாங்கள் படித்துக் கொண்டிருக்கின்ற கல்லூரியிலே உள்ள எம்பில் பட்டப்படிப்பை முடித்து அதன் மூலம் கிடைத்த தொடர்பின் மூலம் பல்கலைக்கழகங்களில் தொடர்பை ஏற்படுத்தி முனைவர் பட்ட படிப்பை நிறைவு செய்கின்றனர்.

தேசிய கல்வி கொள்கையில் முனைவர் பட்டப் படிப்பிற்கு முதுநிலை பட்டப் படிப்பு தேவை இல்லை என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. அதாவது எம்ஏ, எம்எஸ்சி, எம்டெக் போன்ற பட்டப் படிப்புகள் இனிவரும் காலங்களில் தேவையில்லை என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. பள்ளிக் கல்வி முடித்த பின் மாணவர்கள் இளங்கலை பட்டப் படிப்பின் மூலம் படித்து அதன் பிறகு முதுநிலை பட்டப் படிப்பை படிக்கின்றனர் அதாவது தாங்கள் எடுத்த கொண்ட பாடத்தில் அனைத்தையும் கற்றுணர்ந்து பிறகு முதுநிலை படிப்பு தேவை என்று உணர்ந்து அதற்கென்று வகுத்த பாடத்தை கற்று வருகின்றனர்.

ஆகையால் ஆராய்ச்சி மேற்கொள்ள விரும்புகின்ற மாணவர்கள் முதுநிலை படிப்பை படித்து அதன் மூலமாக தங்களின் படிப்பில் நிறைவை அடைந்து அதன் பிறகு ஆராய்ச்சி மேற்கொள்கின்றனர் ஆனால் தற்பொழுது இந்த முதுநிலை பட்டப்படிப்பை தேவையில்லை என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் இளங்கலை பட்டப்படிப்பு கிடையாது. அதாவது ஒவ்வொரு பல்கலைக்கழகம் தன்னை சார்ந்து உள்ள அரசு அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்லூரிகளில் மூலமாகத்தான் இளங்கலை பட்டப் படிப்புகளை பயிற்றுவிக்கின்றனர். ஆகையால் பல்கலைக்கழகங்கள் இளங்கலை பட்டப்படிப்பை போதிக்காமல் முதுநிலை, எம்பில் மற்றும் முனைவர் பட்ட படிப்பை மட்டும் போதித்து ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

**இந்த தேசிய கல்வி கொள்கையின்படி முனைவர் பட்டப் படிப்பிற்கு இளங்கலை பட்டப் படிப்பு மட்டும் போதும் என்றால் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் உள்ள முதுநிலை பட்டப் படிப்பில் சேர விருப்பமில்லாமல் சென்றுவிடுவார். இதனால் முதுநிலை பட்டப் படிப்பில் மாணவர்களின் சேர்க்கை குறையும் சூழ்நிலை ஏற்படும். பின் பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கை இல்லை என்பதால் முதுநிலை பட்டப்படிப்பிற்கு மூடுவிழா நடத்தப்படும் என்ற சூழல் ஏற்படும்.**

இதன் காரணமாக தற்போது முதுநிலை பட்ட பட்டப்படிப்பை போதித்துக் கொண்டிருக்கின்ற பேராசிரியர்களின் நிலை என்ன ஆகும் என்று தெரியவில்லை, அதேபோல் இந்த பல்கலைக் கழகங்களிலும் சூழ்நிலை எந்த விதத்தில் மாறும் என்றும் நாம் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

ஏற்கனவே பல்கலைக்கழகங்கள் நிதி பற்றாக்குறையால் தவித்து வருகின்றது நிலை ஏற்பட்டுள்ளது. அதில் மேலும் மாணவர்கள் இல்லாத சூழ்நிலையில் ஒவ்வொரு பல்கலைக்கழகமும் மூடும் சூழ்நிலை ஏற்படும் அபாயம் உள்ளது.

பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி என்பது கடந்த காலங்களை ஒப்பிடும்போது மிகவும் மோசமான சூழ்நிலை உள்ளது, இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் சிஏஜி அறிக்கையின் படி பல்கலைக் கழகங்கள் தங்கள் வருவாயில் பெருவாரியான நிதியை ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு மாத ஊதியமாக வழங்கி வருவதால், ஆராய்ச்சிக்கு என்று பல்கலைக் கழகங்களால் நிதியை ஒதுக்க முடியாததால் ஆராய்ச்சி குறைந்து வருகின்றது. இந்த சூழ்நிலையில் பல்கலைக் கழகங்களில் மாணவர்களை சேர்க்க இயலாத சூழ்நிலையை ஏற்படுத்தி ஆராய்ச்சிக்கும் தனியாக நிதி ஒதுக்காமல் இருந்தால் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் மூட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் அல்லது தனியார் அல்லது வெளிநாட்டு பல்கலைக் கழகங்களுடன் இணைந்து அல்லது கூட்டு சேர்ந்து போதிக்கின்ற சூழ்நிலை ஏற்படும்.

இதன் காரணமாக கிராமப்புற ஒடுக்கப்பட்ட மற்றும் பட்டியலின மாணவர்களின் முனைவர் பட்ட படிப்புக்கும் மற்றும் ஆராய்ச்சி கனவும் தகர்க்கப்படும் என்ற சூழ்நிலையை பல்கலைக்கழக மானியக்குழு உருவாக்கியுள்ளது.

தமிழகத்திலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள் அனைத்திலும் முதுநிலை பட்டப்படிப்பு இயங்கி வருகின்றது. இக்கல்லூரியில் பெரும்பாலும் கிராமப்புற மற்றும் ஒடுக்கப்பட்ட மாணவர்களுக்காக இயங்கி வருகின்றது. இந்த அறிவிப்பின் மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பேராசிரியர் பணியிடங்கள் இளங்கலை வகுப்பு மட்டும் இருந்தால் அதற்கு ஆறு பேராசிரியர்களும், முதுகலை பட்டப் படிப்பும் இருந்தால் அதற்கு ஆறு பேராசிரியர், ஆக இளங்கலை மற்றும் முதுகலை பயிற்றுவிக்கும் ஒரு குறிப்பிட்ட துறைக்கு 12 பேராசிரியர் பணியிடங்கள் அரசால் அனுமதி பெற்று இருப்பார்கள்.

தற்பொழுது இந்த பல்கலைக்கழக மானியக் குழுவின் அறிக்கையின்படி முனைவர் பட்டப் படிப்பிற்கு முதுநிலை பட்டப் படிப்பு தேவையில்லை என்ற சூழ்நிலை ஏற்படும்போது ஏற்கனவே கல்லூரிகளில் வேலை பார்த்துக் கொண்டிருக்கின்றன பேராசிரியர்களின் வாழ்வு கேள்விக்குறியாக மாறும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதுபோல் தற்பொழுது முனைவர் ஆராய்ச்சியை முடித்து பேராசிரியர் பணியிடங்களுக்கான காத்திருக்கின்ற நபர்கள் வாழ்வும் அவர்களின் கனவும் தவிடு பொடியாகிவிடும் என்பதில் எந்த வித மாற்றமும் இல்லை. இதுபோன்ற சூழ்நிலையில் மாணவர்களுக்கு பேராசிரியர் பணிகளுக்கு அல்லது ஆராய்ச்சி பணிகளுக்கு சேர வேண்டும் என்ற ஆசை மாணவர்களிடம் இல்லாமல் போய்விடும். ஒட்டுமொத்தமாக ஆராய்ச்சித் துறையில் இந்திய மாணவர்களின் அர்ப்பணிப்பு இல்லாமல் போய்விடும் என்ற சூழ்நிலை உருவாக வாய்ப்பு உள்ளது.

தொடர்புக்கு: **8667338638**

# ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

தங்களுக்கு விருப்பமான உணவைச் சாப்பிட்ட ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர்களைக் கொடூரமாகத் தாக்கிய ஆர்எஸ்எஸ் – ஏபிவிபி குண்டர்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இது குறித்து கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஏப்ரல் 10 அன்று ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழக வளாகத்தில் தங்களுக்கு விருப்பமான உணவைச் சாப்பிட்ட அப்பாவி மாணவர்கள் மீது வன்முறைத் தாக்குதலை கட்டவிழ்த்துவிட்ட ஆர்எஸ்எஸ்–பாஜக–ஏபிவிபி குண்டர்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

நமது நாட்டின் பன்மைத்துவத்திற்கு எதிரான ஆர்.எஸ்.எஸ் –ன் வெறுப்புணர்வுக்கு இந்த வன்முறைச் சம்பவம் மற்றுமொரு எடுத்துக்காட்டு ஆகும். ஒருவர் எந்த உணவைச் சாப்பிட வேண்டும், எந்த ஆடையை அணிய வேண்டும், எந்த மொழியில் பேசவேண்டும் என்று ஆர்எஸ்எஸ் கட்டளையிட விரும்புகிறது.

அண்மையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரித்தபடியே, மதச்சார்பற்ற விழுமியங்களுக்காகப் போராடுபவர்களையும், முற்போக்கு சிந்தனையுடைய மாணவர்களையும் அழித்திட, பாஜக–ஏபிவிபி கூட்டணி முயன்று வருகிறது. மாணவிகளையும் அவர்கள் தாக்கியுள்ளனர்.

மக்கள் விரோத, பிரிவினைவாத மற்றும் தேசவிரோத சக்திகள் மாணவர்கள் மீதான கொடூரமான தாக்குதல்களை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கிறது.

அனைத்து மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகள் மாணவர்கள் மீதான இந்தத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து வீதிகளில் இறங்கிப் போராட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறைகூவல் விடுக்கிறது.

இவ்வாறு தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச். தூய்மைப் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

## இரா. முத்தரசன் துவக்கிவைத்தார்




ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச். தூய்மைப் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம் சென்னையில் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரா.முத்தரசன் துவக்கிவைத்தார். தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச். ஒப்பந்த சுகாதார துப்புரவு பணியாளர்கள் நலச் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில், பணிநிரந்தரம் கோரி தூய்மைப் பணியாளர்களின் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏப்ரல் 7 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2005 ஆம் ஆண்டு முதல் ஆர்.சி.எச். திட்டத்தின் கீழ், தற்காலிக அடிப்படையில் 3140 க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கு மாதம் தோறும் 500 ரூபாயில் தொடங்கி, பிறகு 1000 ரூபாய் என்ற குறைவான தொகையே தொகுப்பூதியமாக வழங்கப்பட்டது. ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரிந்து வருபவர்களுக்கு ரூபாய் 1500 தொகுப்பூதியமாக வழங்கப்படுகிறது. அவர்களில் கணிசமானோர் பத்து முதல் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

பலருக்கு தற்போது வழங்கப்படும் இக்குறைவான 1500 ரூபாய் தொகுப்பூதியம் கூட பல மாதங்களாக வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவர்கள் நாள்தோறும் தொடர்ந்து பனிரெண்டு மணி நேரம் வேலை செய்கின்றனர். வார விடுமுறை, அரசு விடுமுறை மற்றும் மருத்துவ விடுப்பு கூட இல்லாமல் பணி செய்ய வைக்கப் படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர், பட்டியலின சாதி களைச் சேர்ந்தவர்கள் என்பதும், பெண்கள் என்பதும், பொரு ளாதார ரீதியில் வறுமைக் கோட்டிற்கும் கீழ் உள்ளவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்களின் தொகுப்பூதியம், ‘‘குறைந்த பட்ச ஊதிய நிர்ண யத்திற்கே’’ எதிராக உள்ளது. இவர்களுக்கு ஊதிய உயர்வு, பணிநிரந்தரம், 8 மணி நேர வேலை, வார விடுமுறை, அரசு விடு முறை இலவச சீருடை, இலவச பேருந்து பயண அடையாள அட்டை வழங்கிட வேண்டும். வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரியும் இத்தூய்மைப் பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் (special time scale of pay) வழங்கும் அரசாணை 01.10.2010 அன்று வெளியிடப்பட்டது.

நிதி ஊதியப் பிரிவுத்துறையின் இந்த அரசாணை அ.ஆ.நிலை எண் 385, செப்டம்பர் திங்கள் 15 ஆம்நாள் முதல் நடைமுறைப் படுத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை 28.06.2013 தேதியிட்ட அரசாணை (ப) எண் 680, கடித எண் 36188 / ஏபி – /2014நாள் 28.7.2014,

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு இயக்ககம் ந.கஎண் 131071/ஆசுநி7 /அ3 / 2010 நாள்12.10.2014 போன்று இவர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குவது குறித்து பல உத்தரவுகளில் தொடர்ந்து கூறப்பட்டிருந்தும் முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் சிறப்புகால முறை ஊதியம் வழங்கும் ஆணை நிறைவேற்றப்படவில்லை என்பது வருத்தத்தை அளிக்கிறது.

மேலும் 05.04.2017 தேதியிட்ட அரசாணை G.O (D) No.792 படி R.C.H ஒப்பந்த சுகாதார துப்புரவு பணியாளர்களுக்குதினக்கூலி அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் 2017 ஆம் ஆண்டே வெளியிடப்பட்ட இவ்வறிக்கையில் குறிப்பிட்டது போல், இந்த தூய்மைப் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மூலம்,குறைந்த பட்ச ஊதியம் சட்டத்திருத்த G.O (2 D) No 47 L & E department 5.05.2009 படி தினக்கூலி ஊதியமும் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப் படவில்லை.

அதன் அடிப்படையிலான 160 கோடிக்கும்மேலானஊதிய நிலுவைத் தொகையையும் இன்னும் வழங்கிடவில்லை. எனவே கீழ்கண்ட கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட வேண்டும்.

கோரிக்கைகள்

பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில், மாதந்தோறும் 1500 ரூபாய் தொகுப்பூதியத்தைப் பெற்றுக் கொண்டு பணிபுரியும் இவர்களுக்கு தகுந்த ஊதிய உயர்வு,பணி பாதுகாப்பு,பணிநிரந்தரம் உள்ளிட்டவற்றை வழங்கிட வேண்டும்.

சில ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாய்மொழி உத்தரவின் மூலம் இப்பணியாளர்கள் இனிமேல் பணிக்கு வரவேண்டாம் என வலியுறுத்தப்படுகின்றனர். இதுமிகுந்தவருத்தத்தை தருகிறது. உடனடியாக பணிநீக்க நடவடிக்கைகளை ரத்துசெய்ய வேண்டும்.

நாள் தோறும் 12.00 மணி நேர வேலை என்பதை ரத்து செய்து, எட்டு மணி நேரம் மட்டுமே வேலை என்பதை நடைமுறைப் படுத்த வேண்டும்.

வார விடுமுறை, மற்றும் அரசு விடுமுறைகளை உடனே வழங்கிட வேண்டும்.

மருத்துவ விடுப்பு உள்ளிட்ட விடுப்புகளை உடனே வழங்கிட வேண்டும்.

சீருடை, இலவச பேருந்து பயண அடையாள அட்டை வழங்கிட வேண்டும்.

வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட அனுமதிக்க வேண்டும்.

அவர்களின் கௌரவமும் ,சுயமரியாதையும் காக்கப்பட வேண்டும்.

இன்னும் கொரோனா ஊக்கத்தொகை வழங்கப்படாத பணியாளர்களுக்கு அத்தொகையை உடனடியாக வழங்கிட வேண்டும்.

இந்த ஆர்ப்பாட்டத்தை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் இரடா.முத்தரசன் துவக்கி வைத்தார்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத், ஆர்.சி.எச். தூய்மைப் பணியாளர்கள் சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி, தலைவர் நா.சு.செல்வராஜ், ஏஐடியுசி ஆஷா பணியாளர் சங்கத்தைச் சேர்ந்த வி. வசந்தக்குமாரி, ஹுசைன் ஆகியோர் உரையாற்றினர்.

ஏஐடியூசி மாநிலப் பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்து நிறைவு உரையாற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 600 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### கல்விக் கட்டணத்தை குறைத்திடக் கோரி மருத்துவ மாணாக்கர்களின்

# கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்!

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

கடலூர் மாவட்ட அரசு மருத்துவ, பல் மருத்துவக் கல்லூரிகளின் மாணாக்கர்கள், சென்னை அரசு பல்மருத்துவக் கல்லூரி மாணாக் கர்கள் சங்கம் , தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் மற் றும் பெற்றோர்கள் சங்கம் இணைந்து, அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு இணையாக கல்விக் கட்டணத்தை குறைத்திடக் கோரி சென்னை நாராயணப்பன் தெருவில் மருத்துவ மாணாக்கர்களின் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கடலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி – பல் மருத்துவக் கல்லூரி ( ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி) இரண்டாம், மூன்றாம்,நான்காம் ஆண்டு மாணவர்களின் கல்விக் கட்டணத்தை, தமிழ்நாடு அரசின் இதர அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு நிகராக குறைத்து நிர்ணயித்திட வேண்டும்.

தற்பொழுது எம்.பி.பி.எஸ் படிப்பிற்கு ரூ 4 லட்சம் கட்டணமாக வசூல் செய்யப்படுகிறது.

இதை தமிழ்நாடு அரசின் இதர அரசு மருத்துவர்களுக்கு நிகராக ரூபாய் 13 ஆயிரத்து 610 ஆக குறைத்து நிர்ணக்க வேண்டும்.

கடலூர் அரசு பல் மருத்துவ கல்லூரியில் தற்போது கட்டணமாக ரூ 2.5 லட்சம் வசூலிக்கப்படுகிறது. அதை அரசு பல் மருத்துவக் கல்லூரிக்கு நிகராக ரூபாய் 11 ஆயிரத்து 600 ஆககுறைக்க வேண்டும்.

கல்விக் கட்டணம் செலுத்தவில்லை என்ற காரணத்தைக் கூறி ,தேர்வுகளை எழுதிட தடைவிதிப்பதையும்,ஹால் டிக்கட் தர மறுப்பதையும் கைவிட வேண்டும்.தேர்வு முடிவுகளை வெளி யிடாமல் இருப்பது ,வருகை பதிவேட்டிலிருந்து பெயரை நீக்குவது போன்றவற்றை கைவிட வேண்டும்.

மாணவர்களை மிரட்டும் ஆயுதமாக தேர்வுகளை பயன்படுத்தும் போக்கை கைவிட வேண்டும்.

மாணவர்களை பழிவாங்குவதையும், மிரட்டுவதையும் முழுமையாக கைவிட வேண்டும்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 600 க்கும் மேற்பட்ட மருத்துவ மாணாக் கர்கள் பங்கேற்றனர். இன்றைய ஆர்ப்பாட்டத்தில் சமூக சமத்து வத்திற்கான டாக்டர்கள் சங்க செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி தமிழ்நாடு உறைவிட மருத்துவர்கள் சங்கத்தின் மாநில தலைவர் டாக்டர் எம்.கீர்த்திவர்மன், தமிழ்நாடு மருத்துவ மாணவர்கள் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் டாக்டர் பா.அருணந்தி, கே. நவீன், கடலூர் மருத்துவ மற்றும் பல் மருத்துவ மாணாக்கர்கள் சங்கத் தலைவர்கள் நரேஷ், பார்த்தசாரதி, சயிதா, மதிவாணன், சென்னை அரசு பல்மருத்துவக் கல்லூரி மாணவர் சங்கத்தைச் சேர்ந்த, தமிழ்நாடு மருத்துவ மாணவர் சங்கத்தைச் சேர்ந்த சுப்ரமணியன் நாதன், ஜிழிவிஷிகி நிர்வாகிகள் திராவிடன், சீனிவாசன், ஜோவிதா, மீனா மற்றும் பெற்றோர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

அகில இந்தியத் தொகுப்பு மருத்துவ இடங்களில் 27 விழுக் காடு இட ஒதுக்கீடு ,அரசு மருத்துவர்களுக்கு முதுநிலை மற்றும் உயர்சிறப்பு மருத்துவக் கல்வியில் 50 விழுக்காடு இடங்களை பெற்றுத் தந்தது, மருத்துவக் கல்வியில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கான 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை சென்னை உயர்நீதிமன்றத்தில் வாதாடி பாதுகாத்தது, இதர தொழிற் கல்லூரி களிலும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வழங்கியது, தனியார் தொழிற் கல்லூரிகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான கல்வி,விடுதி மற்றும் கவுன்சிலிங் கட்டணத்தை தமிழ்நாடு அரசே ஏற்று சமூக நீதியில் சாதனை செய்துள்ளது, இன்றைய தி.மு.க அரசு. இது பாராட்டுக்குரியது.

உக்ரைனிலிருந்து திரும்பிய மருத்துவ மாணாக்கர்கள் கல்வியை தொடர தமிழக அரசு பல்வேறு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது.

அதே போன்று, கடலூர் மாவட்ட அரசு மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரி மாணவர்களும் கல்வியை தொடர அரசு உதவிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

கடலூர் மாவட்ட அரசு மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளின் பயிற்சி மருத்துவர்களுக்கு, பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு பயிற்சி கால ஊதியம் வழங்கிட ஆணை பிறப்பித்துள்ளது. இதுவும் பாராட்டுக்குரியது.

எனவே, இந்த கடலூர் மாவட்ட அரசு மருத்துவ மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளின் இரண்டு, மூன்று, நான்காம் ஆண்டு மாணவர்களின் கல்விக் கட்டணத்தையும், தமிழ்நாடு அரசின் இதர அரசு மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளுக்கு நிகராக குறைத்து சமூக நீதியில் புதிய சாதனையை படைத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

## இந்த வார தம்பிக்குறள்

### 67. பெண்ணின் பெருமை

**நிலமென்ப நீணிலத்து நேர்த்திமிகு மாதரை**
**நல்லறிஞர் நாமறிய நன்று.**

நல்லறிஞர்கள், நல்ல பெண்களைப் பண்படுத் தப்பட்ட நிலம் என்று கூறுவர். இதனைச் சிந்தித்து உணர்ந்து கொள்ளல் வேண்டும். (மதிக்க வேண் டும்)

**நிலம்நல மானால்பின் நல்ல விதையாகும்**
**அல்லாக்கால் என்னாம் விதை**

நிலம் நல்லதாக இருந்து, விதை தரம் குறைந்தாக இருந்தாலும், அது விளைந்து நல்ல விதையாக மாறும். நல்ல விதையானாலும் நிலம் மோசமாக இருந்தால், அது பயன்தராது. (நிலம் முதன்மை பெறுவது போல, பெண்ணே முதன்மை பெறுகிறாள்)

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

எங்கே சென்றாய் அழகு? உன்னுடைய வாழ்க்கையை உயர்ந்த லட்சியத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டாய்! எங்களுடன் வாழ்வாய்! வாழ்ந்து கொண்டே இருப்பாய்! என்றவாறு கட்டுரை முழுவதும் உருக்கம்! கண்ணீர் பளிச்சிடுகிறது. உணர்வோடு ஒன்றி விட்டார் தோழர் இரா.முத்தரசன்.

**– எஸ்.வடிவேல்**,தண்டையார்பேட்டை

**ஆசிரியர் ஜனசக்தி,**

‘‘உக்ரேன் – ரஷ்யப் போரில் மட்டுமல்ல உலகில் நடைபெற்றுவரும் பல ராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னால் அமெரிக்காவும், நேட்டோவும் செயல்படுகின்றன. உலகில் அமைதியை நிலைநாட்ட நேட்டோ ராணுவ கூட்டணியை கலைக்க வேண்டும்’’ என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா தீர்க்கமாக தனது கட்டுரையில் கூறியிருப்பது மிகச் சரியான ஒன்று.

**– ஜி.பாலகிருஷ்ணன்**, நடுக்கடை, மதுரை

**ஆசிரியர் ஜனசக்தி,**

‘‘திரிபுவாதம் என்பது பாட்டாளி வர்க்க முகாம்களிலேயே தோன்றுகிறது. திரிபுவாதிகள் மார்க்சியத்தின் சில பகுதிகளை மாற்றி விளக்கம் அளிக்கின்றனர். திருத்தல்வாதிகள் மார்க்சியத்தின் அடிப்படையையே தாக்குவதில் ஈடுபடுகின்றனர்’’ என்று தோதாத்ரி அம்பலப்படுத்தியது சிறப்பு

**– எல்.ஆர்.ராஜன்,**
சிதம்பரம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

‘‘கல்வி நிறுவனங்களை காவி மயப்படுத்தும் முயற்சிகளில் ஒன்றுதான் ஹிஜாப் தடை அணி வதற்கு எதிர்ப்பு. உண்மைப் பிரச் சினை ஹிஜாப் அல்ல. முஸ்லீம் சமுதாய பெண்கள் கல்வி கற்பதை தடுக்க வேண்டும் என்பதே பிரச்சினை’’ என்பதை போட்டு உடைக்கிறார் கட்டுரையாளர் ஹரீஸ்பாலா.

**– ஜெ.கனகராஜ்**, குன்னூர்

துவரங்குறிச்சி அரசு போக்குவரத்துக் கழக

# கிளை மேலாளரை கண்டித்து ஏஐடியூசி ஆர்ப்பாட்டம்

துவரங்குறிச்சி அரசு போக்குவரத்துக் கழக கிளை மேலாளரை கண்டித்தும், தமிழக அரசு 14 வது ஊதிய ஒப்பந்தத்தை பேசிட வலியுறுத்தியும் துவரங்குறிச்சி போக்குவரத்துக்கழக பணிமனை அலுவலகம் முன்பு ஏஐடியூசி ஆர்ப்பாட்ட வாயிற் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு சக்திவேல் தலைமை வகித்தார். ஏஐடியூசி தாலுகா பொறுப்பாளர் ஜனசக்தி உசேன், போக்குவரத்துக் கழக மண்டல பொது செயலாளர் சுப்பிரமணியன், தலைவர் நேருதுரை, பொருளாளர் கார்த்திகேயன் கண்டன உரை நிகழ்த்தினர்.

மத்திய சங்க பொறுப்பாளர்கள் ஆறுமுகம், சுந்தர்ராஜ், வெள்ளைச்சாமி, செல்வராஜ், ஐயப்பன், மாரிமுத்து, ராஜேந்திரன், பழனிச்சாமி, நடராஜன், அம்மையப்பன் மற்றும் மண்டல நிர்வாகிகள், கிளை பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் கலந்து கொண்டு கோரிக்கை முழக்கமிட்டனர்.

லால்குடி நகராட்சியில்

# உள்ளாட்சி ஏஐடியூசி சங்க அமைப்பு நிலை மாநாடு

திருச்சி மாவட்டம் லால்குடி நகராட்சியில் உள்ளாட்சி ஏஐடியூசி சங்கம் அமைப்பு நிலை மாநாடு சமூதாயகூடத்தில் நடைபெற்றது.

இம் மாநாட்டுக்கு திலக் பிரபு தலைமை வகித்தார். புதிய நிர்வாகிகளாக கௌரவத்தலைவர் ராஜவேல், தலைவர் ஹரிஹரன், துணைத்தலைவர் மணி, செயலாளர் ராஜா, துணைச்செயலாளர் மாரிமுத்து, பொருளாளர் அண்ணாத்துரை, சட்ட ஆலோசகர் கோபிநாத், ஆகியோர் ஏகமனதாக தேர்வு பெற்றனர். இந்தியகம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் ஜனசக்தி உசேன் லால்குடி ஒன்றிய செயலாளர் பழனிராஜ், மணிகண்டன், ஆண்டனி, வி. ச.பொறுப்பாளர் மார்ட்டின் அகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினார்கள். உள்ளாட்சி சங்க மாவட்ட பொறுப்பாளர் சுப்பிரமணியன் நிர்வாகிகளை அறிமுகபடுத்தி வாழ்த்தி பேசினார். தூய்மை பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# திருச்சுழி நரிக்குடி சிபிஐ ஒன்றிய மாநாடு

எம்.ரெட்டிய பட்டியலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சுழி நரிக்குடி ஒன்றிய 24வது மாநாடு நடைபெற்றது. முத்துராமு, குருசாமி, அழகம்மாள் ஆகியோர் தலைமைக்குழுவாக செயல்பட்டார் கள். கட்சி கொடியை மாவட்ட துணை செயலாளர் எஸ். பழனிக்குமார் ஏற்றி வைத்துப் பேசினார். ஜீவானந்தம் வரவேற்று பேசினார். அஞ் சலி தீர்மானத்தை தங்கராஜ் வாசித்தார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி தொடங்கிவைத்துப் பேசினார். மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி. இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாநில குழு உறுப்பினர் செந்தில்குமார் ஆகியோர் பேசினார்கள். ஒன்றிய செயலாளர் எம்.நீதிராஜன் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். ஒன்றிய குழுவிற்கு 19தோழர்களும், நிர்வாக குழு விற்கு 9 தோழர்களும் அதில் செயலாளராக சி.செல்வம், துணை செயலாளராக சி.பெரியண்ணன், பொருலாளராக என்.ஜீவானந்தம் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். பயிர் காப்பீடு தாமதமின்றி கிடைத்திட, அனைத்து ஊராட்சிகளிலும் சுத்தமான குடிநீர் கிடைத்திட, கட்டுமானம், அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ. 6000 வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

அடிப்படை வசதிகள் கோரி

# மேலராஜராமன் ஊராட்சி முன்பு தர்ணா

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிழக்கு ஒன்றியம் சார்பில் மேலராஜராமன் ஊராட்சி முன்பு தர்ணா போராட்டம் நடைபெற்றது. ஒன்றிய துணை செயலாளர் ஆறுமுகம் தலைமை வகித்தார். மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ பேசிசுகையில், கிழக்கு ஒன்றிய மாநாட்டில் குடிதண்ணீர, சாலை வசதி, கழிப்பிட வசதி, மருத்துவமனை உள்ளிட்ட மக்களுக்கான பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. நிர்வாகத்தின் கவனத்தை ஈர்க்க இந்த தர்ணா நடைபெறுகிறது. உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லயெனில் சாலை மறியல் போன்ற போராட்டங்களை நடத்துவோம் என பேசினார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி ,ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன், இளைஞர்மன்ற மோகன் ஆகியோர் பேசினார்கள்.

# மணப்பாறை தாலுகா ஏஐடியூசி நிர்வாகிகள் கூட்டம்

மணப்பாறை கோவில்பட்டி சாலையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் இயங்கும் கே.டி.கே தங்கமணி அரங்கில், மணப்பாறை தாலுகா ஏஐடியுசி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது

இக்கூட்டத்திற்கு அமைப்புசாரா தொழிலாளர் நல சங்கம் தாலுகா பொதுச்செயலாளர் நல்லுசாமி தலைமை வகித்தார். வையம்பட்டி உள்ளாட்சி பணியாளர் சங்கத்தின் துணைத்தலைவர் ஏ.டி சண்முகானந்தம் முன்னிலை வகித்தார். போக்குவரத்து கழக மண்டல பொது செயலாளர் சுப்பிரமணியன் உரை நிகழ்த்தினார். மணப்பாறை நகரில் 15 இடங்களில் ஏஐடியுசி கொடி ஏற்றுவது என்று முடிவு செய்யப்பட்டது. வருகின்ற 17 ஆம் தேதி அமைப்புசாரா தொழிலாளர் நலச் சங்க பொதுப்பேரவை கூட்டுவது என்று முடிவு செய்யப்பட்டது.











# பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வுக்கு காரணமான ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திண்டுக்கல் :** திண்டுக்கல் மணிகூண்டில் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சிபிஐ மாவட்ட செயற்குழு உறுப்பிரன் எஸ்.ராஜாமணி தலைமை தாங்கினார். மாவட்டப் பொருளாளர் கே.ராஜாங்கம், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.ஜெயமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் கண்டன உரையாற்றினார். மாநிலக்குழு உறுப்பினர் ஏ.எம்.மணி, இலக்கிய ராஜ், எஸ்.எஸ்.சுப்பையா, மு.சுப்பையா, பி.வெள்ளைச்சாமி, என்.ராமர் மற்றும் பல கட்சித் தோழர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**புளியங்குடி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஏஐடியூசி சார்பாக புளியங்குடியில் டி.என். புதுக்குடி செயலாளர் சீனிவாசன் தலைமையில் பெட்ரோல் டீசல் கேஸ் விலை உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு புளியங்குடி நகர்மன்ற உறுப்பினர் பாக்கியம் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் சீதாராமன், வாசு ஒன்றிய துணைச் செயலாளர் முருகன், ராயகிரி நகர செயலாளர் சமுத்திரம், வாசு ஒன்றிய செயலாளர் வேலு, மாவட்ட குழு உறுப்பினர் சமுத்திரக்கனி, ஏஐடியூசியின் மாவட்ட பொதுச் செயலாளர் சுப்பையா ஆகியோர் கண்டன உரையாற்றினர். புளியங்குடி ஏஐடியூசி கார் மற்றும் வேன் ஓட்டுநர் சங்கத்தின் பொறுப்பாளர்கள் மற்றும் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

**குமரி:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குமரி மாவட்ட குழு சார்பாக நாகர்கோவில் மீனாட்சிபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.இசக்கிகமுத்து தலைமை தாங்கினார். ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் எஸ்.ராஜுதுவக்க உரை நிகழ்த்தினார்.

ஆர்.கே.ஸ்ரீகுமார் மாவட்ட துணைச் செயலாளர், தா. சுபாஷ் சந்திரபோஸ் மாவட்ட பொருளாளர், ஆர்.செல்வராணி மாதர் தேசிய சம்மேளனம் மாவட்ட அமைப்பாளர், கே.நாகராஜன், எஸ்.அனில்குமார், ஆர்.இசக்கிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

அனைத்திந்திய முற்போக்கு பேரவை மாநில துணைத்தலைவர் பேராசிரியர் சுந்தரம் போராட்டத்தை முடித்து வைத்து பேசினார்.

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரில் பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வை கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வட்ட துணை செயலாளர் பவுன்ராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வட்ட குழு உறுப்பினர்கள் மோகன், அம்மு சசி, பரிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோரிக்கைகளை விளக்கி மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.கண்ணு பேசினார். கூட்டத்தில் வட்ட குழு உறுப்பினர்கள் கமலேசன் ,சதீஷ், ரஜினி ,மாரியப்பன் ,முனியப்பன் வெங்கடேஷ், குணசேகரன் , நாகராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு முழக்கங்கள் எழுப்பினார்கள் இறுதியாக முனுசாமி நன்றி கூறினார்.

# பெட்ரோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து ஆட்டோ தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்




பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்தும், ஆட்டோ, மோட்டார் வாகனங்களுக்கு எப்.சி. மற்றும் லைசன்ஸ் கட்டணங்களை பன்மடங்கு உயர்த்தியதை திரும்பப் பெற ஒன்றிய அரசை வலியுறுத்தியும் ஏஐடியுசி ஆட்டோ தொழிற்சங்கம் சார்பில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருச்சி :** திருச்சி மாநகர் உறையூர் குறதெருவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநகர செயலாளர் துரைராஜ் தலைமை ஏற்றார். ரமேஷ், வெங்கடேசன், பாலசுப்பிரமணி, கௌரிசங்கர், பாலகிருஷ்ணன், நீதிபதி, செந்தில் முன்னிலை வகித்தனர். திருச்சி மாவட்ட ஏஐடியுசி பொதுச்செயலாளர் க.சுரேஷ் எம்.சி., தலைவர் நடராஜா ஆட்டோ சங்க மாநகரத்தலைவர் சத்யா, வங்கி யூனியன் நாராயணசாமி, மாணவர் பெருமன்றம் இப்ராகிம், சட்ட ஆலோசகர் செல்வகுமார், எரிவாயு உருளை தொழிற்சங்க கௌரவ தலைவர் சுரேஷ், முத்துசாமி, செயலாளர் ராஜ் குமார் உள்ளிட்டோர் உரையாற்றினார்.

**துவரங்குறிச்சி:** மருங்காபுரி தாலுகா துவரங்குறிச்சி காவல்நிலையம் அருகில் ஏஐடியூசி திருச்சி மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு திருச்சி மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்க துவரங்குறிச்சி கிளை நிர்வாகி சித்திக் தலைமை வகித்தார்.மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன் துணைத் தலைவர் ஜனசக்தி உசேன் ஆகியோர் ஆர்ப்பாட்ட உரை நிகழ்த்தினர். காஜாமைதின், கண்ணதாசன், காதார் ஆனஸ்ட்ராஜ் உட்பட அனைத்து நிர்வாகிகளும் கலந்துகொண்டு ஆர்ப்பாட்ட முழக்கமிட்டனர்.

**மரவனூர் :** மணப்பாறை ஒன்றியம் மரவனூர் கடை வீதியில் ஏ.ஐ.டி.யு.சி திருச்சி மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு திருச்சி மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்க மரவனூர் கிளை நிர்வாகி ஆறுமுகம் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன், துணைத்தலைவர் ஜனசக்தி உசேன், விவசாய சங்க மாவட்ட பொருளாளர் பழனிச்சாமி, விவசாய தொழிலாளர் சங்க பொருமாள் ஆகியோர் ஆர்ப்பாட்ட உரை நிகழ்த்தினர்.

**மணப்பாறை :** மணப்பாறை பேருந்து நிலையம் முன்பு ஏஐடியூசி திருச்சி மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்கம் சார்பில் பெட்ரோல் டீசல் விலை உயர்வு எப்.சி. கட்டண உயர்வு, இன்ஷூரன்ஸ் கட்டண உயர்வுகளை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இவ் ஆர்ப்பாட்டத்திற்கு திருச்சி மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்க மாலட்ட செயலாளர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் ஜனசக்தி உசேன், அமைப்புசாரா தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் நல்லுசாமி ஆகியோர் ஆர்ப்பாட்ட உரை நிகழ்த்தினர். அனைத்து ஸ்டாண்ட் நிர்வாகிகளும் கலந்துகொண்டு ஆர்ப்பாட்ட முழக்கமிட்டனர்.

**ஆவடி:** திருவள்ளூர் மாவட்டம், டி.என்.எச்.பி.ஆவடி மார்க்கெட் எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆட்டோ சங்க மாவட்டச் செயலாளர் ஆட்டோ மா.பட் தலைமை தாங்கினார். மாவட்டத் தலைவர் வி.ராமானுஜம், பொருளாளர் ஜி.கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏஐடியூசி திருவள்ளூர் மாவட்ட பொது செயலாளர் எஸ்.மயில்வாகனன் கண்டன உரையாற்றினார்.

ஆட்டோ சங்க மாவட்ட நிர்வாகிகள் முல்லை க. மகேஷ், எம்.பி.குமார், ஹரிதாஸ், எம்.ஏழுமலை, எஸ்.தேவேந்திரன் மற்றும் ஆவடி மாநகர ஏஐடியூசி ஆட்டோ தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.




### செங்கல்பட்டில் குடிமனைப்பட்டா, கான்கிரீட் வீடு கேட்டு

# 300–க்கும் மேற்பட்ட பழங்குடி மக்கள் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கம், காஞ்சி செங்கல்பட்டு மாவட்டத்தின் சார்பில் மாவட்ட தலைவர் க.ஜெகதீசன் தலைமையில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள திருப்போரூர், மதுராந்தகம், தாம்பரம், பல்லாவரம், திருக்கழுகுன்றம், செய்யூர் வட்டம், வண்டலூர் வட்டம் ஆகிய வட்டங்களில் அரசு புறம்போக்கு நிலங்களில் வசிக்ககூடிய பழங்குடி மக்களுக்கு வகை மாற்றம் செய்து குடிமனைப்பட்டா உடனடியாக வழங்கிட வேண்டும்.

அரசு கான்கிரீட் வீடு, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை இடித்து விட்டு புதிய வீடுகள் கட்டித்தரவேண்டும்.

குடிநீர், சாலைவசதி, தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்துதரவேண்டும் என்றும், பழங்குடி மக்களுக்காக தொடர்ந்து போராடக்கூடிய ஜெகதீசன், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் எம்.பார்த்திபன் ஆகியோரின் மீது போடப்பட்ட பொய் வழக்கை வாபஸ் பெறவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தை துவக்கிவைத்து தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில பொது செயலாளர் மு.வீரபாண்டியன் கண்டன உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் பழங்குடி மக்கள் சங்க மாநில துணைத் தலைவர் ஜா.பூபாலன், தமிழ்நாடு ஆதிவாசிகள் கூட்டமைப்பின் மாநில கொள்கை பரப்பு செயலாளர் எம்.வெங்கடேசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் பி.எஸ்.எல்லப்பன், ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் எம்.ஜகாங்கீர், எஐஒய்எப் தலைவர் கே.வி.சேகுவேராதாஸ் ஐ.உசேன், எஸ்.ராமச்சந்திரன், வி.ஆதிமூலம், ஆர்.தேவராஜ், எம்.பார்த்திபன் உள்ளிட்ட தோழர்கள் கண்டனவுரையாற்றினர். திருப்போரூர் ஒன்றிய செயலாளர் ஒய்.ஹாருன்பாஷா நன்றி கூறினார்.

### கலை இலக்கியப் பெருமன்ற

# கோவை மாவட்ட மாநாடு




தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவை மாவட்ட 10 வது மாநாடு ஏப்ரல் 10 சன்மார்க்க சங்கத்தில் நடைபெற்றது. மூத்த எழுத்தாளர் சி.ஆர்.ரவீந்திரன் மன்றக்கொடியை ஏற்றுவித்தார். கீழடி படக்கண்காட்சியை எழுத்தாளர் இளஞ்சேரனும், தொல்லியல் பொருட்காட்சியை சிறுதுளி ஜெயராமனும், மாணவர்களின் ஓவியக் கண்காட்சியை சிற்பி எஸ்.ஜே. செல்வினும் திறந்து வைத்தனர்.

பெருமன்றத்தின் மாநிலத்துணைத் தலைவர் கவிஞர் கோ.கலியமூர்த்தி மாநாட்டின் தொடக்கவுரையாற்றினார். “இன்று பண்பாட்டுத்துறையில் நாம் எதிர்கொண்டுள்ள சவால்கள் மிகக் கடினமாவை. எனினும் நாட்டின் பன்மைத்துவத்தைக் காத்திட நமது கலை இலக்கியப் படைப்பாளிகள் துணிவுடன்செயலாற்றவேண்டியது காலம் இட்டுள்ள கட்டளை” என்றார். வி.எஸ்.சுந்தரம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர், தி.மணி தமுஎசக மாவட்டத் தலைவர் எஸ்.கோட்டியப்பன் (இஸ்கஃப்) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஓவியப் போட்டியில் வெற்றிபெற்ற மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு பல்சமய நல்லுறவு இயக்கத்தின் ஹாஜி முகமது ரஃபி மற்றும் எம்.எம்.ராமசாமி ஆகியோர் பரிசுகளை வழங்கினர். கலைமாமணி மா.பத்ரப்பன் மற்றும் இளம் சாதனையாளர்களுக்கு கோவையின் பல்துறை ஆளுமைகள் சிறப்பு செய்தனர். கவிஞர் கோவை காமு தலைமையில் எட்டு கவிஞர்கள் சமகாலச் சிக்கல்கள் குறித்து கவிதைகள் வாசித்தார். எழுத்தாளர் புகழேந்தி மொழிபெயர்ப்பில் என்.சி.பி.எச். வெளியிட்டுள்ள “அரசியல் சட்டத்தின் இரைகள்” “சேகுவேராவின் புரட்சிகர சிந்தனைகள்” நூல்கள் வெளியிடப்பட்டன. இருளர் மாணவிகளின் கதை சொல்லல், கவிஞர் நாணற்காடனின் குறுங்கதை, நாடகவியலாளர் த.திலிப்குமாரின் வீதி நாடகம், கண்ணம்பாளையம் வசந்தகுமார், அனுஷ்யா குழுவினரின் தெருக்கூத்து நடனம், ஆகிய கலை நிகழ்வுகள் வசீகரித்தன. வெ.சுப்பிரமணியன் தலைவராகவும், ப.பா.ரமணி செயலாளராகவும், எஸ்.கோட்டியப்பன் பொருளாளராகவும், மற்றும் துணைத் தலைவர்கள் துணைச்செயலாளர்கள் மாவட்டக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எம்.வி.ராஜன் நன்றியுரை வழங்க மாநாடு நிறைவுற்றது.

### கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில்

# “அரவு” நூல் வெளியீட்டு விழா




தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில் திருப்பூரில், திருப்பூர் மாமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பெண் உறுப்பினர்களுக்கு ‘பாராட்டு விழா‘ மற்றும் “அரவு” நூல் வெளியீட்டு விழா திருப்பூர் ஹோட்டல் எம்.கே.எம்.ரிச்–ல் நடைபெற்றது. எழுத்தாளர் சசிகலா, தளபதி விஜயராஜா எழுதிய நூலை மாநகர துணை மேயர் ஆர்.பாலசுப்பிரமணியம் வெளியிட அதை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில குழு உறுப்பினர் ஓடை துரையரசன் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்த 31 பெண் கவுன்சிலர்களுக்கும் நினைவு பரிசு வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது. கீதாஞ்சலி கோவிந்தன் பாராட்டுரை வழங்கினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர், முன்னால் மாமன்ற உறுப்பினர் பி.ஆர். நடராஜன் நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்கினார். மாவட்ட பொருளாளர் ஏ.வி. பழனிசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். எஸ்.ஏ.காதர் எழுதிய “ நாடகம் பார்க்கலாம் வாங்க “ நூல் மதிப்புரையை மலர்கள் ராஜூ வழங்கினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் திருச்சி மாவட்ட செயலாளர் பேராசிரியர் கி.சதீஷ்குமார் சிறப்புரை நிகழ்த்தினார். மக்கள் இசை பாடகர்கள் துருவன் பாலா, சே.து. பிரபாகர், க.ஜோதி, செல்வி ஸ்ரீநிதி தான்யா ஆகியவர்கள் இசை நிகழ்ச்சி நடத்தினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்ட துணை தலைவர் எஸ். விஸ்வநாதன் நன்றி கூறினார்.

### தூய்மைக் காவலர்களுக்கு

# ரூ.15 ஆயிரம் குறைந்தபட்ச ஊதியமாக வழங்கிடுக!

## உள்ளாட்சித்துறை பணியாளர் சங்கம் தீர்மானம்

ஈரோடு மாவட்ட உள்ளாட்சித்துறை பணியாளர் சங்க (ஏஐடியுசி) நிர்வாகக்குழு கூட்டம் ஈரோட்டில் மாவட்ட சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவர் சின்னசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் குணசேகரன், சங்க செயலாளர் மணியன், துணைச் செயலாளர் ஞானசேகரன், பொருளாளர் ரவி மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில், ஊராட்சித் தூய்மைக் காவலர்களுக்கு குறைந்தபட்சம் மாதம் ரூ. 15 ஆயிரம் என ஊதியம் நிர்ணயித்து முழு நேரப் பணியாளர்களாக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



### பெட்ரோல் டீசல் விலை உயர்வைக் கண்டித்து

# இளைஞர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் திருவள்ளூர் மாவட்டத்தின் சார்பாக பெட்ரோல் டீசல் கேஸ் விலையை கண்டித்து இருசக்கர வாகனம் ஏலம் விடும் போராட்டம் நடைபெற்றது. இந்த போராட்டத்திற்கு மாவட்ட செயலாளர் பி.வி.செந்தில் தலைமை தாங்கினார். கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தினுடைய மாவட்ட செயலாளர் கே.கிருஷ்ணன் துவக்க உரையாற்றினார். தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் மற்றும் விவசாய சங்கத்தில் மாவட்ட செயலாளர் ஜெ. அருள் ஆகியோர் கண்டன உரையாற்றினர். மீஞ்சூர் ஒன்றிய செயலாளர் ஜி.பாலன் வி.தொ.ச. மாவட்ட துணை தலைவர் கே.போஸ், வி.தொ.ச. மாவட்ட துணை செயலாளர் கே.வி.செங்கொடி செல்வன், வி.தொ.ச.சோழவரம் ஒன்றிய செயலாளர் கே. குமரேசன், கே. மோகன் பாபு ஆகியோர் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.

### பள்ளி கல்லூரி அருகில்

# போதைபொருட்கள் விற்பனையை தடை செய்!

## அருப்புக்கோட்டை சிபிஐ ஒன்றிய மாநாடு தீர்மானம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அருப்புக்கோட்டை ஒன்றிய 24வது மாநாடு சங்கரநாராயணன், பாண்டி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. கட்சி கொடியை ந.ம.முத்து ஏற்றிவைத்துப் பேசினார். அஞ்சலி தீர்மானத்தை லெட்சுமணப்பெருமாள் வாசித்தார் . இளங்கோ வரவேற்று பேசினார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார் . மாவட்ட துணை செயலாளர் எஸ். பழனிக்குமார், மாநிலகுழு உறுப்பினர் எஸ்.செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

மாநில நிர்வாக குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ நிறைவு செய்து பேசினார். ஒன்றிய செயலாளர் வி.முனியசமி வேலை அறிக்கை சமர்பித்துப் பேசினார். ஒன்றிய குழுவிற்கு 19 தோழர்களும், நிர்வாக குழுவிற்கு 9 தோழர்களும் அதில் செயலாளராக வி.முனியசாமி, துணை செயலாளராக எ.கரியமால், பொருளாளராக ஆர்.பாண்டி ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். அருப்புக்கோட்டை பள்ளி , கல்லூரிகளின் அருகில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் பகிரங்கமாக விற்கப்படுகிறது. காவல்துறை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கைத்தறி, விசைத்தறி தொழிலை பாதுகாக்க நூல் விலையை கட்டுப்படுத்துவதுடன் ஜிஎஸ்டி வரியையும் ரத்து செய்ய வேண்டும். ஒன்றியத்திலுள்ள தெப்பம், குளம், கண்மாய்களை ஆழப்படுத்தி சுத்தப்படுத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. திருச்சுழி ஒன்றிய செயலாளர் சி.செல்வம் கலந்துகொண்டார்.



# மீண்டும் ஓர் குருஷேத்திரம்

உழைக்கும் மக்களின் உரிமைப் போர் குரலாய் போர்ப்பரணி பாடி வரும் கவிஞர் பரிணாமனின் கவிக் குரலே மீண்டும் ஒரு குருசேத்திரம் என்னும் இக்கவிதை நூல். எந்தப் பக்கத்தில் பார்த்தாலும் இந்திய சமுதாய வாழ்க்கை சரிந்து வருகிறது, ஆட்சியாளர்களால் சரிக்கப்பட்டு வருகிறது. நான் எந்த அளவுக்கு ஒரு கவிஞனோ, அந்த அளவுக்கு ஒரு அரசியல்வாதியும் ஆவேன். ஏற்கனவே எனது தேசப்பற்றையும், சோசலிச பற்றையும் எனது பாடல்கள் பறைசாற்றி நிற்கின்றன என தன்னைப் பற்றி பிரகடனப் படுத்துகிறார் கவிஞர் பரிணாமன் . எல்லோரையும் பாதித்த கொரோனா பெரும் தொற்று காலம் நமது கவிஞரையும் பாதித்திருக்கிறது மனதளவில். நோயைவிட தனிமைதான் பெரும்பாடு படுத்திருக்கிறது. "தனிமை படு ! கவலை விடு ! மனதால் ஊரோடு உறவாய் இரு ! உலகின் கதி உனக்கும் விதி ! விலகி இருந்தே நோய் வென்றிடு !" தனது மனதை ஆறுதல் படுத்திக் கொண்டு நோயை வெல்வதற்கு வேறு வழியில்லை. தனிமைதான் அதற்கு வழி என்றால் அவற்றையும் நாம் கடைபிடித்து நோயை வெல்வோம். ஆனால், மனதளவில் உலகத்தோடு உறவாய் இருப்போம் என்று அறைகூவி மக்களை அழைக்கிறார்.




பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே என்ற திருமூலர் வாக்கிற்கிணங்க "பகைவனுக்கும் அருளும் இதயம் படைத்தோம் நமக்கேன் ஏவுகணை " என பாரத புத்திரர்களைப் பார்த்து கேள்வி கேட்கிறார். அகிம்சை புத்திரர்களே சிந்திப்பீர் என வேண்டுகோளும் வைக்கிறார். "வன்முறை வலம்வரும் அதிகாரம் இது வளர்ச்சியின் அடையாளம்?மூவர்ணக்கொடி காவி நிறம் ஆவதில் உண்டோ பரிகாரம்? " பாரத புண்ணிய பூமியை ஏன் கலவர பூமியாக மாற்ற துடிக்கிறார்கள். வளர்ச்சி அடைய வேண்டிய நாட்டில் வன்முறை எதற்கு?. மூவர்ணக்கொடி முழுவதும் காவி நிறமாக மாறிவிட்டால் நாட்டின் பசி, பஞ்சம், பட்டினி எல்லாம் தீர்ந்து விடுமா? இதை ஆளுவோர் ஏன் சிந்திக்க மறுக்கின்றனர்? என சரியாகவே சாட்டையை சுழற்றுகிறார் கவிஞர்.

இந்த நாட்டில் எதற்காக எல்லாம் மனிதன் போராட வேண்டி இருக்கிறது பாருங்கள்." உழைக்க இடம் இருந்தவனுக்கு உறங்க இடம் பஞ்சமா? பிறக்க இடம் இருந்தவனுக்கு புதைக்க இடம் பஞ்சமா ? நாட்டிலும் போராட்டமா?சுடுகாட்டிலும் போராட்டமா?" மனிதன் வாழ்வதற்காக தான் போராட வேண்டியிருக்கிறது என்றால், செத்த பிறகும் புதைப்பதற்காகவும் போராட வேண்டியிருக்கிறது என்பது நாட்டின் அவலம் அல்லவா?. இதுதான் நமது நாட்டின் வளர்ச்சியா? இதை மாற்ற வேண்டாமா? எனவே மனித குலம் முன்னேற்றத்தை நோக்கி நடைபோட வேண்டும். அதற்கு ஏற்ற தாழ்வு இல்லாத சமத்துவ சமுதாயத்தை நோக்கி நடை பயில வேண்டும் என்பதற்கு பாதை சமைக்க பிறந்த பாடல்கள்தான் இந்த நூல் முழுவதும் விரவிக் கிடக்கிறது. கவிஞர் பரிணாமன் எழுதிய "மீண்டும் ஓர் குருஷேத்திரம் " என்னும் இக்கவிதை நூல் நமக்கு ஒரு கைவாள். அனைவரும் வாங்கிப் படிக்கவும்.

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : பரிணாமன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 88 விலை : ரூ.100**

# நூல் நயம்

## எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி...

தூத்துக்குடி குறித்த ஓர் சமகால வரலாற்றுப் பதிவு "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி..." எனும் இந்நூல் முனைவர் மா. சாலமன் பொ்னாட்ஷா, பேராசிரியர் பொ. முத்துக்குமரன் ஆகியோரால் எழுதப்பட்டுள்ளது.

வரலாறு என்பது வலி மிகுந்ததாகும். அந்த வலி என்பது தூத்துக்குடியில் 2018 மே 22 அன்று அறவழியில் போராடி அரச பயங்கரவாதத்தால் உயிரிழந்தவர்களை நினைவு கூறுவதோடு தொடங்குகிறது இந்நூல்.




தமிழர்கள் தங்கள் புவியியல் பரப்பை ஐந்திணைகள் ஆக பிரித்து , அப் பிரிவுகளின் தன்மையை ஒத்த அகவாழ்வும் , புற வாழ்வும் வாழ்ந்தமை உலகிற்கே வெளிப்படை. அவற்றுள் நெய்தல் எனப்படும் கடலும், கடல் சார்ந்த இடமும் வாழ்விடத்தின் கலாச்சாரமும் உலகிற்கே வழி காட்டுவதாகும். அப்படிப்பட்ட இனம் தான் உரிமைகளுக்காகப் போராடி வாயிலும், மார்பிலும் குண்டடிபட்டு விழுந்துகிடந்தது.

சோழநாடு சோறுடைத்து : பாண்டியநாடு முத்துடைத்து என்று பெருமை சேர்த்த தமிழகத்தின் பிரிக்க முடியாத தொன்மையின் அங்கமும் அடையாளமே தூத்துக்குடி. முதன் முதலில் கொற்கையில் அகழ்வாராய்ச்சி செய்தவர் ஐரோப்பிய கிறிஸ்தவ மறைப்பணியாளர் ஆகிய ராபர்ட் கால்டுவெல் ஆவார். இவர் தன் நீண்ட ஆய்வுக்குப் பின் 'கொற்கை தமிழர்களின் நாகரிகத் தொட்டில்' என்று குறிப்பிட்டுள்ளார். குமரிக்கண்டம் கடலில் மூழ்கிய பின் கொற்கை தென்பாண்டி மண்டலத்தின் தலைநகராகவும். பல தேசங்களின் கலங்கள் வந்து செல்லும் அதி முக்கிய துறைமுகமாக விளங்கியது. கொற்கை பாண்டிய பேரரசின் தலைநகரம் என்பதுடன். அன்றைய தெற்காசியாவின் வணிக தலைநகரமாக விளங்கியது. தூத்துக்குடி முத்து உலகப்புகழ் பெற்றது. இதனால்தான் தூத்துக்குடி 'முத்து நகர்' என அழைக்கப்படுகிறது. இப்படி செழுமையும் செழிப்புமிக்க தூத்துக்குடி நகரம் சமகாலத்தில் எவ்வாறு அழிவுக்கு உள்ளாக்கப்படுகிறது என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். வேதாந்தா நிறுவனம் தூத்துக்குடிக்கு வரம் அல்ல, சாபம் என்பதை "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி... தூத்துக்குடி ஓர் சமகால வரலாற்றுப் பதிவு" என்னும் இந்நூலில் முனைவர் மா.சாலமன் பொ்னாட்சா,பேராசிரியர் பொ. முத்துக்குமரன் ஆகியோர் விளக்கி உள்ளனர் இந்த நூலில். இந்நூலினை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும். **– சமரன்**

**நூலாசிரியர்கள் : முனைவர் மா.சாலமன் பொ்னாட்ஷா, பேராசிரியர் பொ. முத்துக்குமரன்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 364 விலை: ரூ.365**

வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை,
சென்னை - 600014

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

### உக்ரைன் போர்

## உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளை
# முடக்கியவர் செலன்ஸ்கி
## கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி குற்றச்சாட்டு




கிரீஸ் நாடாளுமன்ற கூட்டத்தில் உக்ரைன் அதிபர் செலென்ஸ்கி ஏப்ரல் 07 அன்று காணொளி மூலமாகச் சிறப்புரையாற்றினார். இந்தக் கூட்டத்தில் பங்கேற்க போவதில்லை என்று கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்றக் குழு முன்னரே அறிவித்திருந்தது. அறிவித்தபடியே இந்தக் கூட்டத்தில் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் இந்த முடிவுக்கான காரணங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். இது குறித்து கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சி அந்நாட்டு நாடாளுமன்ற தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் கூறப்பட்டுள்ளது பின்வருமாறு:

ஏப்ரல் 7 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் உக்ரைன் அதிபர் செலென்ஸ்கி பங்கேற்றுப் பேசுவதற்காக அவருக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பைப் பொறுத்தவரையில், கிரீஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற குழு அந்தச் சிறப்பு கூட்டத்தில் பங்கேற்கப் போவதில்லை என்பதை தெளிவுபடுத்துகிறோம்.

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள ஏகாதிபத்திய போர் மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத இந்த படையெடுப்பு ஆகியவற்றை கண்டிக்கிறோம். உக்ரைன் மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் அதே வேளையில், இவற்றையெல்லாம் அதிபர் செலென்ஸ்கிக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கருதிவிட முடியாது. அதிபர் செலென்ஸ்கியும் இந்தப் பிரச்சனையில் ஓர் அங்கமாக இருப்பதால், நடைபெறவுள்ள இந்த நாடாளுமன்ற சிறப்பு கூட்டதிற்கு அப்படி ( செலென்ஸ்கியை ஆதரிப்பது போன்ற ) ஒரு தோற்றம் ஏற்படக்கூடும்.

நடைபெற்று வரும் போருக்கும், உக்ரைன் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களுக்கும் காரணமான அமெரிக்க–நேட்டோ–ஐரோப்பிய ஒன்றிய முகாமுடன் அணி சேர்ந்துள்ள அரசாங்கத்தின் தலைமை பொறுப்பை அவர் வகித்து வருகிறார். 2014ஆம் ஆண்டில் ஐரோப்பிய அட்லாண்டிக் முகாமின் நேரடி தலையீட்டின்படி நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளுக்கு பிறகு அதிகாரத்திற்கு வந்த செலென்ஸ்கி அரசாங்கம், முந்தைய அரசாங்கங்கள் போலவே உக்ரைன் மக்களைத் துன்புறுத்தி வருகிறது.

* உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பறித்தது
* பாசிசத் தன்மை கொண்ட அசோவ் படைப்பிரிவை உக்ரைன் நாட்டு இராணுவம், காவல்துறை மற்றும் இதர அமைப்புகளில் ஊடுருவச் செய்தது,
* நாஜிக்களின் பிரச்சாரத்தை நியாயப்படுத்தி, இரண்டாவது உலகப் போரில் அவர்களுடன் இணைந்து கூட்டு சதியில் ஈடுபட்டவர்களை தேசிய வீரர்களாக முன்னிலைப்படுத்துவது
* உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் நடவடிக்கைகளை முடக்கியது
* கம்யூனிஸ்டுகளை கைது செய்து சிறையில் அடைப்பது
* 11 எதிர்க்கட்சிகளைத் தடை செய்தது
* உக்ரைனில் வாழும் கிரேக்கர்கள் உள்ளிட்ட சிறுபான்மைச் சமூகத்தவரின் உரிமைகளைப் பறிப்பது

ஆகியவற்றுக்கு செலென்ஸ்கி அரசு பொறுப்பாகும்.

கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி ஊழியர்கள் பலர் கடந்த காலங்களில் உக்ரைனுக்குச் சென்று, அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கும், சிறைப்படுத்தப்பட்ட கம்யூனிஸ்டுகளுக்கும் ஆதரவு தெரிவித்திருந்த காரணத்தால் அவர்களை உக்ரைன் அரசாங்கம் ஏற்க முடியாத நபர்கள் என்று பிரகடனப்படுத்தியது.

எனவே, உக்ரைன் அதிபர் செலென்ஸ்கி பங்கேற்று உரையாற்றவுள்ள நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சி பங்கேற்காது. இந்த முடிவானது, ஏகாதிபத்திய போட்டி மற்றும் போரில் உக்ரைனை சிக்க வைத்துள்ள செலென்ஸ்கி அரசாங்கத்திற்கு தெரிவிக்கும் எதிர்ப்பு மற்றும் ரஷ்ய படையெடுப்பை எதிர்கொண்டு வரும் உக்ரைன் மக்களுக்கு கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிக்கும் ஆதரவு ஆகியவற்றின் மாபெரும் குறியீடு ஆகும்.

ரஷ்ய அதிபர் புதின், அமெரிக்க அதிபர் ஜோ பிடன் ஆகியோர் நாடாளுமன்ற கூட்டத்தில் உரையாற்ற அழைக்கப்பட்டாலும், கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சி இந்த நிலைப்பாட்டையே அப்போதும் மேற்கொள்ளும்.

இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## நாசிசத்துடனான
# அமெரிக்காவின் வரலாற்று தொடர்பு

நடைபெற்று வரும் ரஷ்யஉக்ரைன் போரில், ரஷ்யாவுக்கு எதிரான சர்வதேச சமூகத்தின் பிரச்சாரம், பனிப்போர் காலத்தில் சோவியத் ஒன்றியம் மற்றும் கம்யூனிச சித்தாந்தத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரங்களையும் மிஞ்சுவதாக உள்ளது.

பொருளாதார தடைகள் மட்டுமின்றி, ரஷ்ய கலைஞர்கள் மற்றும் தடகள வீரர்கள் மீதும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள் இணைந்து ஆப்கானிஸ்தான், லிபியா மற்றும் ஈராக் மீது போர் தொடுத்த போது, ஜனநாயகவாதிகளும் சோஷலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் அமெரிக்கா மற்றும் நேட்டோ வுக்கு எதிராக பிரச்சாரம் செய்வதில் தவறிவிட்டனர். அந்நாடுகளில் உள்ள எண்ணெய் வளங்களைக் கைப்பற்ற வேண்டும் என்ற ஏகாதிபத்திய அபிலாஷைக்காக அவற்றின் மீது போர் தொடுக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போர் முடிவுற்றவுடன், நாஜிக்கள் தங்களின் அறிவு மற்றும் தீர்க்கமான நம்பிக்கையின் அடிப்படையில், சோவியத் ஒன்றியம் மற்றும் கம்யூனிசத்திற்கு எதிரான போராட்டத்தில் தங்களை முக்கிய கூட்டாளிகளாக இணைத்துக் கொண்டனர். உக்ரைனில் அமெரிக்க ஆதரவு பெற்ற செலன்ஸ்கி அரசாங்கத்தில் நவீன நாஜிக்கள் இடம்பெற்றுள்ளது நாசிசத்தை மீண்டும் ஒரு விவாதப் பொருளாக்கி உள்ளது.

அமெரிக்காவில் கம்யூனிச சித்தாந்த எதிர்ப்பும், இனவெறியும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்துள்ளது. இனவெறி மற்றும் வெள்ளை நிற மேலாதிக்கம் ஆகிய இரண்டும் நாசிசம் மற்றும் பாசிசத்தின் பொதுவான அடிப்படைகள் ஆகும். ஆப்பிரிக்கஅமெரிக்க மக்களின் ஒருமைப்பாடு மற்றும் கம்யூனிசத்திற்கு எதிரான போராட்டத்தில் பாசிசம் மற்றும் நாசிசத்துடன் அமெரிக்க முதலாளிகளும், நிறவெறியர்களும் இணைந்து நின்றதன் தொடர்ச்சியாகத்தான் தற்போது உக்ரைன் நாட்டின் நவீன நாஜிக்களுக்கான அமெரிக்க ஆதரவைப் புரிந்து கொள்ள முடிகிறது.

பனிப்போர் காலகட்டத்தில், பூமண்டலத்தின் மீது முதலாளித்துவ பொருளாதார அமைப்பைத் திணித்து, மேற்குலக வல்லரசு நாடுகளின் மேலாதிக்கத்தை நிறுவுவதே கம்யூனிச எதிர்ப்புப் போராட்டத்தின் ஒற்றை நோக்கமாகும். அதே நோக்கத்துடன், அதே வழிமுறைகளைப் பின்பற்றி நடைபெறும் கம்யூனிச எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு நீட்சியாகவே தற்போதைய ரஷ்ய எதிர்ப்பு பிரச்சாரமும் இருக்கிறது.

# கலை இலக்கியப் பூங்கா




– எம்.ஆர். ஆதவன்

## திரைப்பட விமர்சனம்

**‘ஹாட்ஸ்டாரி’ல் ஒரு நல்ல தமிழ்த் திரைப்படம் கிடைத்தது. படத்தின் பெயர் டாணாக்காரன். அசுரன் மற்றும் ஜெய் பீம் ஆகிய திரைப்படங்களின் மூலம் நமக்கு வில்லனாக அறிமுகமான தமிழ், இந்தப் படத்தை அற்புதமாக இயக்கியுள்ளார். இதன் மூலம், வெற்றிமாறனின் பள்ளியிலிருந்து வந்த ஒரு முதல் தர மாணவனாக தமிழைப் பார்க்க முடிகிறது.**

டாணாக்காரனின் கதைக்களம் பிஆர்எஸ் (Police Recruiting School) என்கிற காவல் பயிற்சிப் பள்ளி. காவலர்களாக தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி பெறப் புதிதாக வருபவர்களை எப்படி நடத்துகிறார்கள்; அவர்கள் பயிற்சி பெறும் சூழல் எப்படியானது; அவர்கள் படும் கஷ்டங்கள், சாதி,மற்றும் வயதுப் பிரிவினைகள் என்னென்ன, ஒரு நேர்மையான அதிகாரியாக வேண்டும் என்று நினைப்பவர்களை, இந்த அமைப்பு எப்படிப் பந்தாடும் என்பதை எளிமையாக எடுத்துரைக்கும் படம்தான் டாணாக்காரன்.

இதுவரை தமிழ்ப் படங்களில் நாம் காவல் துறையினரை, ஒரு கதாநாயகனாகவும் வில்லனாகவும் அல்லது படத்தின் முடிவில் வரும் ஒரு துணை நடிகராகவும் தான் பார்த்திருக்கிறோம். ஆனால் இந்தப் படம் ஒரு விதிவிலக்கு. இயக்குநர் தமிழ், பன்னிரண்டு வருடங்கள் காவல் துறையில் பணியாற்றியவர் என்பதால் தான், இவ்வளவு தெளிவாக இந்தப் படத்தை எடுக்க முடிந்திருக்க வேண்டும்.

சுற்றிச் சுற்றி காவலர் பயிற்சிப் பள்ளியை மட்டுமே காட்சிப் படுத்தி இருக்கிறார்கள். ஆனால் கொஞ்சம் கூட தொய்வே இல்லாமல் வெள்ள நீரோட்டம் போல அடுத்தடுத்த கட்டத்துக்கு இயல்பாக கதையை ஏந்திக் கொண்டு படம் பாய்கிறது.

ஒரு படத்தின் அடிப்படையான தேவை, கதாபாத்திரத்துக்கேற்ற நடிகர்கள் தேர்வு. அதை இந்தப் படம் முழுமையாக பூர்த்தி செய்துள்ளது. கதாநாயகனாக வரும் விக்ரம் பிரபு தனது திரை வாழ்வில் சிறந்த படம் ஒன்றைச் சந்திக்கிறார். லால், எம்.எஸ். பாஸ்கர், போஸ் ஆகியோரின் நடிப்பு கதைக்கு பெரும் உறு துணையாக இருந்தது.

இந்தியர்களை அடக்கி ஒடுக்குவதற்காகவே கடுகளவும் பரிவுணர்வின்றி வேட்டை மிருக மந்தையாய் காவல்துறையை ஆங்கிலேயர்கள் உருவாக்கினார்கள் என்பதைப் படத்தின் தொடக்கத்திலேயேசொல்லி விடுகிறார்கள். அது இப்பொழுது வரை எப்படித் தொடர்ந்து கொண்டிருக்கிறது என்று இயக்குநரின் குரலிலேயே ஒரு காட்சி வைக்கப்பட்டுள்ளது.

இது 98ல் நடக்கின்ற கதை. இதில் ஒரு வரலாற்று சம்பவத்தையும் சேர்த்து இருக்கிறார்கள். 1985ல் மாநில ஆட்சி கலைக்கப்பட்டதால், நியமனம் செய்த காவலர்களை, பயிற்சிக்கு அனுப்பாமலேயே விட்டுவிடுகின்றனர். எனவே அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு நடத்திப் போராடி 98ல் பயிற்சிக்கு சேர்கிறார்கள். வயது அதிகமான அவர்கள் பயிற்சியின் போது உள்நோக்கத்தோடு துன்புறுத்தப் படுவது சிறிதும் மிகையின்றி, ஆனால் ஆழமாகத் தைக்கும் வகையில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

படத்தின் பல காட்சிகள் நம்மை வாயடைக்கச் செய்துவிடுகின்றன. எடுத்துக் காட்டாக, எம்.எஸ். பாஸ்கர் ஒரு காட்சியில், நீண்ட காலமாக தான் காவலர் நிலையிலேயே பதவி உயர்வு இல்லாமல் வைக்கப்பட்டுள்ளதை முறையிட, அதற்கு அந்த அதிகாரி ‘நீ என்ன தவறு செய்தாய்’ எனக் கேட்க, “ஐயா, இன்ஸ்பெக்டர் கெட்ட வார்த்தையில் திட்டியதால் அடித்து விட்டேன்” என்று சொன்னதும், அந்த மேலதிகாரி ஆற்றும் எதிர்வினையைச் சொல்லலாம்.

“வேப்ப மரத்துக்குக்குப் பக்கத்தில் காவலுக்கு ஒரு போலீஸ் போட்டிருப்பது எதற்குத் தெரியுமா எனக் கேட்டு, அதற்கான காரணத்தை கதையாகச் சொல்வதாகட்டும், ஈஸ்வரமூர்த்தி ஒரு தனியாள் அல்ல, பார்ட் ஆஃப் த சிஸ்டம் என்று மட்டை கட்டுவதாகட்டும், மனதில் அழியாத பதிவை ஏற்படுத்தி விடும் அழுத்தமான காட்சிகள். படத்தில் வசனங்கள் மிக முக்கியமான பங்காற்றுகின்றன. போலீஸ் ஒரு சமூக மருத்துவர், ஞ்பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இந்த அரசியல்வாதிகளுக்கும் பிறந்ததுதான் இந்த சிஸ்டம்ஞ்., போலீசுக்கு சிங்கம், புலி, கரடி, நாய், நரி என்ற பல முகமூடிகளைத் தந்து விடுவார்கள், எந்த நேரத்தில் எதை மாட்டுவது என்று குழம்பக் கூடாதுஞ் என்பவை எல்லாம் கவனிக்கப்பட வேண்டியவை.

விக்ரம் பிரபுவுக்கு இது ஒரு சிறந்த திரைப்படம். மனதளவிலும், உடலளவிலும் வருத்தி எடுக்கும் இந்தக் கதாபாத்திரத்தை மிகவும் லாவகமாக சிறப்பாகச் செய்திருக்கிறார். காட்சியில் வந்ததுமே, பார்வையாளர்களுக்கு கோபத்தையும், அடுத்து என்ன செய்யப் போகிறானோ எனும் அச்சத்தையும் ஏற்படுத்தும் பயிற்றுனர் ஈஸ்வரமூர்த்தியாக, நடிகர் லால் மிரட்டுகிறார்.

**குடும்பம், மக்கள் மீதான அபிமானமும், பயிற்சியாளர்கள் மீது அக்கறையும் ஒருபுறம் இருந்தாலும், அவற்றை விட்டு விட்டு அக்கிரமங்களுக்கு உடன்பட வேண்டிய போலீஸ் சிஸ்டத்தின் பகுதியாக செயல்பட வேண்டிய தவிப்பையும், அதனால் ஏற்படும் மனச் சோர்வையும் எம்.எஸ். பாஸ்கர் நன்கு வெளிப்படுத்துகிறார். அதே உணர்வை காவல் அதிகாரிக்குரிய கம்பீரம் குறையாமல் போஸ் வெங்கட் காட்டி விடுகிறார்.**

“நாங்க எங்கடா போறது. நாங்க இந்த வேலைக்கு தாண்டா வந்தோம். லேட்டா ட்ரெய்னிங்குக்குக் கூப்பிட்டா அது எங்க தப்பாடா” என்று பூபாலன் பேசும் வசனமும் நடிப்பும் அற்புதம். பொது மேடைகளில் அரசியல் சமூக வாழ்வை கிண்டலடித்து நகைச்சுவையை சிதறவிடும் அவரை, இப்படி ஒரு பாத்திரத்தில் பார்க்க பிரமிப்பாக இருக்கிறது.

எந்தப் பின்புலமும் கூறப்படாத பயிற்சியாளராக, சாமானிய காதர்பாட்சாவாக பாவெல் படம் முழுக்க வருகிறார். தரப்பட்ட குறைந்த வாய்ப்பை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்கிறார். ‘சித்தப்பா’ பூபாலன், பயிற்சி என்ற பெயரில் வதைக்கப்பட்டு இறந்து போகும் போது, அவர் வெடித்து அழும் காட்சி அவ்வளவு எதார்த்தமானது.


நல்லவனாகவும் வல்லவனாகவும் உள்ள கதாநாயகனைச் சுற்றித்தான் இந்த கதையும் சுழல்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதே நேரத்தில் எல்லாவற்றுக்கும் ஒரு தனி மனிதன் தீர்வு கண்டுவிட முடியும் என்ற சூப்பர் ஹீரோவை படம் முன் நிறுத்தவில்லை. மாறாக சிஸ்டம் இவ்வாறு தான் இருக்கிறது, இதை உண்மையிலேயே மாற்ற வேண்டும் என்று நினைப்பவர்கள் தம்மை அந்நியப்படுத்திக் கொள்ளாமல், இதனூடேயே பயணித்து அதிகாரத்திற்கு வந்தாக வேண்டும் என்று நறுக்கென்று கூறுகிறது.

கதை நாயகனான விக்ரம் பிரபு பயிற்சிக்குப் பிறகு, ஓய்ந்து தூங்கும் போது காரல் மார்க்ஸ் எழுதிய புத்தகம் நெஞ்சின் மீது கவிழ்ந்த நிலையில் கிடப்பது, தனக்கு என்ன நேர்ந்தாலும் சாதியை பொது வெளியில் சொல்ல மாட்டேன் என்று அடம் பிடிப்பது, போராடுகிற மக்களின் பிரச்சனைகளை அறிந்து கொண்டு, அதைத் தீர்ப்பதற்கு தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளவும் காவல் துறை முயல வேண்டும் என சட்ட வகுப்பு எடுக்கும் காவல் அதிகாரி போதிப்பது, புரட்சிகர வாழ்த்துக்கள் என்று சொல்லி பயிற்சியை முடிப்பது என்று இந்த சிஸ்டத்தை எந்தப் பாதையில் சென்று முறியடிக்க வேண்டும் என்றும் படம் சொல்லிவிடுகிறது.

காக்கிச் சீருடை, வெள்ளை பனியன் மட்டுமே காஸ்ட்யூம், திரும்பத் திரும்ப மைதானத்தையே சுற்றிவர வேண்டும் என்ற பலவீனத்தையே பலமாக மாற்றிக்கொண்டு, வெவ்வேறுபட்ட கோணங்களில் அங்குலம் அங்குலமாக அளந்து தந்திருக்கிறது மாதேஷ் மாணிக்கத்தின் கேமரா. அதுபோலவே, படம் நெடுக பல முக்கியமான காட்சிகளை கதை வழங்க, நடிகர்கள் தமது நடிப்பால் சிறப்பாக வெளிப்படுத்தும்போது, அதை இன்னும் அதிக உயரத்துக்கு எடுத்துச் செல்கிறது ஜிப்ரானின் இசை.

மொத்தத்தில், மாறிவரும் தமிழ் சினிமாவை, அந்த மாற்றுப் பாதையில் இன்னும் கொஞ்சம் நகர்த்துகிறது இந்த டாணாக்காரன்.









JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 16.04.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# சமூக நீதி - சமத்துவம் - மாநில உரிமையைக் காப்பாற்ற அனைவரும் ஒன்றாக வேண்டும்

**“இந்தியாவின் பன்முகத்தன்மை கூட்டாட்சித் தத்துவம், ஜனநாயகம், மதச்சார்பின்மை, சமத்துவம், சகோதரத்துவம், மாநில உரிமைகள், கல்வி உரிமைகள் ஆகிய அனைத்தையும் காப்பாற்ற அரசியல் மன மாச்சரியங்களை விட்டு அனைவரும் ஒன்றாக வேண்டும்!” என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மார்க்சிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாட்டில் உரையாற்றினார்.**



## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

கேரள மாநிலம் கண்ணூரில் நடைபெற்று வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)இன் 23ஆவது அகில இந்திய மாநாட்டில் கலந்து கொண்டு, மாநாட்டையொட்டி நடக்கும் “ஒன்றிய மாநில உறவுகள்” என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் கலந்துகொண்டு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

எங்கள் மாநிலத்தில் சட்டமன்றக் கூட்டம் நடந்து வந்தாலும் இங்கு வருவதை இந்த மாநாட்டில் கலந்து கொள்வதை நான் எனது கடமையாகக் கருதுகிறேன்.

திராவிட இயக்கத்துக்கும் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்குமான நட்பு என்பது 80 ஆண்டுகள் பழமையானது.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை 1932ஆம் ஆண்டே தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டவர் தந்தை பெரியார் என்பது உங்களுக்குத் தெரியும்.

இன்னும் சொன்னால் லெனின் என்றும், ரஷ்யா என்றும் பிள்ளைகளுக்கு பேர் வைத்த இயக்கம் திராவிட இயக்கம்.

அனைத்துக்கும் மேலாக என்னுடைய பெயர் ஸ்டாலின். இதை விட உங்களுக்கும் எனக்குமான நட்புக்கு அடையாளம் தேவையில்லை.

மாநில சுயாட்சி, மதச்சார்பின்மை, சமத்துவம், சகோதரத்துவம், பெண்ணுரிமை ஆகியவற்றின் அடையாளமாக பினராயி விஜயன் அவர்கள் இருக்கிறார்கள். இந்த மாநாடு நடக்கும் கண்ணூர் என்பது வீரத்தின் விளைநிலம் என்று சொல்லக் கூடிய ஊர். தியாகத்தின் பூமியாக இருக்கிற ஊர். இந்த கண்ணூர் சிறை என்பது இந்தியாவின் தியாகிகளின் வீரச் சின்னமாகப் போற்றத்தக்கது. கம்யூனிஸ்ட் கட்சியில் அதிகமான தோழர்கள் உயிர் கொடுத்த இடம் இந்த கண்ணூர். 171 தோழர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளார்கள். இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திலும் பொதுவுடைமைப் புரட்சிக்கும் அடித்தளமான வீரர்கள் சிறை வைக்கப்பட்ட இடம்தான் இந்த கண்ணூர்.

கப்பலோட்டிய தமிழன் செக்கிழுத்தசெம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்கள் 1910 முதல் 1912 வரை இந்த கண்ணூர் சிறையில்தான் அடைக்கப்பட்டிருந்தார். அவரது 150ஆவது ஆண்டு விழாவினை தமிழகத்தில் கொண்டாடி வருகிறோம். அப்படிப்பட்ட மாபெரும் தியாகி சிறைவைக்கப்பட்ட ஊரில் இந்த மாநாடு நடக்கிறது.

சுகாதாரத்தில், சிறந்த நிர்வாகத்தில் இலவச சிகிச்சை வழங்குவதில், உணவுப் பாதுகாப்பில், கல்வித் தரத்தில் குழந்தைகள், பெண்கள் பாதுகாப்பில் எனப் பல்வேறு விருதுகளைப் பெற்று விருதுகளின் முதலமைச்சராக பினராயி விஜயன் அவர்கள் இருக்கிறார்கள்.

### 356வது பிரிவைப் பயன்படுத்தி கலைக்கப்பட்ட முதல் மாநிலம் கேரளா!

இந்த மாநாடு நடக்கும் இடம் கேரளா! ஒன்றிய மாநில உறவுகள் குறித்துப் பேச வந்திருக்கும் நான் தமிழ்நாடு! இதை விட மிகப்பெரிய ஒற்றுமை வேறு எதுவும் இருக்க முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம் 356ஆவது பிரிவைப் பயன்படுத்தி முதன் முதலில் கலைக்கப்பட்டது கேரளத்தில்தான். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசாங்கத்துக்கு 1959ஆம் ஆண்டு இது நடந்தது.

தமிழ்நாட்டிலும் மக்களின் பேராதரவோடு தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக்கழகத்தின் அரசாங்கம். 356ஆவது பிரிவைப் பயன்படுத்தி இரண்டு முறை கலைக்கப்பட்டது. 1976ஆம் ஆண்டு முதல்முறையும் 1991ஆம் ஆண்டு இரண்டாவது முறையும் இது நடந்தது. எனவே ஒன்றிய மாநில உறவுகளைப் பற்றி பேசுவதற்கான முழு உரிமையும் தமிழ்நாட்டுக்கும் உண்டு. கேரளாவுக்கும் உண்டு.

நான் ஏதோ தமிழ்நாட்டைக் காப்பதற்காக மட்டுமோ? பினராயி விஜயன் அவர்கள் கேரளாவைக் காப்பாற்றுவதற்கு மட்டுமோ? இந்த முழக்கத்தை முன்வைக்கவில்லை. இந்தியாவைக் காப்பாற்ற வேண்டுமானால் முதலில் மாநிலங்கள் காப்பாற்றப்பட வேண்டும். மாநிலங்கள் காப்பாற்றப்பட்டால் தான் இந்திய நாடு காப்பாற்றப்படும்.

ஆனால் சிலர் அரசியல் அரிச்சுவடியையே மாற்றுகிறார்கள். ‘ஒரு உடலுக்குள் பல உறுப்புகளாக ஒன்றிணைந்துள்ளோம்‘ என்று தேசியக் கவி ரவீந்திரநாத் தாகூர் பாடினார்.உறுப்புகள் இல்லாவிட்டால் உடலே இல்லை.

### வேறுபாடுகளுக்கிடையே ஒற்றுமையாக இருக்கிறோம்!

இந்தியாவில் எத்தனையோ மதங்கள், எத்தனையோ இனங்கள், எத்தனையோ மொழிகள், பண்பாடுகள், கலாச்சாரங்கள், பழக்க வழக்கங்கள், உடைகள், உணவுகள் இருக்கின்றன. இத்தனை வேறு பாடுகள், மாறுபாடுகள் இருந்தாலும் ஒற்றுமையாக இருக்கிறோம். வேற்றுமையில் ஒற்றுமைதான் நம்முடைய பண்பாடு ஆகும்.

ஆனால் இந்த வேற்றுமைகள் அனைத்தையும் அழித்து ஒற்றைத் தன்மையை உருவாக்க நினைக்கிறார்கள். ஒரே நாடு – ஒரே தேர்தல் – ஒரே உணவு – ஒரே தேர்வு – ஒரே கல்வி – ஒரே மதம் – ஒரே மொழி – ஒரே பண்பாடு – ஒரே கலாச்சாரம் என்று எல்லாவற்றையும் ஒரே, ஒரே, ஒரே என்று கோரஸ் பாடுகிறார்கள்.

இப்படியே போனால் ஒரே கட்சி என்று ஆகிவிடும். ஒரே கட்சியானால் ஒரே ஆள் என்றுஆகிவிடும். இதை விட ஆபத்தானது வேறு இருக்க முடியாது.

இத்தகைய எதேச்சாதிகாரத்துக்கு எதிரான குரல்தான் ‘மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி’ என்பது ஆகும். நமது அரசியலைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள் ஒற்றைத்தன்மை கொண்ட ஆட்சியை உருவாக்கவில்லை. அதிகாரங்களை மூன்றாகப் பிரித்து, மாநிலப் பட்டியல், ஒன்றியப் பட்டியல், ஒத்திசைவுப் பட்டியல் என்றுதான் வைத்தார்கள். பஞ்சாயத்து ராஜ் சட்டத்துக்குப் பிறகு உள்ளாட்சி அமைப்புகளுக்கு தனியாக உரிமைகள் தரப்பட்டன.

கிராமங்கள் வளர வேண்டும். கிராமங்கள் வளர்ந்தால் மாநிலம் வளரும். மாநிலங்கள் வளர்ந்தால் நாடு வளரும் என்று இதன் காரணமாகத்தான் நான் சொன்னேன். கிராமங்களை, மாநிலங்களை அழிக்க நினைப்பவர்களாக ஒன்றிய ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள். இது இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கே விரோதமானது. அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அதிகார வரம்பைக் கடந்து தனது அதிகார எல்லையை விரித்துச் செல்கிறது ஒன்றியஅரசு. இந்திய நாட்டை பிரிட்டிஷார் ஆண்டார்கள். அவர்கள் கூட இத்தகைய அதிகாரம் பொருந்திய ஒற்றைத் தன்மையை உருவாக்க நினைக்கவில்லை.

1919ஆம் ஆண்டு பிரிட்டிஷார் உருவாக்கிய சட்டத்திலேயே கூட “மாகாணங்கள் ஒன்றையொன்று ஒட்டி உறவாடும் தன்மையில் மாகாண நலனிலும் உள்ளூர் நலனிலும் அக்கறை கொண்ட தன்னாட்சி நடத்தவேண்டும். இவ்வகையான மாகாணங்கள் ஒருங்கிணைந்த அமைப்புக்கு மத்தியஅரசு தலைமை ஏற்க வேண்டும்” என்றுதான் சொல்லப்பட்டது.

**அதிகாரத்தைக் கையில் வைத்திருந்து அடக்கியாளும் எண்ணத்தோடு இருந்த ஆங்கில ஆட்சிகூட செய்யாததை, இன்றைய பா.ஜ.க. அரசு செய்கிறது என்று வெளிப்படையாகவே நான் குற்றம் சாட்டுகிறேன்.**

தனது தாயாருக்கு எழுதிய கடிதத்தில் பகத்சிங் எழுதினார்: “அம்மா!என்னுடைய நாடு ஒருநாள் விடுதலை அடையும் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை. ஆனால் வெள்ளைத் துரைமார்கள் விட்டுச் செல்லும் நாற்காலியில் பழுப்புநிறத் துரைமார்கள் உட்காரப் போவதைப் பார்க்கும்போதுதான் எனக்கு அச்சமாக இருக்கிறது. பழையமுறைகளை அழித்தாலொழிய எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை” என்று எழுதினார் பகத்சிங். அதுதான் இன்று நடக்கிறது.

மக்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்யும் மாநிலங்களை ஒன்றிய அரசை நோக்கிக் கையேந்த வைப்பதில்தான் ஒன்றிய ஆட்சியாளர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்றால் அது மக்களுக்குச் செய்யும் துரோகம் அல்லவா! அது மக்களைப் பழி வாங்குவது ஆகாதா!மாநிலங்களைப் பழிவாங்குவதாக நினைத்து மக்களைப் பழிவாங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.பாஜக ஆட்சிக்கு வந்ததும், மாநிலத்தின் நிதி உரிமையைப் பறிக்கும் வகையில் ஜிஎஸ்டி முறையைக் கொண்டு வந்தார்கள்.வரிவருவாயைப் பறித்தார்கள். இழப்பீடு தருவதாகச் சொன்னார்கள். இழப்பீடு முழுமையானதாக இல்லை. அந்த அரைகுறை இழப்பீடும் உரிய காலத்தில் வழங்கப்படவில்லை. மாநில அரசுக்கான நிதிகளை வழங்குவதே இல்லை.

தமிழ்நாட்டுக்கு மட்டும் 21ஆயிரம் கோடி ரூபாய் நிதிவர வேண்டி உள்ளது.இதையெல்லாம் நாம்கேட்க வேண்டிய இடம் திட்டக்குழு. திட்டக்குழு இருந்தால் தானே கேட்பீர்கள். அதையே கலைத்துவிடுகிறோம் என்றுகலைத்து விட்டார்கள். இதை எல்லாம் நாம் கேட்க வேண்டிய இடம் தேசிய வளர்ச்சிக் குழு. தேசிய வளர்ச்சிக்குழு இருந்தால்தானே கேட்பீர்கள். அதையே கலைத்துவிடுகிறோம் என்று கலைத்து விட்டார்கள்.

மாநிலப் பட்டியலில் இருக்கும் வேளாண்மைக்கும் அவர்களே சட்டம் போடுவார்கள். அது பற்றி விவாதம் நடத்தமாட்டார்கள். எந்தச் சட்டத்தையும் விவாதம் இல்லாமல் நிறைவேற்றிக் கொள்வார்கள்.

நாடாளுமன்றத்தில் எதற்கும் சிறப்பு விவாதம் நடத்துவது இல்லை. உரிய பதில் சொல்வது இல்லை.கிராமங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களைக் கூட தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற அதிகார வெறியோடு ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுகிறது.

பெரும்பான்மை இருக்கிறது என்பதற்காக அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். இவை அனைத்தையும் ஆளுநரை வைத்து அமல்படுத்திக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைச்சரவை இருக்கும்போது, ஆளுநரை வைத்துக் கொண்டு ஆட்சி செலுத்துவது என்பது அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமானது அல்லவா? இதனை ஒரு ஒன்றிய ஆட்சியே செய்யலாமா? எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலமாகத் தனியாட்சி நடத்துவதுதான் சட்டத்தின் ஆட்சியா? தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை இரண்டு முறை நிறைவேற்றிய நீட் விலக்கு மசோதாவை இன்னமும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் தமிழகத்திலுள்ள மாநில ஆளுநர் தாமதித்து வருகிறார். சட்டத்தின்படிதான் ஆளுநர்நடக்கிறாரா? நீட் மசோதா மட்டுமல்ல 11 மசோதாக்கள் ஆளுநர் வசம் இருக்கின்றன.அதற்கெல்லாம் அவர் அனுமதி தர மறுப்பதற்கு என்ன காரணம்? எட்டு கோடி மக்களை விட நியமன ஆளுநருக்கு அதிகாரம் வந்து விடுகிறதா? இப்படித்தான் பல மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் நடக்கிறது என்றால், இந்த நாட்டில் மக்களாட்சி நடக்கிறது என்று சொல்ல முடியுமா?

ஏழை எளிய, விளிம்பு நிலை மக்களின் உயர்வுக்காக திட்டங்கள் தீட்டினால், கல்வி உரிமையைப் பேசினால், நமது தென்னகத்தின் பண்பாட்டைப் பற்றி பேசினால், சமதர்மக் கொள்கைகளைப் பேசினால் உடனடியாக நமது செயல்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடுவார்கள். அடித்தட்டு மக்களின் உயர்வுக்காக உழைக்கும் தலைவர்கள் அனைவரும் இத்தகைய முட்டுக் கட்டைகளை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். சட்டமன்றத்தாலும், நீதிமன்றத்தாலும் மக்கள் மன்றத்தாலும் இதனை நாம் எதிர்கொள்ளத்தான் வேண்டும். எதிர்கொண்டு வருகிறோம்.இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக மாநிலங்களை ஒருங்கிணைத்து குழு அமைத்து நாம் போராடவேண்டும். தென்மாநில முதலமைச்சர்களின் குழு அமைக்கப்பட வேண்டும். அதன்பிறகு ஒட்டுமொத்தமாக மற்ற மாநில முதலமைச்சர்கள் கொண்ட குழுவையும் தனியாக அமைக்கவேண்டும். மாநிலங்கள் அதிக அதிகாரம் கொண்டவையாக ஆக்கப்பட இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதற்கு அரசியல் எல்லைகளைக் கடந்து நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

“தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி ஓரணியில் வைத்துள்ளோம். நாங்கள் அனைவரும் தேர்தல் காலத்தில் மட்டும், தொகுதிகளைப் பங்கிட்டுக் கொள்ளும் கட்சிகளாக இல்லாமல், கொள்கை உறவாக தொடர்ந்து வருகிறோம். அதுதான் எங்களது வெற்றிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. ஒற்றுமைதான் பலம் என்பதை அனைத்துக் கட்சிகளும் உணர வேண்டும். இந்தியாவைக் காப்பாற்ற அனைவரும் ஒன்று சேர்ந்தாக வேண்டும்.

இந்தியாவின் பன்முகத்தன்மை, கூட்டாட்சித் தத்துவம், ஜனநாயகம், மதச்சார்பின்மை, சமத்துவம், சகோதரத்துவம், மாநில உரிமைகள், கல்வி உரிமைகள் ஆகிய அனைத்தையும் காப்பாற்ற வேண்டுமானால் அரசியல் மன மாச்சரியங்களை விட்டு அனைவரும் ஒன்றாக வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்” என்று நான் குறிப்பிட்டேன். அதே வேண்டுகோளைத்தான் இங்கும் வைக்கிறேன்.

இவ்வாறு தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.